க. ஸ்ரீவரியா ஜெயலக்ஷ்மி
தரம் - 11
சமூகக் கல்வி
யா/வட மத்திய மகளிர் கல்லூரி.

# சமூகக் கல்வி

## 11 ஆம் ஆண்டு

புதிய பாடத்திட்டத்துக்கமைய எழுதப்பட்டது

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

| | |
|---|---|
| முதற்பதிப்பு | *1987* |
| இரண்டாம் பதிப்பு | *1988* |
| மூன்றாம் பதிப்பு | *1989* |
| நான்காம் பதிப்பு | *1990* |
| ஐந்தாம் பதிப்பு | *1991* |
| ஆறாம் பதிப்பு | *1992* |
| ஏழாம் பதிப்பு | *1993* |
| எட்டாம் பதிப்பு | *1994* |
| ஒன்பதாம் பதிப்பு | *1995* |
| பத்தாம் பதிப்பு | *1996* |


எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் அம்பலங்கொடை, வதுகெதர, இலக்கம் 341, அல்பிட்டிய றோட், மஹிந்த பிறின்டர்ஸ் (பிறைவேற்) லிமிரெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப் பட்டுள்ளது

96/ௐ/168(50,000)

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே — நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறைவான் மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலைமலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே — நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல்செறிதுணிவருளே — நம் சிறீலங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே — நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

தல்லறம் அறிவான்ற தலைமுறை
நம் நாட்டிலே தோன்றிட
நம் மரசளிக்கும் கொடையிது
நல்வழி காட்டும் நல்லொளியாம் !

உங்கள் பின்வரும்
உடன்பிறவிகள் பொருட்டும்
உணர்வுடன் இதைப்பேணல்
உங்கள் கடனெனக் கொள்வீர் !

அறிவை வளர்த்திடச் சமவுரிமை
அனைவர்க்கும் வழங்கும் நோக்கில்
அரசு தரும் ஏடிதை
அக மகிழ்ந்து ஏற்றிடுவீர் !

றிச்சட் பதிறண
கல்வி, உயர்கல்வி அமைச்சர்

# முன்னுரை

இது, திருத்தியமைக்கப்பட்ட பாடத்திட்டத்தின்படி 11 ஆம் ஆண்டுக்கென எழுதப்பட்ட சமூகக் கல்வி நூலாகும்.

இன்றைய உலகில் வாழுகின்ற ஒருவருக்கும் அபிவிருத்தி எனும் பதம் மிகவும் பழக்கமான ஒன்று. நாடுகளை, அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளெனவும், அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளெனவும் பிரித்துப் பேசிக் கொள்ளுறோம். எனவே அபிவிருத்தியெனப்படுவதன் பொருள் யாது? ஒரு நாடு அபிவிருத்தியடைவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் யாவை? என்பன பற்றி ஒவ்வொருவரும் நன்கு விளங்கிக்கொள்ளுவது முக்கியம். அபிவிருத்தி எனப்படும் எண்ணக்கரு பற்றியும் எமது நாட்டின் சமூகம், பொருளாதாரம் போன்ற பல்வேறு கூறுகளின் அபிவிருத்தி குறித்து மேற்கொள்ளப்படும் முயற்சிகள் பற்றியும் கூறும் இந்நூல் 11 ஆம் ஆண்டிற் கற்கும் மாணவருடைய கவனத்தை அவர்கள் வாழுகின்ற சமுதாயத்திலும் நாட்டிலும் நிகழுகின்ற விடயங்கள்பால் ஈர்க்கின்றது. சிரேஷ்ட இடைநிலைக் கல்வியின் இறுதி ஆண்டாகும், 11 ஆம் ஆண்டிலே மாணவர் இப்படியான அறிவைப் பெற்றுக் கொள்வது மிகவும் பொருத்தமான தென்பது எமது கருத்து.

புதிய பாடத்திட்டத்துக்கமைய எழுதப்பட்டு முதன் முறையாக வெளிவரும் இந்நூலில் பிழைகள் ஏதும் காணப்படின் அவற்றை எமக்கு அறிவிக்குமாறு கேட்டுக்கொள்வதுடன் அவற்றை நாம் மனமுவந்து ஏற்று அடுத்த பதிப்பில் உரிய திருத்தங்களைச் செய்து சிறந்த ஒரு நூலை மாணவர்களுக்கு வழங்குவோம் என்பதையும் கூற விரும்புகின்றோம்.

இந்நூலை எழுதி வெளியிடும் பணியில் எம்முடன் ஒத்துழைத்த அனைவருக்கும் எமது நன்றி.

**எம். கே. ஜே. ஏ. அல்விஸ்**
கல்வி வெளியீட்டு ஆணையாளரும்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
நாயகமும்.

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,
இசுருபாய, பத்தரமுல்லை,
1993.03.29

**ஆலோசனைக் குழு:**

எம். கே. ஜே. ஏ. அல்விஸ்
கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளரும்
பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாயகமும்
கே. பீ. எம். ஜயதிலக்க
மேலதிக ஆணையாளர், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

எம். எம். பிரேமரத்ன
கலாநிதி டீ. எஸ். வணசிங்க
கலாநிதி கே. தர்மசேன
லதிகா குணவர்த்தன
கலாநிதி டீ. அந்திராதி
கே. விக்ரமரத்ன
சரத்சந்திர ஜயவர்த்தன
றஞ்ஜினீ ஜயரவர்த்தன
ஈவா விக்ரமகே

**மூல நூல் எழுத்தாளர் குழு:**

ஜே. என். கே. ராஜபக்ஷ
றீரா பெரேரா
றஞ்ஜினீ சேனானாயக்க
பீடர் ஜயவர்த்தன
பத்மினீ என். பெரேரா
றஞ்ஜினீ ஜயவர்த்தன
ஆர். விஜேதாச

**மூல நூல் பதிப்பாசிரியர்குழு:**

எம். சீ. த. சில்வா
பத்மினீ என். பெரேரா
றஞ்ஜினீ சேனானாயக்க

**சிங்களத்திலிருந்து மொழிபெயர்த்துப் பதிப்பித்தவர்:**

ஐ. தம்பிமுத்து
இ. க. நி. சே. தரம் 1

**சித்திரம்**

சோமதாச விதான

**அட்டைப்படம்:**

சோமசிறி ஹேரத்

# பொருளடக்கம்


| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | வளங்கள் | 01 |
| 2. | பொருளாதார முறைகள் | 10 |
| 3. | அபிவிருத்தி | 16 |
| 4. | அபிவிருத்தியடைந்த நாடுகளினதும் அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளினதும் பின்னணி | 32 |
| 5. | அபிவிருத்தி சம்பந்தமான பிரச்சினைகள் | 37 |
| 6. | அபிவிருத்திக்குரிய வழிவகைகள் | 45 |
| 7. | சர்வதேச தாபனங்கள் | 53 |
| 8. | அபிவிருத்தியடைந்துவரும் இலங்கை | 71 |
| 9. | இலங்கையின் அபிவிருத்தியின் புதிய போக்கு | 86 |
| 10. | மனித உரிமைகளைப் பாதுகாத்தல் | 140 |

K. Luxy

க*லக்ஷ்மி

முதலாம் அத்தியாயம்

# வளங்கள்

மனித தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பயன்படும் பொருள்கள் அனைத்தும் வளங்களெனப்படும். இவற்றுட் சிலவற்றை மனிதன் தனது முயற்சி மூலம், தான் வாழும் சூழலிலிருந்து பெற்றுக் கொள்கின்றான்; சிலவற்றை முயற்சியின்றிச் சுலபமாகவும் இலவசமாகவும் பெற்றுக் கொள்கின்றான். உதாரணமாகச் சூரிய ஒளி, வளி முதலியன மனித முயற்சியின்றிக் கிடைக்கப்பெறும் பொருள்களாகும். கனிப் பொருளெண்ணெய், இரும்பு போன்றவற்றை மனிதன் முயற்சி செய்தே பெற்றுக்கொள்ளுகின்றான். பொதுவாக, சூழலிற் காணப்படும் எப்பொருளையும் வளமாக மாற்றி நுகரும் ஆற்றல் மனிதனுக்கேயுண்டு. மனிதன் தனது அறிவு, அனுபவம், ஆற்றல் ஆகியவற்றைப் பயன்படுத்தியே சூழலிற் காணப்படும் பொருள்களை இவ்வாறு வளங்களாக மாற்றிக்கொள்கின்றான். எனவே, வளங்களுக்குள் மனிதவளம் மிக முக்கியமானது என்பது வெளிப்படை.

இப்புவியே மனிதனுடைய வாழிடம். புவியானது ஏறக்குறைய 510 மில்லியன் சதுரக் கிலோமீற்றர் வரை பரந்த பரப்பினை உடையதெனினும் அதில் உயிர் வாழ்வதற்குகந்த பகுதி சிறியதேயாம். தரையின் பெரும்பகுதி வனாந்தரங்களாகவும், மலைப் பிரதேசங்களாகவும், வருடம் முழுவதும் பனிக்கட்டிப் படலங்களினால் மூடப்படும் கடுங்குளிர்ப் பிரதேசங்களாகவும் இருப்பதனால் அப்பகுதிகளிற் குடியிருப்பதேனும், அவற்றைப் பிறவழிகளிற் பயன்படுத்துதலேனும் கடினம். புவிமேற் பரப்பில் 71% சமுத்திரப் பரப்பென்பதை நாம் ஏலவே கற்றுள்ளோம். இதிலும் மிகக் குறைந்த ஒரு பகுதியே எமக்குப் பயன்படுகின்றது. இவ்வாறே, புவியைச் சூழ்ந்துள்ள வளிமண்டலத்திலும் புவியிலிருந்து 8 கிலோ மீற்றர் வரை உயரவுள்ள பகுதியே உயிர்களுக்கு ஏற்ற சூழலாகக் காணப்படுகின்றது.

வளங்களைப் பௌதிக (இயற்கை) வளங்களெனவும் மனித வளங்களெனவும் இரண்டு முக்கியமான பகுதிகளாகப் பிரிக்கலாம். பௌதிகச் சூழல் பல கூறுகளைக் கொண்டுள்ளது. நீர், நிலம், வளி ஆகியன அதனுளடங்கும். இவை ஒவ்வொன்றும் பல அமிசங்களையுடையன.

(அ) நிலம் — கனியங்கள், தாதுக்கள், தாவரங்கள், வனவிலங்குகள்.

(ஆ) நீர் — மேற்பரப்பு நீர், பூமிக்கு அடியிலுள்ள நீர். அவ்வாறே நீரில் வாழும் உயிரினங்கள், கனிப்பொருட்படிவுகள் முதலியன.

(இ) வளிக்கோளம் — வளியும், சூரிய ஒளியும்.

மனிதனும் மனிதனுக்குள்ள வல்லமைகளும் மனித வளங்களுளடங்கும். ஆயினும், தேசிய உற்பத்திக்குப் பங்களிப்புச் செய்யாத ஒரு சனத்தொகையினை வளமெனக் கொள்ள முடியாது. பல வகைப்பட்ட சூழல்களில் வாழும் மனிதன் அவனுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய முயலும் போது உடலை அல்லது மூளையைக் கொண்டு உழைக்கவேண்டி இருக்கின்றது. உதாரணமாக, தொழிலாளி ஒருவன், உடலுழைப்பு மூலம் பொருள்களை உற்பத்தி செய்கின்றான்; எந்திரி ஒருவன் மூளையைப் பாவித்து வேலை செய்கின்றான்; இந்த இருவரும் ஏதோ ஒரு தொழிலைச் செய்கின்றனர். ஒரு நாட்டின் தொழிலாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுடைய தொகையை ஓரளவுக்குக் கணக்கிட்டுக் கொள்ளலாம். ஒரு நாட்டு மக்கள் மத்தியிலே தங்கியிருப்போர் (சாதாரணமாக 14 வயதுக்குக் குறைந்தவர்களும், 64 வயதுக்கு மேற்பட்டவர்களும்) பாடசாலைப் பிள்ளைகள், அங்கவீனர்கள், தம் விருப்பின்படி தொழில் செய்யாதோர் ஆகியோர் தவிர ஏனையோர் தொழிலாளர்களாவார்கள். இவர்கள் ஒரே தன்மை உடையவர்களாகக் காணப்படுவதில்லை. எனவே உற்பத்தித் திறனும் ஆளுக்கு ஆள் வேறுபடும். ஆளுக்கு ஆள் வேறுபடுவது போல அது பிரதேசத்துக்குப் பிரதேசமும் வேறுபடுகின்றது. இந்த உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்குப் பயிற்சி அவசியம். கல்வி, நவீன தொழினுட்பம், தொழினுணுக்க முறை, சமுதாயத்துப் பழக்க வழக்கங்கள், உளப்பாங்கு ஆகியவற்றின் மூலம் இந்தப் பயிற்சியை வழங்கலாம்.

மனித வளங்கள் பற்றி ஆராயும்போது தொழில் பற்றி மாத்திரமன்றி முயற்சி பற்றியும் ஆராய்தல் முக்கியமாகும். முயற்சி யென்பது உற்பத்திக் காரணிகளை அல்லது வளங்கள் எல்லாவற்றையும் வழங்கிப் பொருள்களை உற்பத்தி செய்வதைக் குறிக்கும்.

மனித உழைப்பின்பாற்பட்ட வினையாண்மை மூலம் மூலதனத்தைப் பெற்றுக் கொள்ளலாம். (எதிர்கால உற்பத்தியாளருக்குப் பயன்படக்கூடும் மூலதனம் மனிதனாலேயே ஆக்கப்படுகின்றது.) பணம், இயந்திர சாதனங்கள, கருவிகள், கட்டடங்கள், மூலப்பொருள்கள் முதலியன மூலதனத்தைச் சேர்ந்தனவாகும்.

பொருள்களும், சேவைகளும், ஒரு பரந்த அடிப்படையிலே பொருளாதார வளங்களாகக் கருதப்படுகின்றன. யாதாயினும் ஒரு வளத்துடன் மனிதக் காரணி சேருவதனால் பொருளாதார வளம் உண்டாகின்றது. மனிதத் தேவைகளுக்கு வேண்டிய பொருள்களை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படக்கூடிய அனைத்தும் பொருளாதார வளங்களாகும். மனித தேவைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது பொருளாதார வளங்களின் பற்றாக்குறை எமக்குப் புலனாகும். இது பொருளாதார வளங்களிலே காணப்படும் ஓர் அம்சமாகும். அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளில் மாத்திரமன்றி அபிவிருத்தி அடைந்துள்ள நாடுகளிலும் வளங்கள் பற்றாக்குறையாக இருப்பதை நாம் பொதுவாகக் காணலாம்.

மனிதனுடைய அறிவு, தேவைகள், ஆற்றல்கள், ஆகிவற்றைப் பொறுத்தே பௌதிகச் சூழலிலிருந்து பொருளாதார வளங்கள் உருவாகின்றன. தொழில்நுட்ப அறிவின் வளர்ச்சியைக் கொண்டு, சற்றேனும் உதவாத பௌதிகச் சூழல்களைக் கூட மனிதன் தனது தேவைகளைப் பூர்த்தி செய்தற் பொருட்டு மாற்றியமைத்துப் பயன்படுத்துகின்றான். அவ்வாறே, புதிய வளங்களைக் கண்டுபிடிப்பதிலும் மனிதன் வெற்றி கண்டுள்ளான். அமேசன் வடிநிலத்தில் வாழும் இந்தியர் ஒருவர் தமக்குத் தெவையான உணவைப் பெற்றுக் கொள்ளுவதற்குச் செய்ய வேண்டிய முதலீடு (உற்பத்திச் செலவு) உடல்வலு, தொழில், காலம், ஓய்வு என்பனவாகும். ஆயின் யப்பான், பிரித்தானியா போன்ற நாடுகளிலே வசிக்கின்ற ஒருவர் செய்ய வேண்டிய முதலீடு பெரும்பாலும் பணமாகும். எந்த ஒரு சமுதாயத்தில் வாழுகின்ற மனிதனும் குறைந்த முதலீட்டிலிருந்து கூடிய இலாபத்தைப் பெற்றுக் கொள்ளுதற்கே முயலுகின்றான்.

## வளங்களின் பற்றாக்குறை

இன்றைய உலகச் சனத்தொகை (1986)4600 மில்லியனுக்கும் அதிகமாகும். இது ஆண்டு தோறும் 1.7% அதிகரித்துக் கொண்டு வருகின்றது. இப்படியாகப் பெருகிக் கொண்டு வருகின்ற சனத்தொகையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இயற்கை வளங்கள் மேலும் மேலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால் இன்று மிகவும் சுலபமாகக் கிடைக்கின்ற சில கனிய வளங்களுக்கு வருங்காலத்திலே பெரும் தட்டுப்பாடு ஏற்படக்கூடும். சனத் தொகைப் பெருக்கத்துடன் ஒப்பிட்டு நோக்கும் போது இந்த இயற்கை வளங்களின் பற்றாக்குறை எமக்கு நன்கு புலனாகும்.

தொழினுட்ப, விஞ்ஞான வளர்ச்சிகளின் விளைவாக மனிதன் இயற்கையை ஆராய்வதற்கும் அதனைக் கட்டுப் படுத்துவதற்கும் முற்பட்டு வருகின்றான். இந்த முயற்சியின் விளைவாகவே பூமியிலுள்ள கனியவளங்கள் தோண்டி யெடுக் கப்படுகின்றன. ஆரம்பத்திலே மனிதன் தனக்குத் தேவையான எளிய உபகரணங்களை உற்பத்தி செய்வதற்கே கனிய வளங்களை உபயோகித்தான். காலப்போக்கிற் பல்வேறு கனியப் பொருள்களைக் கலந்து பல்வேறு உலோகப் பொருள்களை உற்பத்தி செய்யத் தொடங்கினான். செம்மையும் வெள்ளீயத்தையும் கலந்து உற்பத்தி செய்யப்பட்ட உலோகப் பொருள்கள் இதற்கு உதாரணங்களாகும். 18 ஆம் நூற்றாண்டிலே ஆரம்பித்த கைத்தொழிற் புரட்சியையடுத்துக் கனிய வளங்களின் பிரயோகம் விரைவாக அதிகரித்தது. இற்றைவரை மனிதன் கண்டு பிடித்துள்ள ஆயிரக்கணக்கான கனிய வகைகள் பலவகையான பொருள்களை உற்பத்தி செய்வதற்கும் விண்வெளிப் பயணங்கள் போன்ற முயற்சிகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றன.


கனிய வகைகளின் முக்கியத்துவம் அவற்றின் பிரயோகத் தைப் பொறுத்து வேறுபடும். இதுவரை கண்டு பிடிக்கப் பட்டுள்ள கனிய வகைகளுள் இரும்பு, செம்பு, அலுமினியம், தங்கம், வெள்ளி போன்ற உலோக வகைகளும் நிலக்கரி, கந்தகம், உப்புப் போன்ற உலோகமல்லாத கனிய வகைகளும் பெற்றோலியம், வாயு போன்ற எரிபொருள் வகைகளும் முக்கியமானவையாகும்.

தொழில்நுட்ப அபிவிருத்தி காரணமாக எரிபொருள் பல்வேறு வழிகளிலே பயன்படுத்தப்படுகின்றது. உதாரணமாகப் புகையிரம், ஆகாய விமானம், கப்பல் போன்ற வாகனங்களை

ஓட்டுவதற்கும், பல்வேறு வகையான இயந்திர சாதனங்களை இயக்குவதற்கும், இரும்பை உருக்குவதற்கும் எரிபொருள் பயன்படுத்தப்படுகின்றது. இவற்றைவிட, சில உற்பத்திக் கைத் தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருளான தார் போன்ற பொருள்களை உற்பத்தி செய்வதற்கும் செயற்கைத் துணி வகைகள், வாசனைப் பொருள்கள், மெழுகுவகைகள், கிருமி கொல்லிகள் முதலியவற்றை உற்பத்தி செய்வதற்கும் எரி பொருள் பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாறு எரிபொருள் பயன்படுத்தப்பட்டு வருவதனால், கடந்த காலங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது வலு நுகர்வு தற்போது பெரிதும் அதிகரித்துள்ளது என்பது தெளிவாகும். உலகச் சத்தி நுகர்வின் 45% கனிப்பொருளெண்ணெய்; 25% நிலக்கரி; வாயு, சூரிய சத்தி, அணுச் சத்தி முதலியன 30%. உலகச் சத்தி நுகர்வு ஆண்டுதோறும் 7% வரையில் அதிகரித்து வருகின்றது. இதன்படி ஒவ்வொரு பத்தாண்டு காலத்திலும் வலு நுகர்வு இரு மடங்காகின்றது.

வலு நெருக்கடியை அடுத்து, எரி பொருள்களுக்குப் பதிலாகப் பிற பொருள்களைக் கண்டுபிடிப்பதிலே மனிதன் கவனஞ் செலுத்தினான். இதன் விளைவாக நில வெப்பம், அலைச் சத்தி (உயரலை, தாழலை), சூரிய சத்தி போன்று இதுவரை மனிதனுடைய கவனத்தைப் பெறாதிருந்த திசைகளிலே மனிதன் நம்பிக்கை கொண்டான்.

அதிகம் பயன்படுத்தப்படுவதனால் கனிய வளம் குறைந்து கொண்டு வருகின்றது. அவ்வாறே மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்படுவதனால் பூமியும் அதன் செழிப்பை இழக்கக் கூடும். பூமியிலே பயிர் செய்யக்கூடிய முழு நிலப்பரப்பில் ஏறக்குறைய அரைப் பங்கு நிலம் செய்கை பண்ணப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இன்றைய சனப்பெருக்க வேகத்தின்படி உலகச் சனத்தொகை இருமடங்காவதற்கு இன்னும் ஏறக்குறைய 41 ஆண்டுகள் மாத்திரமே செல்லும். எனவே இப்போது பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் நிலப் பகுதி முழுவதையும் உணவுப் பயிர்செய்கைக்கு மாத்திரமே பயன்படுத்தினாலும் பெருகிவரும் சனத்தொகை முழுவதற்கும் உணவளித்துப் பேணுவது முடியாத காரியமாகும். இதனைவிட, பெருகிவரும் சனத்தொகைக்குத் தேவையான நகர அமைப்பு, கட்டடங்கள், சுரங்கக் கைத்தொழில் போன்ற செயற்பாடுகள் காரணமாகப் பயிரிடப்படக்கூடிய நிலப்பரப்பு நாளுக்கு நாள் குறைந்து கொண்டுவருகின்றது.




உரு. 1.1 முக்கியமான கனிய வளங்களின் பரம்பல்.

இதனால் எழுந்த அடிப்படைப் பிரச்சினையான உணவு பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பொருட்டு அண்மைக் காலத்தில், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலும் இரசாயனப் பசளை வகைகளைப் பிரயோகித்தல், கிருமிகொல்லி, களைக்கொல்லி ஆகிய மருந்து வகைகளைப் பிரயோகித்தல், நீர்க் கட்டுப்பாட்டு, பலமுறை பயிர்களைப் பயிரிடத் தக்கமுறையில் குறுகிய காலத்தினுள் அதிக விளைச்சலைத் தரக்கூடியதாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள விதை வகைகளைப் பயன்படுத்தல் போன்ற நுட்பமான விவசாய உத்திகளைக் கையாண்டு, குறைந்த நிலப்பரப்பிலிருந்து கூடிய பலனைப் பெற்றுக் கொள்ளுவதற்கு மனிதன் முயலுகின்றான்.

நீரானது எமது சூழலிற் பெரிதும் காணப்படுகின்ற ஒரு வளம். புவியின் மேற்பரப்பில் 71% வரை நீர்க்கண்டமாகும். இந்த நீர்க்கண்டத்தின் ஒரு சிறிய பகுதியே இப்போது பயன்படுத்தப்படுகின்றது. மனிதன் ஆறுகள், ஏரிகள், குளங் குட்டைகள் ஆகியவற்றின் நீரையும் தரைக் கீழ் நீரையுமே பெரும்பாலும் பயன்படுத்துகின்றான்.

## வளங்களின் அசமநிலை

இயற்கை வளங்கள் எல்லா நாடுகளிலும் ஒரேயளவிற் காணப்படுவதில்லை என்பது நாம் எல்லோரும் அறிந்துள்ள ஓர் உண்மை. இது வளங்களின் அசமநிலை எனப்படும். நிலம், மண், இயற்கைத் தாவரம், வன விலங்குகள் ஆகியனவும் மனிதனுக்கு முக்கியமான இயற்கை வளங்கலாகும். மனிதனுடைய பல்வேறு செயற்பாடுகள் காரணமாக இந்த வளமும் குறைந்து கொண்டு வருகின்றது. அத்துடன் சூழலின் சமநிலை அற்றுப் போவதற்கும் அது ஒரு காரணமாகுமெனக் கூறலாம்.

ஒரு நாட்டிலே காணப்படும் இயற்கை வளம் அதன் அபிவிருத்தியிலே செல்வாக்குடைய முக்கியான ஒரு காரணியாகும். வளங்களின் முக்கியத்துவம் காலத்துக்குக் காலமும் பிரதேசத்துக்குப் பிரதேசமும் வேறுபடுகின்றது. உதாரணமாகக் கனிப்பொருளெண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டமையினால் நிலக்கரியின் முக்கியத்துவம் பெரிதும் குறைந்தது. ஆயினும் 1970 களில் உண்டான எண்ணெய் நெருக்கடி காரணமாக நிலக்கரியின் வர்த்தகப் பெறுமானம் அதிகரித்துக் கொண்டு வருகின்றது.


இந்தியாவிலுள்ள கங்கை நதிப் பள்ளத்தாக்கு விவசாயத்தினைப் பொறுத்த மட்டிலே அபிவிருத்தி அடைந்துள்ள ஒரு பிரதேசமாக இருப்பதற்குரிய காரணங்கள் அங்குள்ள செழிப்பான மண், நீர் வளம், தட்டை நிலம் என்பனவாகும். ஆயினும் மத்திய கிழக்கு நாடுகளின் காலநிலை ஒவ்வாததாக உள்ளபோதிலும் அங்கு காணப்படும் கனிப்பொருவெண்ணெய் காரணமாக அந்நாடுகள் அண்மைக் காலத்திற் பொருளாதாரத்துறையிற் பெரும் அபிவிருத்தியடைந்துள்ளன. அவ்வாறே வட அமெரிக்காவிலே பஞ்ச வாவிகள் காணப்படும் பிரதேசம் ஒரு கைத்தொழிற் பிரதேசமாக மாறியமைக்குரிய ஒரு காரணம் அச்சூழலிற் காணப்படும் கனிய வளங்களாகும். சகரா, அட்டகாமா போன்ற வெப்பப் பாலைவனங்களிலும், ஆட்டிக்குப் பகுதிகளிலும் சனத்தொகை குறைவாகக் காணப்படுவதற்குரிய காரணம் அப்பகுதிகளின் பௌதிகச் சூழல் மனிதன் வசிப்பதற்கு ஒவ்வாதது என்பதாகும்.

ஒரு நாட்டின் இயற்கை வளங்களின் பற்றாக்குறையினால் அந்நாட்டின் அபிவிருத்தி தடைப்படாத சந்தர்ப்பங்களுமுள. யப்பானை இதற்குரிய ஒரு சிறந்த உதாரணமாகக் கூறலாம். அங்கே நிலக்கரி, கனிப்பொருளெண்ணெய் முதலியன வற்றுக்குத் தட்டுப்பாடு உண்டெனினும் அந்த நாடு மனித வளத்தின் அபிவிருத்தி மூலம் சிறந்த கைத்தொழில் நாடாகத் திகழுகின்றது.

பௌசையில் எரிபொருள்களையும் மிகவும் சிக்கனமாகவே பயன்படுத்த வேண்டியுள்ளது. இவை உருவாவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகள் செல்லும் என்பது ஒரு காரணம். மனிதனால் அவற்றை உற்பத்தி செய்துகொள்ள முடியாது என்பது மற்றொரு காரணம். அவ்வாறே எரிபொருள்கள் விரைவாக அழிந்து போவதைத் தவிர்க்க வேண்டுமானால் சத்தியை உற்பத்தி செய்வதற்கு உதவும் கடல் அலைகள், காற்று, சூரிய வெப்பம் போன்ற வளங்களில் நாம் அதிக கவனம் செலுத்தல் வேண்டும். அவ்வாறு செய்யின் பௌசையில் எரிபொருள்களைப் பயன்படுத்தி அத்தியாவசியமான பொருள்களை மாத்திரம் உற்பத்தி செய்துகொண்டு ஏனைய கருமங்களுக்கு மாற்றீடான வலு வளத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

ஏனைய கனிய வகைகளையுமே முடியுமானவரை சிக்கனமாகப் பயன்படுத்தல் வேண்டும். உதாரணமாக, ஒரு முறை பயன்படுத்தியபின்னர் தள்ளப்படும் இரும்பை மீண்டும் பயன்படுத்துவதன் மூலம் இரும்புத்தாது அகழ்தலைக் குறைத்துக் கொள்ளலாம். இன்றுமே சில அபிவிருத்தி அடைந்த நாடுகள் பாரக் கைத்தொழிலுக்குரிய மூலப் பொருளாகப் பழைய இரும்பினை (கழிக்கப்பட்ட இரும்பினை) பயன்படுத்துகின்றன.

மீண்டும் மீண்டும் பயிரிடப்படக்கூடிய வளமான காடுமே கட்டுப்பாடின்றிப் பயன்படுத்தப்படுமேயானால் அதுவும் அதனுடன் சம்பந்தப்பட்ட உயிரினங்கள், மண், நீர் வளம், காலநிலை முதலியனவும் பாதிக்கப்படும். தற்போதுள்ள வளங்கள் போதாமையினால் மனிதன் தனது புத்தியைக் கொண்டு புதிய வளங்களைக் கண்டு பிடித்துப் பயன் படுத்துகின்றான். இதனால் வளங்கள் குன்றிப் போகின்றன. எனவே இருக்கின்ற மட்டான வளங்களைப் பேணிப்பாதுகாத்துச் சிக்கனமாகப் பயன்படுத்துவது எமது கடமையாகும்.



## இரண்டாம் அத்தியாயம்

# பொருளாதார முறைகள்

மனிதன் தான் வசதியாக வாழும் பொருட்டுப் பௌதிக வளங்களையும், மனித வளங்களையும் பயன்படுத்துகின்றான். பொருளாதார முறையென்பது ஒரு நாட்டு மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்தற்பொருட்டு அந்நாட்டு வளங்களைப் பயன்படுத்துதற்கு வகுக்கப்படும் ஓர் ஒழுங்கினைக் குறிக்கும். மனித சமுதாயங்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் எல்லாம் பொதுவிலே ஒத்தனவாக இருப்பினும் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதற்கு ஒவ்வொரு சமுதாயமும் கைக்கொள்ளும் வழிவகைகளைப் பொறுத்துப் பொருளாதார முறைகள் வேறுபடும்.

பண்டைய சமுதாயங்களிற் போலன்றி இன்றைய சமுதாயங்களிலே தேவைகள் பல்கிப் பெருகியுள்ளன. இத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பலவகையான சேவைகளும் பொருள்களும் அவசியம். இப்பொருள்களையும் சேவைகளையும் மூலதனம், மனித உழைப்பு, தொழினுட்பம் போன்ற காரணிகளைப் பயன்படுத்திப் பெற்றுக்கொள்ளுகிறோம். மிகவும் சாதாரணமான சில பொருள்களே தேவைப்பட்ட ஆதிகாலச் சமுதாயங்களிலே பண்டமாற்றுமுறை என்பதன் மூலமே மக்கள் கொடுக்கல் வாங்கல்களைச் செய்து வந்தனர். ஆயின் மனித தேவைகள் பல்கிப் பெருகியுதுடன் கொடுக்கல் வாங்கல் செய்வதற்குரிய ஒரு பொதுவான மாற்று ஊடகமாகப் பணம் புழக்கத்துக்கு வந்தது. பொருள்களையும், சேவைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தேவையான பணம் மூலதன மெனப்படும். இப்பணத்தைவிட இயந்திர சாதனங்கள், கருவிகள், ஆயுதங்கள், தொழிற்சாலைகள், கட்டடங்கள், போன்றனவும் மூலதனத்துள் அடங்குவனவாகப் பொதுவாகக் கருதப்

படுகின்றது. (மூலதன முதலீட்டு மூலம் இலாபத்தினையும் வட்டியையும் பெற்றுக் கொள்ளலாம்.) மூலதனம் பல வழிகளிலே முதலீடு செய்யப்படுகின்றது. இலாபமாகக் கிடைக்கும் மூலதனம் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்குப் பயன் படுத்தப் படுகின்றது. இதுமாத்திரமன்றிச் சிறு தொகைப் பணத்தை உடையவர்களும், நிதித்தாபனங்கள் மூலம் முதலீட்டாளர் களுக்குக் கடன் கொடுத்து வட்டி பெறுகின்றனர்.

இவ்வாறு நோக்குமிடத்து, எந்தவொரு பொருளாதார முறைக்கும் முக்கியமான சில அமிசங்கள் இருக்குமென்பது புலனாகும். அவையாவன பொருளுற்பத்தி, மனிதவுழைப்பு, பண்டமாற்று முறை, மூலதனம், இலாபம், வட்டி ஆகியனவாம். ஒவ்வொரு பொருளாதார முறையிலும் இவை ஒவ்வொரு வழிகளிலே நிருவகிக்கப்படும்.

இன்றைய உலகில் காணப்படும் பொருளாதார முறைகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். முதலாளித்துவப் பொரு ளாதார முறை. சமவுடைமைப் பொருளாதார முறை, கலப் புப் பொருளாதார முறை யென்பனவே அம்மூன்றுமாம். உற் பத்தி நடவடிக்கைகள் யாரால் நிருவாகிக்கப்படுகின்றன ? உற் பத்திக் காரணிகள் யார் வசம் இருக்கின்றன ? என்பனவற்றைப் பொறுத்து இம்மூன்று முறைகளும் ஒன்றுக்கொன்று வேறுபடும்.

## முதலாளித்துவப் பொருளாதார முறை

முதலாளித்துவப் பொருளாதார முறையிலே, முக்கியமான முதலீட்டு மூலம் தனியாருக்குச் சொந்தமாக இருக்கும். உற் பத்திக் காரணிகளை உடையவர்கள் தம்மிடமுள்ள பணத்தை முதலீடு செய்து உற்பத்தி வேலைகளைக் கண்காணிக்கின்றனர். இவர்கள் தாம் உற்பத்தி செய்யும் பொருள்களை விற்று இலா மீட்டுகின்றனர். இவர்கள், பொதுவாகச் சமுதாயத்துக்கு அத்தியாவசியமான பொருள்களையன்றித் தமக்கு அதிக இலாபத்தைக் கொடுக்கக் கூடிய பொருள்களை உற்பத்தி செய்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பார்கள்.

எந்தவொரு பொருளாதார முறையிலும் உற்பத்தி செய்யப் பட வேண்டிய பொருள்கள் யாவை? அவை எவ்வாறு உற் பத்தி செய்யப்பட்ட வேண்டும்? எவ்வளவு உற்பத்தி செய் யப்பட வேண்டும்? என்ற விடயங்கள் பற்றிய தீர்மானங்கள் முக்கியமானவையாகும். முதலாளித்துவப் பொருளாதார முறையில் இத்தீர்மானங்கள் உற்பத்தி வேலைகளைக் கண்காணிக்கும் தனியாரால் மேற்கொள்ளப்படும். இவை பற்றித் தீர்மானஞ் செய்யும்போது, குறிக்கப்பட்ட பொருள் களுக்குச் சந்தையிலுள்ள கேள்வி, விலைகள் ஆகியன கவனத் திற் கொள்ளப்படும். ஒரு பொருளுக்குச் சந்தையிலே அதிக கேள்வி இருக்குமாயின் அதன் விலை உயர்வாக இருக்கும். கேள்வி குறைந்த பொருளின் விலை குறைவாக இருக்கும். இதன்படி, கேள்வியும் விலையும் உயர்வாகவுள்ள பொருள்களை உற்பத்தி செய்வதற்கு அதிக மூலதனம் தேவைப்படும் என்பதும்; கேள்வியும், விலையும் குறைந்த பொருள்களை உற்பத்தி செய்வதற்கு அதிக மூலதனம் தேவைப்படுவதில்லை என்பதும் புலனாகும். உற்பத்தி செய்யப்படும் பொருள் ஒரு சமுதாயத்துக்கு அத்தியாவசியமானதா? இல்லையா? என்பது பற்றி உற்பத்தியாளன் அதிக கவனஞ் செலுத்துவதில்லை. உதாரணமாக முதலாளித்துவ நாடுகள் சில, அத்தியாவசியப் பொருள்களை உற்பத்தி செய்வதிலே அதிகம் ஈடுபடாது, அதிக இலாபம் கொடுக்கும் போர்க் கருவிகள் போன்ற பொருள்களைப் பெருமளவில் உற்பத்தி செய்வதிலேயே முதலீடு செய்து வருகின்றன. ஆயினும் இந்நாடுகளுமே சந் தையில் நிலவும் கேள்வியினைக் கருத்திற்கொள்ளாது சமுதாயத்துத் தேவைகாளன உணவுப் பொருள்கள், சுகாதார வசதிகள், வீடு வாசல்கள், கல்வி வசதிகள் போன்றவற்றை இலவசமாகவேனும் மானிய அடிப்படையிலேனும் வழங்கும் சந்தர்ப்பங்களுமுள.

# சமவுடைமைப் பொருளாதார முறை

இந்தப் பொருளாதார முறையிலே, முக்கியமான முதலீட்டு மூலதனம் கூட்டுறவு உரிமையின்பாற்படுமென்பது இதன் முக்கியமான அம்சமாகும். இந்தப் பொருளாதார முறையின் கீழ் தனிப்பட்டவருடைய இலாபத்தினையன்றிச் சமுதாயத்தின் தேவைகளைக் குறித்தே பொருள்களும் சேவைகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இப்படியாகப் பொருள்களும் சேவைகளும் சமுதாயத்தின் தேவைகளின் பொருட்டே பெரும்பாலும் உற்பத்தி செய்யப்பட வேண்டி இருப்பதனால், சமவுடைமைப் பொருளாதார முறையின் கீழ், மத்திய திட்டங்களுக்கு அமையவே இவை உற்பத்தி செய்யப்படுகின்றன. எப்பொருள்கள் உற்பத்தி செய்யப்பட வேண்டும்? எவ்வளவு உற்பத்தி செய்யப்பட வேண்டும்? யாருக்காக உற்பத்தி செய்யப்பட வேண்டும்? ஆகியன இந்த மத்திய திட்டவமைப்புத் தானபத்தினாலேயே தீர்மானிக்கப்படும். இங்கே மக்களால் முன் வைக்கப்படும் ஆலோசனைகள் கவனத்திற் கொள்ளப்படும்.

இதன்படி எல்லோருக்கும் குறைந்தபட்சம் கிடைக்க வேண்டிய பொருள்களினதும் சேவைகளினதும் உற்பத்திக்கு முக்கியத்துவமளிப்பதுடன், வாழ்க்கைத் தரத்தினைப் படிப் படியாக உயர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்துப் பணம் செலவிடப்படும். அத்தி யாவசியப் பொருள்களான உணவு, உடை, வீடுவாசல், கல்வி, சுகாதார சேவைகள் ஆகியவற்றை வாழங்குவதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

சமவுடைப்மைப் பொருளாதார முறையின் கீழ் பொது உரிமைக்கு முதலிடமளிக்கப்படுகின்ற போதிலும், ஒவ்வொரு குடும்பத்துக்கும் வீடு முதற் கொண்டு தேவையான நுகர்வுப் பொருள்கள் எல்லாவற்றினையும் வழங்கக் கூடியதாக இருக்கும். பொது நலச் சேவைகளைப் பயன்படுத்தும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. முழுப் பொருளாதார முறைக்குமே

முக்கியமான பாரக்கைத்தொழில், சத்தி வளங்கள், நிதித் தாபனம், ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம், போக்கு வரத்துத் துறை ஆகியன பொதுச் சொத்துக்களாகும். விவசாயத் துறையிலே அரச பண்ணைகளும் கூட்டுப் பண்ணைகளும் பொது உரிமையின் கீழ்க் காணப்படுவது இப்பொருளாதார முறையின் ஒரு முக்கியமான அமிசமெனலாம். சில சந்தர்ப் பங்களிலே பொதுவுடைமைப் பொருளாதார முறையிலே கூட்டுறவு முறையும் செயற்படுவதைக் காணலாம்.

பொதுவுடைமைப் பொருளாதார முறை நடைமுறையிலுள்ள நாடுகளாக மக்கள் சீனக் குடியரசு, செக்கோசிலோவாக்கியா கியூபா ஆகியவற்றைக் கூறலாம்.

## கலப்புப் பொருளாதார முறை

முதலாளித்துவப் பொருளாதார முறை, சமவுடைமைவாதப் பொருளாதார முறை ஆகியவற்றுடன் இவை இரண்டினதும் சிற்சில அமிசங்களைக் கொண்டுள்ள இன்னுமொரு பொரு ளாதார முறை காணப்படுகின்றது. அது கலப்புப் பொரு ளாதாரமுறை எனப்படும்.

உற்பத்தி பற்றிய தீர்மானங்கள் அரசாங்கத் துறையினராலும் தனியார் துறையினராலும் மேற்கொள்ளப்படுகின்றன என்பது கலப்புப் பொருளாதார முறையின் முக்கியமான இயல்பாகும். சிற்சில சந்தர்ப்பங்களிலே காணியின் பெரும் பகுதி அரசுக்குச் சொந்தமாகவும் ஒரு சிறிய பகுதியே தனியாருக்குச் சொந்த மாகவும் இருக்கும். அவ்வாறே சிற்சில பொருள்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்வதிலே அரசாங்கமானது திணைக்களங்கள் அரச கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் மூலம் ஈடுபட்டு வருகின்றது. உற்பத்தியிலே தனியார் துறை யினரை ஈடுபடச் செய்தற் பொருட்டுப் பல்வேறு ஊக்குவிப்பு வழிகள் இப்படியான பொருளாதார முறைகளிலே கைக் கொள்ளப்படுகின்றன.

இந்த அமிசங்கள் பொருந்திய பொருளாதார முறைகளைப் பெரும்பாலும் அபிலிருத்தியடைந்து வரும் நாடுகளிற் காணலாம். இலங்கை, இந்தியா, இந்துனீசியா ஆகியன இதற்கு உதாரணங்களாகும்.

கலப்புப் பொருளாதார முறையின் கீழ் வியாபார தாபனங்களும் அவற்றைக் கொண்டு நடத்தும் முறைகளும் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கும் நாட்டின் தேவைகளுக்குமேற்ப அமையும்.

## மூன்றாம் அத்தியாயம்

# அபிவிருத்தி

இன்றைய உலக நாடுகள் மேற்கொண்டு வரும் பல்வேறு பணிகள் பற்றி ஆராயும் போது அபிவிருத்தி எனும் பதத்தினை நாம் அடிக்கடி கையாளுகின்றோம். எனவே, அபிவிருத்தி என்ற பதத்தின் பொருளைச் சரியாக விளங்கிக் கொள்ளுவது முக்கியமாகும்.

அநேகமானவர்கள் பொருளாதாரத்துறையிலே முன்னேற்றமடைந்துள்ள நாடுகளை அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளென கருதுகின்றனர். பொருளாதார அபிவிருத்தி யென்பது குறிக்கப்பட்ட ஒரு காலப்பகுதியினுள் ஒரு சமுதாயத்தில் அல்லது பொருளாதார முறையில் நுகர்வு செய்யப்படும் பொருள்கள், சேவைகள் ஆகியன தரத்திலும் தொகையிலும் உயர்வதைக் குறிக்கும். இதன் பொருட்டுப் பயன்படுத்தப்படும் தொழினுணுக்க முன்னேற்றமும் இந்த வரைவிலக்கணத்தினுள் கட்டாயமாக அடங்கும். ஆயின் ஒரு நாடு பொருளாதாரத்துறையில் அடைந்துள்ள அபிவிருத்தியை மாத்திரம் கொண்டு அதனை ஓர் அபிவிருத்தியடைந்துள்ள நாடெனக் குறிப்பிடமுடியாது. பொருளாதார அபிவிருத்தியானது அபிவிருத்தியின் ஒரு கூறேயாகும்.

ஒரு நாடு அபிவிருத்தியடைவதற்குப் பொருளாதார அபிவிருத்தியுடன் அங்கே சமூக அபிவிருத்தியும் ஏற்படுதல் வேண்டும். மனிதனுடைய வாழ்க்கைக்கு அத்தியாவசியமாகும் உணவு, உடை, வீடுவாசல் போன்ற அடிப்படைத் தேவைகள் மாத்திரமன்று சுகாதாரம், கல்வி, தொழில்வாய்ப்பு, சமூகப் பாதுகாப்பு, மனித சுதந்திரம், கலாசாரம் ஆகிய கூறுகளிலும் அபிவிருத்தி மூலம் முன்னேற்றமுண்டாக வேண்டுமென

எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே, அபிவிருத்தியென்பது பொருளாதாரம் சமூகம், கலாசாரம் போன்ற பல்வேறு கூறுகளின் முன்னேற்றத்தின் மூலம் சமூகத்தவர் எல்லோருக்கும் சிறந்த வாழ்க்கைத் தரத்தைப் பெற்றுக் கொடுக்கும் சமூக நல்வாழ்வைக் குறிக்குமெனலாம்.

## அபிவிருத்தி அளவீட்டு முறைகள்

ஒரு நாடு அபிவிருத்தி அடைந்துள்ள நாடா அல்லது அபிவிருத்தியடைந்து வருகின்ற நடா என அறிந்து கொள்ளுவது முக்கியம்.

தனிநபர் மொத்தத் தேசிய உற்பத்தியே அபிவிருத்தியை அளவிடுவதற்குப் பெரும்பாலும் கைக்கொள்ளப்படும் அளவீட்டு முறையாகும். ஒரு நாட்டின் தேசிய வருமானத்தை, அதாவது, எல்லாப் பொருள்களினதும், சேவைகளினதும் பெறுமதியைப் பொதுவான ஒரு பண அலகைக் கொண்டு மதிப்பிட்டே மொத்தத் தேசிய உற்பத்தி கணிக்கப்படுகின்றது. குறிப்பிட்ட ஒரு காலப்பகுதிக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தியை அந்நாட்டுச் சனத்தொகையினாற் பிரித்துத் தனிநபர் மொத்தத் தேசிய உற்பத்தியைப் பெற்றுக் கொள்ளலாம். இது தலா வருமானம் என்றும் குறிப்பிடப்படுகின்றது. தலா வருமானத்தை எடுத்துக் காட்டுவதற்கு எந்த ஒரு வங்கிப் பண அலகையும் பயன்படுத்தலாம். ஆயின் அதனை ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுவதற்கு அமெரிக்க டொலர் போன்று, சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு நாணய அலகுக்கு அது மாற்றப்படும். எண்ணெய் ஏற்றுமதி செய்யும் மத்திய கிழக்கு நாடுகளிலே தனிநபர் வருமானம் உயர்ந்ததாகக் காணப்படுகின்றபோதிலும் அவை அபிவிருத்தியடைந்த நாடுகளாகக் கருதப்படுவதில்லை. இந்த நாடுகள் தவிர அபிவிருத்தியடைந்துவரும் ஏனைய நாடுகள் அனைத்திலும் தனிநபர் வருமானம் 1981 இல் 3,500 அமெரிக்க டொலருக்குக் குறைவாகவே காணப்பட்டது. வெனிசுலா, கிரேக்கம், இஸ்ராயில், ஹொங்கோ, ட்றினிடாட், டோபோ ஆகிய நாடுகள் தவிர ஏனையவற்றின் தனிநபர் வருமானம் 3,000 அமெரிக்க டொலருக்குக் குறைவாக இருந்தது. சாதாரணமாக 10,000 அமெரிக்க டொலருக்கு மேற்பட்ட தனிநபர் வருமானம் கிடைக்கப்பெறும்

அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்நாடுகளின் தனிநபர் வருமானம் மிகவுந் தாழ்ந்த மட்டத்திலிருக்கின்றதென்பது புலனாகும். 1983 இலங்கைப் பிரசை ஒருவரின் தனிநபர் வருமானம் 330 டொலராக இருந்தது; சிங்கப்பூர் பிரசை ஒருவரின் தனிநபர் வருமானம் 6,660 டொலராக இருந்தது; பங்களாதேஷில் அது 130 டொலராக இருந்தது.

மொத்தத் தேசிய உற்பத்தியானது, பெரும்பாலும் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அளவிடுவதற்கே பயன்படுத்தப்படுகின்றது. பொருளாதார வளர்ச்சியானது அநேகமாக உற்பத்திப் பெருக்கத்துடன் சம்பந்தப்பட்டதாக இருக்கும்.

மொத்த தேசிய உற்பத்தியைக் கொண்டு அபிவிருத்தி பற்றி ஓரளவு அறிந்து கொள்ளக் கூடுமாயினும், நாட்டு மக்கள் மத்தியில் வருமானம் பங்கிடப்படும் முறையினை அது சரியாக எடுத்துக்காட்டமாட்டாது. தனிநபர் உற்பத்தியை நோக்கும் போது மொத்தத் தேசிய உற்பத்தியானது மக்கள் மத்தியிற் சமமாகப் பங்கிடப்படுகின்றது எனும் அபிப்பிராயம் உண்டாகக்கூடும். ஆயின், உண்மை அதுவன்று. தேசிய வருமானத்தில் 50 வீதம், சில சந்தர்ப்பங்களிலே அதற்குக் கூடிய பகுதியும் சனத்தொகையில் 10 வீதமான சிறிய கூட்டத்தினருக்கே கிடைப்பதை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலே தெட்டத் தெளிவாகக் காணலாம். 1988 இல் இலங்கையின் தனிநபர் வருமானம் 420 அமெரிக்க டொலராக இருக்கக் காணப்பட்டதாயினும், இலங்கை வாசி ஒவ்வொருவரும் 420 டொலர் வருமானத்தைப் பெற்றுக் கொள்ளவில்லையென்பது தெரிந்ததே. எண்ணெய் ஏற்றுமதி செய்கின்ற மத்திய கிழக்கு நாடுகளின் தனிநபர் வருமானம் உயர்ந்ததென மேலே கண்டுள்ளோம். ஆயின் இந்நாடுகளிலும் வறிய மக்கள் வாழ்கின்றனர். எண்ணெய் ஏற்றுமதி மூலம் இந்நாடுகள் பெறுகின்ற வருமானத்திற் பெரும் பகுதி ஒரு சிறிய குழுவினரையே அடைகின்றது.

மொத்தத் தேசிய உற்பத்தியைக் கணிக்கும் போது ஒரு நாட்டின் எல்லாப் பொருள்களும் சேவைகளும் கணிக்கப்படு

கின்றனவா என்பது ஐயத்துக்குரியது. உதாரணமாக, அநேகமான சுய தொழில்கள், வீட்டுப் பெண்களின் சேவைகள், அமையச் சேவைகள் ஆகியவற்றின் பெறுமதி இதில் அடங்குவதில்லை. இது போன்ற குறைபாடுகள் காரணமாக அபிவிருத்தியை அளவிடுவதற்குத் தனிநபர் மொத்தத் தேசிய உற்பத்தியை மாத்திரம் பயன்படுத்துவது ஏற்புடையதாகமாட்டாது. ஆகையினால் வாழ்க்கைத் தரத்தினையும் அதற்குரிய குறிகாட்டியையும் இதிற் சேர்த்துக் கொள்ளுவது முக்கியமாகும். இதன் பொருட்டுப் பௌதிக வாழ்க்கைத் தரச் சுட்டெண் பயன்படுத்தப்படுகின்றது.

பௌதிக வாழ்க்கைத் தரச் சுட்டெண் (PQLI) என்பது ஒரு வயது பூர்த்தியாவதற்கு முன்னர் இறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை, பிறக்கும் போது எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம். எழுத்தறிவு ஆகிய சுட்டிகளை ஒன்று சேர்த்தே கணிக்கப்படும். குழந்தைகளின் இறப்பு வீதம் என்பது பிறக்கும் குழந்தைகளுள் ஒரு வயது பூர்த்தியாவதற்கு முன்னர் இறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை, சம்பந்தப்பட்ட ஆண்டின் பிறப்புகளில் ஆயிரத்துக்கு எவ்வளவு என்பதாகும். சுகாதார வசதிகள், போசணைமட்டம், சிறந்த வைத்திய வசதிகள், கல்வி வசதிகள் ஆகியன காரணமாக ஒரு நாட்டின் சிசு மரண எண்ணிக்கை குறையவும், எதிர்பார்க்கப்படும் ஆயுட் காலம் உயரவும் கூடும். இவ்வாறு நோக்குமிடத்து, சிசு மரண எண்ணிக்கை, பிறக்கும்போது எதிர்பார்க்கப்படும் ஆயுட் காலம் ஆகிய விபரங்களைக் கொண்டு ஒரு சமுதாயத்தின் முன்னேற்றம் பற்றிப் பல விடயங்களை நாம் அறிந்து கொள்ளலாம் எனலாம். உதாரணமாக, நாட்டு மக்களுடைய போசணை மட்டம் உயர்ந்ததாக இருப்பின் அது உயர்ந்த வாழ்க்கைத் தரத்தின் ஓர் அமிசமாகக் கொள்ளப்படும். நாளாந்த உணவில் அடங்கும் கலோரி, புரதம் முதலியவற்றின் அளவைக் கொண்டே போசணை மட்டம் மதிப்பிடப்படுகின்றது. அது சம்பந்தமான விடயங்களையும் பௌதிக வாழ்க்கைத் தரச் சுட்டெண் எடுத்துக் காட்டும். அத்துடன், ஒரு நாட்டின் சுகாதார சேவைகளும் பிற வசதிகளும் எவ்வாறு வியாபித்துள்ளன என்றும் இதிலிருந்து விளங்கிக் கொள்ளலாம். இக்காரணிகள் பிறப்பின் போது எதிர்ப்பார்க்கப்படும் ஆயுட் காலத்தினையும் நிர்ணயிக்கின்றனவாகும்.

எழுத்தறிவு ஒரு நாட்டுக் கல்வி வசதிகள் பரந்துள்ள முறையிலே தங்கியிருக்கும். இதனைக் கணிப்பதற்கு முழுச் சனத்தொகையில் வாசிக்கும் அல்லது எழுதும் வல்லமை உடையவர்களுடைய விகிதம் பயன்படுத்தப்படுகிறது. தனிநபர் மொத்தத் தேசிய வருமானத்தையும் பௌதிக வாழ்க்கைச் சுட்டியையும் பயன்படுத்தி ஒரு நாட்டின் அபிவிருத்தியை அளவிடலாமென்பது இதிலிருந்து புலனாகும். 3.1 ஆம் அட்டவணையிற் காணும் தரவுகளைக் கொண்டு இவற்றினை விளங்கிக் கொள்ளலாம்.

## அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்குமிடையிலுள்ள வேறுபாடுகள்

தனிநபர் மொத்தத் தேசிய உற்பத்தி, பௌதிக வாழ்க்கைத் தரச்சுட்டி ஆகிய அளவீடுகளின்படி உலக நாடுகளை அபிவிருத்திடையந்த நாடுகளெனவும். அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளெனவும் இரு பகுதிகளாகப் பிரிக்கலாம். உதாரணமாக 1981 இல் மொத்தத் தேசிய வருமானம் 3500 டொலருக்கு மேற்பட்டதாகவும் பௌதிக வாழ்க்கைத்தரச்சுட்டி 90 இற்கு மேற்பட்டிருக்கவும் காணப்பட்ட நாடுகள் அபிவிருத்தியடைந்த நாடுகளாகக் கணிக்கப்பட்டன. ஆயின், தனிநபர் மொத்தத் தேசிய உற்பத்தி உயர்வாகவும் சமூக நல்வாழ்வு தாழ்வாகவும் காணப்பட்ட நாடுகள் அபிவிருத்தியடைந்த நாடுகளாகக் கணிக்கப்படுவதில்லை. 3.1 ஆம் அட்டவணையிற் காணப்படும் குவைற், புறூணை போன்ற நாடுகள் இதற்கு உதாரணங்களாகும்.

| | தனிநபர் மொத்தத் தேசிய உற்பத்தி | பௌதிக வாழ்க்கைத் தரச் சுட்டெண் |
|---|---|---|
| பங்களதேஷ் | 170 | 35 |
| இலங்கை | 540 | 82 |
| மாலி | 300 | 23 |
| மலாவி | 210 | 31 |
| சாயர் | 225 | 48 |
| இந்தியா | 310 | 42 |
| சீனா | 380 | 75 |
| ஆஜன்ரீனா | 6050 | 87 |
| பிறேசில் | 2770 | 72 |
| பேரு | 950 | 63 |
| துருக்கி | 1950 | 61 |
| யுகோசிலேவியா | 2520 | 85 |
| புறூணி | 11890 | 77 |
| குவைத் | 13400 | 77 |

அட்டவணை 2.1

(இத்தரவுகள் U. S. Foreign policy and the Third World Agenda 1983) Population Reference Bureau Washington 1994 ஆகிய நூல்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டன).

அமெரிக்கா, பிரித்தானியா, சோவியற் யூனியன், பிரான்சு, கனடா, சுவிற்சலாந்து, யப்பான் போன்ற நாடுகள் அபிவிருத்தியடைந்த நாடுகளாகவும் இந்தியா, குவைற், ஆஜன்ரீனா, இதியொப்பியா, சீனா, பிறேசில் முதலிய நாடுகள் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளாகவும் கணிக்கப்படுகின்றன. அது மாத்திரமன்றி, அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்குமிடையிற் பெரிய அபிவிருத்தி வேறுபாடு இருக்கிறதென்பதை அட்டவணை 3.2 எடுத்துக் காட்டுகின்றது.




உரு. 2. 1 அபிவிருத்தியடைந்த நாடுகளும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளும்

| | அபிவிருத்தி யடைந்த நாடுகள் | அபிவிருத்தி யடைந்து வரும் நாடுகள் |
|---|---|---|
| தனிநபர் மொத்தத் தேசிய வருமானம் 1981 (சராசரி) அ. டொ | 8855 | 772 |
| பௌதிக வாழ்க்கைத் தரச் சுட்டெண் 1981 (சராசரி) | 94 | 59 |
| பிறப்பு விகிதம் ஆயிரத்துக்கு (சராசரி) | 15 | 33 |
| இறப்பு விகிதம் (ஆயிரத்துக்கு (சராசரி) | 10 | 12 |
| பிறப்பின்போது எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் (சராசரி) | 72 | 50 |
| சிசு மரண விகிதம் ஆயிரத்துக்கு (சராசரி) | 18 | 83 |
| எழுத்தறிவு (சராசரி) | 99% | 55% |
| தனிநபர் கல்விச் செலவு (சராசரி) | 423 | 27 |

அட்டவணை 3.2

அபிவிருத்தியடைந்த நாடுகளிற் காணப்படும் தொழினுணுக்க அறிவு, மூலதனம் போன்ற காரணிகளே இதற்கு ஏதுக்களாக அமைகின்றன. உலகச் சனத்தொகையில் ஏறக் குறைய 76 வீதம் (1982) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலேயே காணப்படுகின்றது. ஆயினும், உலக மொத்தத் தேசிய உற்பத்தியில் 20 வீதம் மாத்திரமே இவர்களால் உற்பத்தி செய்யப்படுகின்றது. உலகச் சனத் தொகையில் ஏறக்குறைய 24 வீதத்தினரே அபிவிருத்தியடைந்த நாடுகளில் வசிக்கின்றனராயினும் இவர்கள், மொத்தத் தேசிய உற்பத்தியில் ஏறக்குறைய 80 வீதத்தினை உற்பத்தி செய்கின்றனர். சனத்தொகை, உற்பத்தி மட்டம் ஆகியவற்றுக்கிடையிற் காணப்படும் வேறுபாடு காரணமாக இந்த இருவகையான நாடுகளினதும் வாழ்க்கை மட்டத்திலும் பெரும் ஏற்றத்தாழ்வு காணப்படுகின்றது.

## அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளின் அடிப்படை இயல்புகள்

அபிவிருத்தியடைந்துள்ள ஒரு நாட்டைச் சேர்ந்த ஒரு குடும்பம் உணவு, உடை, வீடுவாசல், கல்வி வசதிகள் போன்ற அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக் கொண்டு திருப்திகரமான ஒரு மட்டத்துக்குரிய வாழ்க்கை வாழும். இந்த நாடுகளிலே வருமானம் பெறுவோர் மத்தியில், மிகவும் தாழ்ந்த மட்டத்திலுள்ளவர்கள் கூட அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக் கொள்வதைக் காணலாம். வேலையில்லாமை காரணமாக வருமானமின்றி இருப்பவர்கள் கூட இந்த நாடுகள் சமூகக் காப்புறுதி முறைகள் முதலியன மூலம் குறைந்தபட்ச வாழ்க்கை வசதிகளைப் பெறுகின்றனர்.

இந்த நாடுகளின் சனத்தொகையில் பெரும் பகுதியினர் விவசாயத்துறை சாராத தொழில்களில் ஈடுபடுகின்றனர். மூலதன வளம் மிக்க இந்த நாடுகள் தொழினுணுக்க அறிவில் முன்னேறியுள்ளன. அவ்வாறே இவற்றின் உற்பத்திப் பெருக்க வேகமும் அதிகமாக இருக்கக் காணலாம்.

அபிவிருத்தியடைந்த நாடுகளின் சனத்தொகைப் பெருக்கவேகம் குறைவானது. 3.4 ஆம் அட்டவணையினைப் பார்க்க. இந்த நாடுகளின் பிறப்பு விகிதத்தை நோக்குமிடத்து இது நன்கு விளங்கும்.

## அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் இயல்புகள்

இந்த நாடுகளில் வாழும் மக்களுள் பெரும்பாலானவர்கள் கஷ்டமான வாழ்க்கை வாழுகின்றனர். இந்த நாடுகளுள் அநேகமானவற்றின் தனிநபர் மொத்தத் தேசிய உற்பத்தி மிகவும் குறைவாக இருக்கும். ஆபிரிக்காவைச் சேர்ந்த அநேகமான நாடுகளின் மொத்தத் தேசிய உற்பத்தி மட்டம் மிகவும் குறைவாக இருக்கின்றன. மொத்தத் தேசிய உற்பத்தி 140 அமெரிக்க டொலராகக் காணப்படும் எதியொப்பியா முக்கியமான ஓர் உதாரணமாகும். அண்மைக் காலத்திலிருந்து அங்கு தொடர்ந்து நிலவிவரும் வரட்சி காரணமாகவும்

அதனால் ஏற்பட்டுள்ள பஞ்சத்தினாலும் பலர் இறக்கின்றனர். எஞ்சியிருப்போர் போசணைக் குறைவினால் வருந்துகின்றனர். இதனையொத்த வறிய நாடுகள் சிலவற்றின் தனிநபர் மொத்தத் தேசிய உற்பத்தி 3.3 ஆம் அட்டவணையிற் கொடுக்கப்பட்டுள்ளது.

| | தனிநபர் மொத்தக் தேசிய உற்பத்தி - 1982 |
|---|---|
| பங்களாதேஷ் | 130 |
| எதியொப்பியா | 120 |
| மாலி | 150 |
| நேபாளம் | 160 |
| பர்மா | 180 |

அட்டவணை 3.3

(மூலம் : The World Bank Atlas, 1986)

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுள் அநேகமானவை ஒரு காலம் குடியேற்றவாத ஏகாதிபத்தியத்துக் குட்பட்டிருந்து பின்னர் சுதந்திரம் பெற்ற நாடுகளாகும். இந்த நாடுகளிலே, குடியேற்றவாதத்தின் மூலம் மாற்றியமைக்கப்பட்ட சமூகப் பொருளாதார அமைப்புகளே காணப்படுகின்றன. இந்த ஏகாதிபத்திய ஆட்சி இரண்டு அடிப்படைக் குறிக்கோள்களைக் கொண்டிருந்தது. ஒன்று, குடியேற்ற நாடுகளின் உணவுப் பொருள்கள், மூலப்பொருள்கள் முதலிய வளங்களைத் தாய் நாட்டின் தேவைகளுக்குப் பயன்படுத்துதல். இரண்டாவது குறிக்கோள், தத்தமது நாடுகளின் முடிப்புப் பொருள்களுக் குரிய சந்தைகளாக இந்நாடுகளைப் பயன்படுத்தல். அபிவிருத்தியடைந்துவரும் அநேகமான நாடுகளின் பொருளாதார அமைப்பு, அபிவிருத்தி மட்டம், சிற்சில சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள் முதலியன குடியேற்றவாதத்தின் பெறு பேறுகளாகக் கணிக்கப்படுகின்றன. இந்த நாடுகளுள் அநேகமானவற்றிலே குடியேற்ற காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட வர்த்தகப் பெருந் தோட்டப் பயிர்செய்கை, கனிப்பொருள் உற்பத்தி ஆகியன பொருளாதாரத்திலே முக்கிய இடம் வகிக்கின்றன. இந்த நாடுகள் முக்கியமான பயிர்களை அல்லது ஒன்றிரண்டு கனிப்பொருள் வகைகளை ஏற்றுமதி செய்வதன் மூலமே

அந்நிய நாட்டுச் செலாவணியின் பெரும் பகுதியினைப் பெரும்பாலும் பெற்றுக்கொள்கின்றன. எனவே, இந்த நாடுகளின் பொருளாதாரத்திலே அடிப்படை பொருள்களின் ஏற்றுமதி முக்கிய இடம் பெறுகின்றது. உதாரணமாக, இலங்கையின் தேயிலை, இறப்பர் ஆகியவற்றையும்; கனாவின் கொக்கோவையும்; சூடானின் பருத்தி, கோப்பி ஆகியவற்றையும்; மலேசியாவின் இறப்பர், வெள்ளீயம் ஆகியவற்றையும் கூறலாம்.

உலகச் சந்தைக்குத் தேவையான சில அடிப்படைப் பொருள்கள் பெரும்பாலும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளினாலேயே வழங்கப்படுகின்றன. ஆயின் வருவாயை நோக்குமிடத்து உலக வர்த்தகத்திலிருந்து அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் ஒரு சிறிய பகுதியையே பெறுகின்றன. சர்வதேச வியாபாரத்தில், அபிவிருத்தியடைந்த நாடுகளுக்குள்ள வாய்ப்பே இதற்குக் காரணமாகும். இதனைவிட, அநேகமான அடிப்படைப் பொருள்களின் விலைகள் அடிக்கடி தளம்புவதும் ஒரு காரணமாகும்.

அபிவிருத்தியடைந்துவரும் அநேகமான நாடுகள், ஒரே மாதிரியான அடிப்படைப் பொருள்களை உற்பத்தி செய்வதனால் அவற்றை உலகச் சந்தையிலே விற்பனை செய்யும்போது கடும் போட்டியை எதிர்நோக்க வேண்டி இருக்கின்றன. உதாரணமாக, எமது நாட்டிலே உற்பத்தி செய்யப்படும் தேயிலையை உலகச் சந்தையிலே விற்பனை செய்யும்போது இந்தியா, கெனியா முதலிய நாடுகளுடன் நாம் கடும் போட்டிபோட வேண்டி நேரிடுகின்றது. அத்துடன், சில அடிப்படைப் பொருள்களுக்குப் பதிலான மாற்றீட்டுப் பொருள்களும் இப்போது சந்தையிற் காணப்படுகின்றன. உதாரணமாக இயற்கை இறப்பருக்குப் பதிலான செயற்கை இறப்பரையும், இயற்கையான மூலப் பொருள்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் துணிகளுக்குப் பதிலாகச் செயற்கைப் பொருள்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் துணி வகைகளையும் கூறலாம். மனித உழைப்பினைப் பெரிதும் பயன்படுத்தி, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் உற்பத்தி செய்யும் இயற்கை மூலப்பொருள்கள் போன்றன இப்படியான செயற்கைப் பொருள்களாற் பாதிக்கப்படுகின்றன.

| | சனத்தொகை (இலட்சங்களில்) 1988 ஆம் ஆண்டு நடுப்பகுதி | சனத்தொகையின் வளர்ச்சி வேகம் (நூற்றுக்கு) |
|---|---|---|
| பிரித்தானியா | 571 | 0.3 |
| அமெரிக்கா | 2463 | 0.8 |
| சோவியற் யூனியன் | 2860 | 0.9 |
| கனடா | 260 | 0.9 |
| பங்களதேஷ் | 1089 | 2.4 |
| பிறேசில் | 1444 | 1.8 |
| இலங்கை | 166 | 0.1 |
| இதியொப்பியா | 474 | 3.3 |

அட்டவணை 3.4

(மூலம் : The World Bank Atlas, (1985)

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கிடையிலே காணப்படும் மற்றுமொரு பொதுவான இயல்பு யாதெனின், அவற்றின் சனத்தொகை, அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளிப் சனத்தொகையை விட வேகமாகப் பெருகுகின்றது என்பதாகும்.

அபிவிருத்தியடைந்த நாடுகள் சிலவற்றையும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் சிலவற்றையும் எடுத்துப் பார்க்கும் போது அவற்றின் சனத்தொகைக்கும் சனத்தொகை பெருகும் வேகத்துக்குமுள்ள வேறுபாட்டினை நன்கு புரிந்து கொள்ளலாம். 3.4 ஆம் அட்டவணையைப் பார்க்க. சனத்தொகையானது துரிதமாகப் பெருகுகின்றமையினால், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலே சனத்தொகையிற் குறிப்பிடத்தக்க ஒரு தொகையினர் 15 வயதுக்குக் குறைந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்களுக்குத் தேவையான உணவு, சுகாதார வசதிகள், கல்வி வசதிகள் போன்றவற்றை வழங்குவதற்கு அதிக செலவுண்டாகின்றது. இப்படியான இளஞ் சனத்தொகையினரையும் ஏனையவர்களிலே தங்கியிருக்கின்ற முதியோர்களையும் பேணுதல் அபிவிருத்தியடைகின்ற நாடுகளுக்குச் சிக்காலாக இருக்கின்றது. அபிவிருத்தி அடைந்துவருகின்ற சில நாடுகளின் முழுச் சனத்தொகையில் 40 — 45 வீதம் தங்கியிருப்பவர்களாகக் காணப்படுகின்றனர். சனத்தொகை துரிதமாகப் பெருகுவது காரணமாக இந்த நாடுகளிலே வேலையில்லாப் பிரச்சினையும் தோன்றியுள்ளது.

அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளுடன் ஒப்பிட்டு நோக்குமிடத்து அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுள் அநேகமானவற்றிலே மூலதனப் பற்றாக் குறையையும் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இதற்கு மாற்று வழியாக இந்நாடுகள் பிறநாட்டுக் கடன் உதவி, முதலீடு ஆகியவற்றிலே தங்கியிருக்க வேண்டி இருக்கினறது. இவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் மூல தனத்துக்கு இந்த நாடுகள் குறிப்பிடத்தக்களவு தொகையைத் திருப்பிச் செலுத்த வேண்டி நேரிடுகின்றது.

தொழினுணுக்கம், பயிற்சி முறைகள் ஆகியன சம்பந்தமான பல பிரச்சினைகளை அபிவிருத்தியடைந்துவரும் அநேகமான நாடுகள் எதிர்நோக்குகின்றன. இதனால் இந்த நாடுகளிலே உழைப்பு மூலம் கிடைக்கும் பலாபலன்களும் உற்பத்திப் பெருக்க வேகமும் தாழ்ந்த மட்டத்திலே இருக்கக் காண்கிறோம். ஆயினும் கடந்த சில பதிற்றுக்களிலே கொரியா, தாய்வான், ஹொங்கொங் போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள், உயர்ந்த அபிவிருத்தி விகிதத்தினைப் பெற்றுள்ளன.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுள் அநேகமானவற்றின் பொருளாதாரத்தினை விவசாயம் சார்ந்த பொருளாதாரம் எனலாம். இந்த நாடுகளிலே இறப்பர், கரும்பு, பருத்தி போன்ற விவசாய மூலப் பொருள்களையும் உணவுப் பொருள்களையும் உற்பத்தி செய்வதற்கு உகந்த சூழ்நிலை காணப்படுகின்றது. இவற்றின் விவசாயத் துறையை முழுமையாக எடுத்துக் கொண்டால் அதனை வாழ்வாதாரப் பயிர்ச்செய்கை எனவும் வியாபாரப் பயிர்ச்செய்கை எனவும் இரண்டு முக்கியமான பகுதிகளாகப் பிரிக்கலாம். இவ்வாறே கால்நடை வளர்ப்பு, கடற்றொழில் ஆகியனவும் இந்த நாடுகளிலே முக்கிய இடம் வகிக்கின்றன. இந்த நாடுகளின் சனத் தொகையானது துரிதமாகப் பெருகுவது காரணமாக, வாழ்வாதாரப் பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்தப்படும் காணி சிறு சிறு துண்டுகளாகப் பிரிக்கப்படுகின்றது. அத்துடன், இந்த நாடுகளைச் சார்ந்த விவசாயிகள் மத்தியிற் காணப்படும் வறுமை காரணமாகத் திருத்தமான தொழினுட்ப முறைகளைக் கைக்கொள்ளவேனும் போதிய பசளை வகைகளைப் பயன்படுத்தவேனும் முடியாமலிருக்கிறது. இவற்றின் கூட்டு விளைவாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் வாழ்வாதாரப் பயிர்ச்செய்கையின் அறுவடை, அபிவிருத்தியடைந்த நாடுகளின் அறுவடையை

விடத் தாழ்ந்த மட்டத்திலிருக்கக் காண்கின்றோம். ஆயினும் இந்த நாடுகளின் வியாபாரப் பயிர்ச்செய்கைத்துறை, நன்கு ஒழுங்கமைக்கப்பட்டுப் பெருமளவிலே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும், இந்த நாடுகளைச் சேர்ந்த மக்களுள் பெரும்பாலானவர்கள், தமது சீவனோபாயமாகக் கைத் தொழிலையும் அதனைத் தழுவிய தொழில்களையும் கைக்கொள்ளுகின்றனர்.

பௌதிக வளங்களும், மனித வளங்களும் உரிய முறையிற் பயன்படுத்தபடாமை, அபிவித்தியடைந்துவரும் நாடுகளில் நாம் காணும் மற்றுமொரு இயல்பாகும். இந்த நாடுகளுள் சில, கனிப்பொருள் வளங்களையும், நீர் வளங்களையும் நிறையப் பெற்றுள்ளன. ஆயினும் பயிற்சிமுறை, தொழினுணுக்க அறிவு, மூலதனம் ஆகிய சம்பந்தமான குறைபாடுகள், முகாமைத்துவம் சம்பந்தமான பிரச்சினைகள் என்பன காரணமாக இவ்வளங்களை உரிய முறையில் இவை பயன்படுத்த முடியாமலிருக்கின்றன.

கைத்தொழில் துறையில் முன்னேற்ற மீன்மையும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் காணப்படுகின்ற மற்றுமொரு இயல்பாகும். அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளைப் போலன்றி இந்த நாடுகளின் சனத்தொகையில் ஒரு சிறு பிரிவினர் மாத்திரமே கைத்தொழில் துறைசார்ந்த தொழில்களில் ஈடுபடுகின்றனர். ஆயினும், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுள் சில அண்மைக் காலத்திலிருந்து கைத்தொழில் துறையில் ஆர்வம் காட்டி வருகின்றன. உதாரணமாக இந்தியா, தென் கொரியா, தாய்வான் ஆகிய நாடுகளைக் கூறலாம். மேலும், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் சத்தி நுகர்வும்குறைவாகும்


அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுள் எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நகடுகளின் நிலைமை பெரிதும் வேறுபட்டதாகும். இந்த நாடுகளிலே அபிவிருத்திக்கு வேண்டிய மூலதனம் தாராளமாகக் கிடைக்கின்றது. இவற்றின் தனிநபர் மொத்தத் தேசிய உற்பத்தி உயர்ந்த மட்டத்திலுள்ளது. அதுமாத்திரமன்றி இவற்றுள் சில நாடுகளின் மொத்தத் தேசிய உற்பத்தி, அபிவிருத்தியடைந்த நாடுகளின் மொத்தத் தேசிய உற்பத்திக்குச்

சமமாகவும் சில சந்தர்ப்பங்களிலே அதனைவிட உயர்வாகவும் காணப்படுகின்றது. இந்த நாடுகளின் தனிநபர் வருமானம் உயர்வாக இருக்கின்ற போதிலும் முன்னர் குறிப்பிடப் பட்டுள்ளவாறு பௌதிக வாழ்க்கைத்தரச் சுட்டி தாழ்வாகவே இருக்கின்றது.

தற்போது அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் அவற்றின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குப் பல்வேறு வழிகளிலே முயன்று வருகின்றன. உயர்ந்த தர தொழினுணுக்க முறைகளைக் கைக்கொண்டு உற்பத்தியைப் பெருக்குதல், சுதந்திர சந்தைக் கொள்கையை நடைமுறைப்படுத்தல். உற்பத்தியில் தனியார் துறையினரின் பங்களிப்பைப் பெருக்குதல் அம்முறைகளுள் சிலவாகும். மேலும், சனத்தொகையில் வளர்ச்சி வேகத்தைக் குறைத்தல், தாய்சேய் சுகாதாரப் பாதுகாப்பு, போசனை மட்டத்தினை உயர்த்துதல், கல்லாமையைப் போக்குதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் ஆகியனவற்றிலும் இவை கவனஞ் செலுத்து கின்றன.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் தனித்தனியாக மேற்கொண்டு வரும் இந்த நடவடிக்கைகளை விடச் சர்வதேச ரீதியாகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. முன்னர் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அபிவிருத்தியடைந்துவரும் அநேக நாடுகளின் ஏற்றுமதிப் பொருள்களுக்கு நியாயமான விலைகள் கிடைக்காமை அந்நாடுகள் எதிர்நோக்குகின்ற அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினையாகும். எனவே, இதற்குப் பரிகாரம் காணும் நோக்குடன் அடிப்படைப் பொருள்கள் சிலவற்றின் விலைகளைத் திடமாக வைத்திருப் பதற்காகச் சர்வதே வர்த்தகப் பொருள்களுக்குரிய ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் நல்ல பயன் கிடைக் காமையினால் சம்பந்தப்பட்ட பொருள்களுக்கு அபிவிருத்தி யடைந்த நாடுகளிலிருந்து உயர்ந்த விலையைக் பெற்றுக் கொள்ளும் பொருட்டு, அண்மைக் காலத்திலிருந்து அபிவிருத்தி டைந்த நாடுகளும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளும் பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகின்றன. இது வடக்குத் தெற்குச் சல்லாபம் எனக் குறிப்பிடப்படுகின்றது. இங்கே அபிவிருத்தியடைந்த நாடுகள் வடக்கைச் சார்ந்த நாடுகளாகவும், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் தெற்கைச் சார்ந்த நாடுகளாகவும் கருதப்படுகின்றன.

இவ்வாறு, நாடுகள் அபிவிருத்தியடைந்த நாடுகளெனவும், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளெனவும் இருவகையாகப் பிரிக்கப்படுகின்ற போதிலும் எந்த ஒரு நாடும் சதாகாலமும் ஒரே மட்டத்திலிருக்குமென்று கருதலாகாது. உதாரணமாக இப்போது அபிவிருத்தியடைந்த நாடுகளாகக் கருதப்படும் சில நாடுகள் ஒரு காலத்தில் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளாக இருந்துள்ளன. அவ்வாறே இப்போது அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகள், அவை கடைப்பிடித்து வருகின்ற அபிவிருத்தி வழிவகைகளின் பெறுபேறுகளைப் பொறுத்து எதிர்காலத்திலே அபிவிருத்தியடைந்த நாடுகளாகத் திகழக்கூடும்.



நான்காம் அத்தியாயம்

# அபிவிருத்தியடைந்த நாடுகளினதும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளினதும் வரலாற்றுப் பின்னணி

உலக நாடுகளுட் சில அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளெனவும், சில அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளேனவும் குறிப்பிடப்படுகின்றன. இந்த வேறுபாட்டுக்குச் சில வரலாற்றுக் காரணிகளே அடிப்படையாகும். இக்காரணிகள் யாவையென ஆராய்வது முக்கியமாகும். அபிவிருத்தியின் வரலாறு பற்றி ஆராய முனையும் போது மேற்கு ஐரோப்பிய நாடுகள் பற்றியே நாம் முதலிற் கவனஞ் செலுத்துகின்றோம். 15 ஆம் நூற்றாண்டில், ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி காரணமாகப் புதிய விடயங்களைக் கண்டுபிடிப்பதிலே புதியதோர் ஆர்வம் உண்டானது. இந்த ஆர்வத்தின் விளைவாக ஸ்பையின். போர்த்துக்கல் ஆகிய நாடுகளின் தலைமையின் கீழ் மேற்கு ஐரோப்பிய நாடுகள், நாடு காண் பயணங்களை மேற்கொண்டன. குறிப்பாக, கிழக்கு மேற்கு நாடுகளின் வியாபாரத் தொடர்புகள், புதிய கடல் மார்க்கங்கள் கண்டு பிடிக்கப்பட்டதன் விளைவாகவே வளர்ச்சியடைந்தன. 16 ஆம் 17 ஆம் நூற்றாண்டுகளிலே ஐரோப்பிய நாட்டவர் தமது வர்த்தகத் தொடர்புகளை உறுதிப்படுத்துவதற்காகப் பேரரசுகளைக் கட்டியெழுப்புவதற்கு எத்தனித்தன்மையினால், ஐரோப்பாவின் செல்வாக்கு உலகம் முழுவதும் பரவியது. போர்த்துக்கள், ஸ்பெயின், ஒல்லாந்து, பிரான்சு, பிரித்தானியா பெல்சியம் ஆகிய நாடுகள் தத்தமது குடியேற்ற நாடுகளிலிருந்து தங்கம், வெள்ளி, வாசனைப் பொருள்கள் போன்றவற்றைப் பெற்றுக் கொள்வதற்குக் கடும் போட்டி போட்டன. வர்த்தக ஏகாதிபத்தியத்தினைக் கட்டியழுப்புவதே குடியேற்றப் போட்டியின் முக்கியமான குறிக்கோளாக இருந்தது. 18 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தின்போது, இப்படியாக வெளிநாட்டு வர்த்தகத்தின் மூலமும் வேறு வழிகள் மூலமும் திரட்டிய

நிதியைச் சுதேசப்பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டு சிறந்த முறையிற் பிரித்தானியா மாத்திரமே பயன்படுத்தியது.

இதன் விளைவாக 17 ஆம் நூற்றாண்டிலே முதலிற் பெரிய பிரித்தானியாவில் ஆரம்பித்த கைத்தொழிற் புரட்சி 18 ஆம் நூற்றாண்டிற் பிரான்சு, சேர்மனி போன்ற நாடுகளுக்கும் பரவியது. இதனால் கைத்தொழில் மூலப் பொருள்களுக்கும் முடிப்புப் பொருள்களுக்கும் சந்தைகளைக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. நாடுகளைக் கைப்பற்றிப் பேரரசுகளை உருவாக்குவதற்கான கடும் போட்டி மீண்டும் ஏற்பட்டது. ஆரம்பத்திலே வர்த்தகச் சந்தைகளைப் பிடிப்பதற்காக மேற் குறித்த நாடுகளுக்கிடையில் உண்டான இப்போட்டியிற் பின்னொரு காலத்தில் மற்றுமொரு நாடு சேர்ந்து கொண்டது. கைத்தொழில், விவசாய வளங்கள் மிக்கதாகவும், பெரும்பாலும் குடியேறியவர்களே வாழ்வதாகவும், புதிய ஒரு நாடாகவும், குறுகிய காலத்துக்குள் பெரும் பொருளாதார அபிவிருத்தியை அடைந்துள்ளதாகவும் கருதப்படும் அமெரிக்காவே அந்நாடாகும். இவ்வாறே வளங்கள் நிறையப் பெற்ற கனடா, அவுஸ்திரேலியா, நியுசிலாந்து போன்ற, பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் குடியேற்ற நாடுகளும் தத்தமது முயற்சியினால் துரித பொருளாதார முன்னேற்றம் கண்டன. இவ்வாறு 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் மேற்கு நாடுகள் கைத்தொழிலைப் பொறுத்தமட்டில் எவ்வளவு முன்னேற்றமடைந்தன என்பதை, அவை தமது மூலதனத்தைப் பெருக்குதற் பொருட்டுப் பிறநாட்டு முதலீட்டு வழிவகைகள் பற்றி ஆராய்ந்து வந்தன என்பதிலிருந்து விளங்கிக் கொள்ளலாம்.

ஆரம்பத்திலே பெரும்பாலும் மேனாட்டு மூலதன முதலீட்டு மூலம் கைத்தொழில் அபிவிருத்தி பெற்ற ஒரு நாடாக இரசியாவைக் கூறலாம். 19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பப்பகுதிவரை புகையிரதப் பாதைகள், வங்கி விவகாரங்கள், உருக்குக் கைத்தொழில், சுரங்கக் கைத்தொழில் போன்றவற்றைப் பெரும்பாலும் பிரித்தானியா, சேர்மனி, பிரான்சு ஆகிய நாடுகளின் முதலீடுகளைக் கொண்டே இரசியா அபிவிருத்தி செய்தது, ஆயினும் 1917 ஆம் ஆண்டின் பின்னர் இரசியாவின் கைத்தொழில் அபிவிருத்தி முற்று முழுதாக அதன் சுதேச மூலதனத்தைக் கொண்டே மேற்கொள்ளப்பட்டது. ஒப்பீட்டு

முறையில் நோக்கும்போது, இயற்கை வளங்களைப் பொறுத்தமட்டிலே, இதுவரை குறிப்பிடப்பட்ட நாடுகள் அளவு செல்வச் செழிப்பற்றதாயினும் திடசங்கற்பத்துடன் பல்வேறு வழிவகைகளையும் சிறந்த தொழினுட்ப உபாயங்களையும் கைக்கொண்டு குறுகிய காலத்தினுள் போற்றத்தக்க பொருளாதார அபிவிருத்தி கண்டுள்ள ஆசிய நாடு யப்பானாகும். இவ்வாறு பல்வேறு வழிகளிலே பொருளாதார அபிவிருத்தியடைந்துள்ள இந்நாட்டுகளிலே வாழ்க்கைத்தரமும் உயர்ந்திருக்கக் காணப்படுவதால் இவை வளர்வுற்ற நாடுகளெனக் கணிக்கப்படுகின்றன.

நவீன தொழினுட்பத்தினை ஆதாரமாகக் கொண்டு, வளர்வுற்ற நாடுகள் ஏனைய நாடுகளிடத்திலே பெரும் செல்வாக்குக் கொண்டிருந்தன. மூலப் பொருள்களையும், உணவுப் பொருள்களையும் பெற்றுக்கொள்ளுவதற்காக இவை தத்தமது குடியேற்ற நாடுகளிலே வர்த்தகப் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை முறைகளை ஆரம்பித்துப் பல்வேறு பயிர்ச் செய்கைகளை மேற்கொண்டன. இந்தியாவின் பருத்தி, இலங்கைத் தேயிலை, மலாயா இறப்பர், மேற்கிந்தியத் தீவுகளின் கரும்பு, தாய்வானின் கொக்கோ முதலியன பேரரசு நாடுகளின் பயன் கருதி மேற்கொள்ளப்பட்ட பயிர்களாகும். இந்த வர்த்தகப் பயிர்செய்கை முறை காரணமாக இந்தக் குடியேற்ற நாடுகளிலே காணப்பட்ட தன்னிறைவான மானியப் பொருளாதார முறை மாறி பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையினை ஆதாரமாகக் கொண்ட, ஏற்றுமதிப் பொருளாதார முறைகள் உருவாகின. மானியச் சமூகங்களிற் காணப்பட்ட குல கோத்திர முறைகள் அற்றுப் போய்ப் புதிய தொழில் வாய்ப்புக்கள் ஏற்பட்டமையினாலும் வாழ்வாதாரப் பயிர்ச்செய்கையைவிட வியாபாரப் பயிர்ச் செய்கைக்கு அதிக முக்கியத்துவ மளிக்கப்பட்டமையினாலும் பொருளாதார அபிவிருத்தி புதியதொரு திசையிற் செல்லலாயிற்று. சுதேச உணவு உற்பத்தி புறக்கணிக்கப்பட்டுப் பின்தங்கியதனால் உணவுப் பொருள்கள் முதல் அத்தியாவசியப் பொருள்கள் எல்லாவற்றினையும் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொள்ளும் வழக்கமேற்பட்டது. இப்படியாகவே வளர்வுற்ற நாடுகளின் கைத்தொழிற் பொருள்களை இந்நாடுகளுக்கு இறக்குமதி செய்யும் வழக்கம் ஏற்பட்டது, இவ்வாறு குடியேற்ற காலத்திலேற்பட்ட ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதார முறைகள் இன்றும் வளர்முக (அபிவிருத்தியடைந்துவரும்) நாடுகளிலே காணப்படுகின்றன.

ஏற்றுமதி இறக்குமதி நடவடிக்கைகளின் முன்னேற்றம் காரணமாக இந்நாடுகள் வெளிநாட்டு வர்த்தகத் துறையிலும் பெரும் முன்னேற்றம் கண்டன. இவ்வாறு வளர்ந்த வர்த்தக விவகாரங்களின் வசதி கருதித் துறைமுகங்களும் அபிவிருத்தி செய்யப்பட்டன. கொழும்பு, கல்கத்தா, பம்பாய், ஹொங்கொங், றியோத ஜனெய்றோ போன்ற புதிய கப்பற் துறைமுகங்கள் இப்படியாகவே அபிவிருத்தி செய்யப்பட்டன. இந்நாடுகளின் உள்நாட்டுப் போக்குவரத்து முறைகளும் அபிவிருத்தி செய்யப்பட்டன. பெருந் தெருக்களும் புகையிரதப் பாதைகளும் அமைக்கப்பட்டன. இவற்றுடன், வியாபார விவகாரங்களின் வசதி கருதிச் செய்திப் பரிமாற்ற முறையும் அபிவிருத்தி செய்யப்பட்டது.

வசதியாகப் பணக் கொடுக்கல் வாங்கல்களைச் செய்தற் பொருட்டு வங்கிச் சேவையும் காப்புறுதிச் சேவையும் ஆரம்பிக்கப்பட்டன. இவற்றுடன் கல்வி, சுகாதார, வைத்தியச் சேவைகளும் அபிவிருத்தியடைந்தன. இவ்வாறு குடியேற்ற காலத்திலே போக்குவரத்து முறைகளிலும் நிதித் தாபனங்களிலும் முன்னேற்றம் காணப்பட்டபோதிலும், வாழ்வாதார விவசாயத்துறையில் இவற்றின் செல்வாக்கு மிகக் குறைவாகவே காணப்பட்டது. இதன் பெறுபேறாக வாழ்வாதார விவசாயத்துறையும் பெரும்பாலும் ஏற்றுமதியில் ஈடுபட்டிருந்த விவசாயத் துறையும் ஒன்றுக் கொன்று வேறுபட்ட திசைகளிலே சென்றன. எடுத்துக்காட்டாக, வர்த்தக வங்கி முறை, காப்புறுதி முறை, போக்குவரத்து முறை போன்றன, பொருளாதாரத்தில் முக்கியமான ஓர் இடத்தை வகித்த ஏற்றுமதி இறக்குமதியைக் குறிக்கோளாகக் கொண்டே உருவாகின. ஆயினும் வாழ்வாதார விவசாயத் துறைக்குத் தேவையான பணத்தைப் பெற்றுக் கொள்ளுவதற்கு விவசாயிகள் வங்கிமுறையைச் சாராத வட்டாரங்களிலே அதாவது வட்டிக்குப் பணங் கொடுக்கும் கிராமப்புறக் கடைச் சொந்தக்காரர் போன்றோரிலே தங்கியிருந்தனர். அத்துடன் இவர்கள் உற்பத்தி செய்த பொருள்களுள் மிகவுஞ் சிறிய ஒரு பகுதியே சந்தையை அடைந்தது.

ஏற்றுமதித் துறையின் பொருட்டான வியாபார விவசாயத்துக்கு முக்கியத்துவமளிக்கப்பட்டமையினால் பாரம்பரிய வாழ்வாதார விவசாயம் புறக்கணிக்கப்பட்டது. வியாபார விவசாயத்துறையில் முன்னேற்றமான இயல்புகள்

காணப்பட்டன. சிறந்த உற்பத்தி முறைகள், ஏராளமான மூலதன முதலீடு, பெருந்தொகையினருக்குரிய வேலை வாய்ப்பு, நிரந்தரமான சம்பளம் வழங்கும் முறை போன்ற முன்னேற்றமான அமிசங்கள் இத்துறையிற் காணப்பட்டன.

பாரம்பரிய வாழ்வாதார விவசாயத்துறையிலே முன்னேற்ற மற்ற இயல்புகள் காணப்பட்டன. உற்பத்தி மிகையின்மை, முன்னேற்றமற்ற பழைய விவசாய முறைகள், மூலதனப் பற்றாக் குறை தொழிலாளர் பற்றாக்குறை, குறைந்த அறுவடை ஆகிய குறைபாடுகள் இங்கே காணப்பட்டன.

இத்தகைய இயல்புகள் காணப்படுவதனால் அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகளுள் அநேகமானவற்றிலே ஒரு புதுவிதப் பொருளாதார முறை காணப்படுகின்றது. இப்பொருளாதார முறை சமநிலையுடையதன்று. இதனைச் சீர்ப்படுத்துவதற்குரிய ஒரு வழியாக இப்பொருளாதார முறையிற் கைத்தொழில் துறையினைவிட விவசாயத்துறைக்கே முக்கியத்துவம் கொடுக்கப் படுகின்றது. ஆனால் இது உறுதியற்ற உலகச்சந்தையிலே பெரிதும் தங்கியிருக்கும் போக்குடையதாகக் காணப்படுகின்றது. இதனால் இப்பொருளாதார முறை உறுதியற்ற தன்மையுடை யதாகக் காணப்படுகின்றது.

## ஐந்தாம் அத்தியாயம்

# அபிவிருத்தி சம்பந்தமான பிரச்சினைகள்

உலக நாடுகளை அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளெனவும், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளெனவும் இரு பகுதிகளாகப் பிரிக்கலாமெனக் கடந்த பாடங்களிற் படித்துள்ளீர்கள். அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளின் வளர்ச்சி மட்டங்கள் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன . அவ்வாறே அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகளிலும் வேறுபட்ட வளர்ச்சி மட்டங்கள் காணப்படுகின்றன. அபிவிருத்தி அடைந்துள்ள நாடுகள் மேலும் வளர்ச்சியடைய முயல்வது போலவே அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகளும் வளர்வுற்ற நிலையை எய்துவதற்கு அயராது உழைத்து வருகின்றன. வளர்ச்சிப் பாதையில் முன்னேற எத்தனிக்கும் இந்த இருவகையைச் சேர்ந்த நாடுகளும் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன.

இப்பிரச்சினைகளுக்கு மூலமான காரணங்கள் பலவுள. சனத்தொகை, குறைந்த வருமான மட்டம், வளப் பற்றைக்குறை, வளங்களைச் சிறந்த முறையிற் பயன்படுத்தாமை, உற்பத்திக் குறைவு, தொழிலாளர் வளக்குறைவு, வேலையில்லாப் பிரச்சினை, வியாபார நடைமுறைகள், கல்வி, சுகாதார, சமூக சமயப் பின்னணிகள் ஆகியனவே இக்காரணிகளாகும்..

சனத்தொகையும் வருமானமும் எல்லா இடங்களிலும் சமமாகக் காணப்படுவதில்லை. 1986 ஆம் ஆண்டு உலக அபிவிருத்தி பற்றிய அறிக்கையின்படி (உலக வங்கி) உலகச் சனத்தொகை ஏறத்தாழ 6,600 மில்லியனாக இருக்கக் காணப்பட்டது. இச்சனத்தொகை ஆண்டுக்கு ஒரு சத வீதப்படி அதிகரிக்குமாயின் 70 ஆண்டுகளிலே அது

இருமடங்காகும் ; ஆண்டுக்கு 2 சத வீதப்படி அதிகரிக்குமாயின் 35 ஆண்டுகளிலே இருமடங்காகும். மேற்குறிக்கப்பட்ட அறிக்கையின்படி உலகச் சனத்தொகை ஆண்டுக்கு ஏறக்குறை 1.7 சத வீதம் அதிகரித்து வருவதனால் 50 ஆண்டுகளுக்கும் சற்றுக் குறைந்த காலத்தில் இன்றைய சனத்தொகை இரு மடங்காகுமென எதிர்பார்க்கப்படுகின்றது. சனத்தொகை இவ்வாறு அதிகரிக்கும் நாடுகள், அதிகரிக்கும் சனத்தொகைக்கு வேண்டிய உணவு, குறைந்த பட்ச வாழ்க்கை வசதிகள், வேலை வாய்ப்பு முதலியன சம்பந்தமான பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளன.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுள் அநேகமானவவற்றிலே சனத் தொகையின் வளர்ச்சி வீதம் உயர்ந்ததாகவும் அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளிலே அது குறைந்ததாகவும் இருக்கக் காணப்படுகின்றது. உலகத்து நாளாந்தப் பிறப்பு இறப்பு எண்ணிக்கைகளின்படி ஒவ்வொரு நிமிடமும் சனத்தொகை 150 பேரால் அதிகரிக்கின்றது என்று சர்வதேசத் திட்டமிட்ட சனத்தொகைச் சங்கத்தின் வெளியீடு ஒன்றிற் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த 150 பேருள் பெரும்பாலானோர் வறிய நாடுகளிலேயே பிறக்கின்றனரென அந்நாடுகளின் தரவுகள் எடுத்துக் காட்டுகின்றன.

வாந்திபேதி, மலேரியா, வயிற்றோட்டம் போன்ற தொற்று நோய்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் பெரும்பாலும் வெற்றியளித்துள்ளமையினாலும், வைத்திய சேவையின் அபிவிருத்தி, சுகாதார வசதிகள் ஆகியன காரணமாகவும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் மரண விகிதம் குறைந்துள்ளது. இதன் விளைவாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் சனத்தொகை வளர்ச்சி விகிதம் வளர்வுற்ற நாடுகளின் சனத்தொகை வளர்ச்சி விகிதத்தினைவிட அதிமானது என்பதை 5.1ஆம் அட்டவணை எடுத்துக் காட்டுகின்றது.

## சனத்தொகை வளர்ச்சி வீதம் — நூற்றுக்கு

| அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் | | அபிவிருத்தியடைந்த நாடுகள் | |
|---|---|---|---|
| பங்களாதேஷ் | 2.1 | பெரிய பிரித்தானியா | 0.3 |
| இந்தியா | 1.7 | நெதர்லாந்து | 0.4 |
| இலங்கை | 1.1 | யப்பான் | 0.4 |
| பாகிஸ்தான் | 3.2 | சேர்மனி | 0.1 |
| | | அவுஸ்திரேலியா | 1.4 |
| | | சுவீடன் | 0.4 |
| | | கனடா | 0.8 |
| | | நோர்வே | 0.4 |
| | | சுவிற்சலாந்து | 0.4 |

அட்டவணை 5.1

மூலம் : உலக அபிவிருத்தி பற்றிய அறிக்கை 1988.

இந்த அட்டவணையின்படி அபிவிருத்தியடைந்த நாடுகளுள், குடிபெயர்வு காரணமாகச் சனத்தொகை வளர்ச்சி வீதம் அதிகரித்த அவுஸ்திரேலியா தவிர ஏனைய ஒவ்வொன்றினதும் சனத்தொகை வளர்ச்சி வீதம் நூற்றுக்கு ஒன்றிலுங் குறைவாகக் காணப்படுகின்றது. அட்டவணையிற் காட்டப்பட்டுள்ள அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் இரண்டில் அது இரண்டுக்கு மேலாகக் காணப்படுகின்றது.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுள் அநேகமானவற்றின் சனத்தொகை வளர்ச்சி வேகம் ஓரளவுக்கு உயர்வாகவுள்ளது என்பது மேலுள்ள அட்டவணையிலிருந்து தெளிவாகும். அதிகரிக்கும் சனத்தொகைக்கு வேண்டிய உணவு, உடை, உறைவிடம் ஆகிய அத்தியாவசியப் பொருள்களைப் போலவே கல்வி, சுகாதார வசதிகளும் வழங்கப்பட வேண்டும். இவ்வற்றைவிட இவர்களுக்குத் தொழிலும் வழங்கப்பட வேண்டும். ஆயின் இத்தேவைகள் அபிவிருத்தி

யடைந்துவரும் நாடுகளிலே உரிய முறையில் வழங்கப்படாமையினால் அதிகரிக்கும் சனத்தொகையானது அபிவிருத்திக்குக் குறுக்கீடாக இருக்கிறது.

துரித சனத்தொகை வளர்ச்சி, வளங்களின் பற்றாக்குறை, உள்ள வளங்களையும் உரிய முறையிற் பயன்படுத்திக் கொள்ளாமை போன்ற காரணிகள் ஒன்று சேர்ந்தவிடத்து அபிவிருத்தி ஏற்படுவது அரிது.

இயற்கை வளங்களைச் சுலபமாகப் பெற்றுக் கொள்வதற்குரிய வாய்ப்பு அபிவிருத்திக்கொரு தூண்டுகோலாக அமையும். வளங்கள் நிறைந்த ஐக்கிய அமெரிக்க நாடுகள், பிரித்தானியா, இரசியா இதற்குச் சான்று பகருகின்றன. இந்நாடுகளில் யாதேனுமொரு வளம் குறைவாகக் காணப்படின் அதனை இவை தமது மூலதனத்தைச் செலவிட்டு இன்னொரு நாட்டிலிருந்து இறக்குமதி செய்து கொள்ளுகின்றன. அநேகமாக, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் தமது வளங்களை மூலப் பொருள்களாக அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளுக்கு விற்பனை செய்கின்றன. ஆயினும், இப்பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்காமை காரணமாகவே அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலே மூலதனப் பற்றாக்குறை காணப்படுகின்றது. அபிவிருத்தியடைந்த நாடுகள், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலிருந்து கொள்வனவு செய்யும் அடிப்படைப் பொருள்களுக்குப் பதிலாக மாற்றுப் பொருள்களைப் பயன்படுத்துவதனாலும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் மூலதனச் சம்பாத்தியம் பாதிக்கப்படுகின்றது. இத்துடன், துரித சனத்தொகை வளர்ச்சி ஒரு பொதுவான இலட்சணமாகக் காணப்படுவதனால் கிடைக்கும் வருவாய் வாழ்க்கைக்குப் போதாமலிருக்கின்றது.

இது காரணமாகப் பயனுள்ள சேமிப்பும் அங்கே காணப்படுவதில்லை. சேமிப்புக் குறைவதனால் முதலீடும் குறைகின்றது. இதனால் உற்பத்தி குறைகின்றது. உற்பத்தி குறைவதனால் வருவாய் பாதிக்கப்படுகின்றது. அவை சுற்றோட்டமாக ஒன்றுடன் ஒன்று இணைந்துள்ளன.

அபிவிருத்திக்குக் கைகொடுக்கும் வர்த்தக அமையங்களும் முகாமைத்துவ முறைகளும், சிற்சில நாடுகளிலே இதனால்

போதியவளவு அபிவிருத்தியடையாத நிலையிலுள்ள உணவுப் பொருள்கள், பிற பொருள் வகைகள், சேவைகள், உற்பத்திகள் ஆகியவற்றுக்குத் தேவையான விவசாய நிலங்கள், தொழிற் சாலைகள், சிறு கைத்தொழில் தாபனங்கள் ஆகியன இந் நாடுகளிலே போதியளவு காணப்படுவதில்லை. இதுவும் அபிவிருத்தியை நிர்ணயிக்கின்ற ஒரு காரணியாகும். இந்நாடு களிலே மனித வளம் பெருமளவிற் காணப்படுகின்ற போதிலும், தேசிய உற்பத்திப் பணியில் ஈடுபடுத்தப்படக்கூடிய விசேட, பயிற்சி பெற்ற முயற்சியாளர், கைத்தொழில் நிபுணர்கள், எந்திரிகள், வைத்தியர், ஆசிரியர், ஆகியோர் போதியளவு காணப்படுவதில்லை.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளைச் சேர்ந்த மக்களுள் பெரும்பாலானோர் விவசாயத்தில் ஈடுபட்டவர்களாகக் காணப்படுகின்றார்கள். இதுவும், அபிவிருத்தியைப் பாதிக்கின்ற ஒரு காரணியாகும். மெலும், முன்னர் குறிப்பிடப்பட்டுள்ளவாறு. இந்த நாடுகளுள் அநேகமானவற்றின் பொருளாதாரம் எப்பொழுதும் தளம்புகின்ற கேள்வியை உடைய ஏற்றுமதிப் பொருள்கள் சிலவற்றிலேயே தங்கியிருக்கும். அவ்வாறே கிராமப்புறச் சனத்தொகை அதிகரிப்பது காரணமாக, விவ சாய நிலங்கள் துண்டாடப்படுதல், காணிப்பற்றாக்குறை, நிரந்தரமற்ற காணி உரிமை, பசளைப் பாவனை குறைதல், நீர் பற்றாக்குறை, இயற்கை இன்னல்கள் போன்றவை காரணமாக நுகர்வு விவசாயம் தேசிய தேவைகளையேனும் பூர்த்தி செய்வதற்குப் போதுமானதாகக் காணப்படுவதில்லை. எனவே விவசாயத்தில் மாத்திரம் தங்கியிருக்கும் நிலைமை அபிருத்திக்கு ஏற்றதாகமாட்டாது என்பது புலனாகும்.

உலகிலே அபிவிருத்தியடைந்துள்ள நாடுகள் அபி விருத்தியடைய ஆரம்பித்ததுடன், அந்நாடுகளிலே விவசாயத்தில் ஈடுபட்டிருந்தவர்களின் விகிதம் குறைந்து கைத்தொழிலில் ஈடுபட்டிருந்தவகளின் விகிதம் உயர்ந்தது. உதாரணமாக, பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அமெரிக்க மக்களுள் ஏறக்குறைய 75 சதவீதத்தினர் விவசாயத்திலே ஈடுபட்டிருந்தனரெனினும் 1989 களில் அது பத்து வீதம் வரை குறைந்தமையைக் கூறலாம். ஆயினும், அபிவிருத் தியடைந்துவரும் நாடுகளைச் சேர்ந்த மக்களுள் ஒரு சிறு பிரிவினரே கைத்தொழில்களில் ஈடுபட்டிருக்கக் காண்கின் றோம். உதாரணமாக 1981 இல் 12 சதவீத மானவர்களே நம் நாட்டில் உற்பத்தித்துறையில் ஈடுபட்டிருந்தனர். இந்நிலை யைப் போக்க வேண்டுமானால், இந்நாடுகள் கைத்தொழில்

மயமாக்குவதிலே கூடிய ஆர்வம் காட்டுதல் வேண்டும். ஆயின் கைத்தொழில் மயமாக்கத்திலும் பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படும். விவசாய மூலப் பொருள்களும் கனிப்பொருள் வளங்களும் காணப்படக்கூடினும், தேவையான மூலதனம், தொழினுணுக்க அறிவு, தொழிற்பயிற்சி, சத்தி வளம், உண்ணாட்டு வெளிநாட்டுச் சந்தை வாய்புகள் போதியளவு இல்லாமையினால் கைத்தொழில் மயமாக்கல் துரிதமாக ஏற்படுவதில்லை.

வேலையில்லாப் பிரச்சினை போலவே, வேலை போதாமையும் இந்த நாடுகளின் அபிவிருத்தியைப் பாதிக் கின்றது. சனத்தொகைப் பெருக்கத்திக்கு ஏற்ப வேலைவாய்ப்புக் கிடைக்காமையினால் தொழிலாளர் பிரிவினருள் குறிப்பிடத்தக்க தொகையினர் வேலையில்லாமல் இருக்கின்றனர். சில தொழி லாளர்களுக்கு விசேடமாக விவசாய வேலைகளிலே ஈடுபடு வோருக்கு வருடம் முழுவதும் வேலை கிடைப்பதில்லை. இது பருவ வேலை வாய்ப்பு அல்லது போதிய வேலையில்லாமை எனப்படும். குறிக்கப்பட்ட ஒரு தொழிலுக்குரிய பயிற்சியைப் பெற்ற ஒருவர் அவர் பெற்ற பயிற்சிக்கு ஏற்ற ஒரு தொழில் கிடைக்காமையினாற் பிறிதொரு தொழிலை மேற்கொள்ளுதல் குறைந்த தொழிலில் ஈடுபடுதல் எனப்படும். அதாவது வேலை போதாமை எனப்படும். எந்திரியொருவர் எழுது வினைஞராகக் கடமையாற்றுவது இதற்கு உதாரணமாகும். அவ்வாறே ஒருவர் பெற்ற பயிற்சிக்கு ஏற்ற தொழில் வாய்ப்புக் குறைவாக இருப்பதனால் அல்லது எதிர்பார்த்த ஊதியம் கிடைக்காமையினால், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலுள்ள படித்தவர்கள் தொழில் தேடி வேறு நாடுகளுக்குச் செல்கின்றனர். இது மூளைவெளியேற்றம் எனப்படும். இதுவும் அபிவிருத்திக்குக் குறுக்கீடாக அமைகின்றது. இவர்களுடைய கல்வியின் பொருட்டு ஒரு நாடு குறிப்பிடத்தக்க தொகையினை முதலீடு செய்திருக்கையில் அந்த முதலீட்டின் பயனை இன்னொரு நாடு பெறுகின்றது. இப்படியாகச் சுலபமாகக் கிடைக்கும் தொழிலாளர் வளத்திலிருந்து உரிய பயனைப் பெற்றுக் கொள்ளாமையினால், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் மனிதவளம் வீணாக்கப்படுகின்றது.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் ஏற்றுமதி செய்கின்ற பொருள்களுக்குக் குறைந்த விலையே கிடைப்பதனாலும் அவை இறக்குமதி செய்யும் பொருள்களுக்கு அதிக விலை செலுத்த வேண்டி இருப்பதனாலும் இந்நாடுகள் மோசமான வெளிநாட்டுச் செலாவணிப் பிரச்சினையை எதிர் நோக்கு கின்றன. இதனால் ஏற்படுகின்ற கொடுப்பனவு மீதிச் சிக்கல் களும் அபிவிருத்திப் பிரச்சினைகளுக்கு ஏதுவாக அமைகின்றன. இதனால் இந்நாடுகள் அபிவிருத்திக்குத் தேவையான இயந்திர சாதனங்கள் போன்றவற்றை இறக்குமதி செய்துகொள்ள முடியாமலிருக்கின்றன.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுள் அநேகமானவை கைக்கொள்ளும் கல்வி முறைகள் அபிவிருத்தித் தேவைகளுக்கு ஏற்றதாக அமைவதில்லை. இவற்றுள் அநேகமானவற்றின் கல்வி முறைகள் இன்னும் அபிவிருத்தித் தேவைகள் பற்றிப் போதிய கவனஞ் செலுத்தத் தவறியுள்ளன. இது அந்நாடுகள் குடியேற்றவாத ஆட்சி முறைக்குக் கீழ்ப்பட்டிருந்தமையினால் உண்டான ஒரு குறைபாடாகும். குடியேற்றவாத முறையின் கீழ்த் தொழிநுட்பக் கல்விக்கு அதிக கவனஞ் செலுத்தப் படவில்லை.

அபிவிருத்தியடைந்துள்ள நாடுகள் துரித அபிவிருத்தியடை வதற்கு அந்நாடுகளிற் காணப்பட்ட அமைதியான அரசியற் சூழலும் சமூகச் சூழலும் தூண்டுகோல்களாக அமைந்தன. ஆயின் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலே அப்படியான நிலைமைகள் தொடர்ந்து காணப்படாமை அபிவிருத்திக்குக் குறுக்கீடாகவுள்ள மற்றுமொரு காரணியாகும். குலங்கோத்திரம், இனம், மதம் ஆகியவற்றின் அடிப்படையில் வேற்றுமைகள் பெருகுதல், நாட்டு எல்லைப் பிரச்சினைகள், போராட்ட இயக்கங்கள் ஆகியன காரணமாக இந்நாடுகள் அபிவிருத் தியிலன்றி இந்த விடயங்களிலேயே கவனம் செலுத்தி வருகின்றன. அது மாத்திரமன்றி, ஆண்டுதோறும் அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட வேண்டிய பணத்திற் பெருந்தொகை, பயங்கரவாதம் போன்றவற்றை அடக்குவதற்குச் செலவு செய்யப்படுகின்றது. இதுவரை நாம் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள்


எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்தோம். ஆயின் பலதரப்பட்ட இப்பிரச்சினைகள் அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளிலே காணப்படுவதில்லையெனக் கருதலாகாது. சனத்தொகையின் பெருக்க வேகம் போதியளவுக்குமேற் குறைதல். போதிய தொழில் வாய்ப்பு இல்லாமை, சூழல் மாசுபடுதல், இயற்கை வளங்கள் குறைதல் போன்ற பல பிரச்சினைகளை இந்நாடுகளும் எதிர்நோக்கியுள்ளன. பொருளாதாரம் சம்பந்தமான இப்பிரச்சினைகளுக்கு மேலாகப் போதைப்பொருள், நோய், ஒழுக்கச் சீர்கேடு போன்ற பிரச்சினைகளும் அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளிலே காணப்படுகின்றன.

## ஆறாம் அத்தியாயம்

# அபிவிருத்திக்குரிய வழிவகைகள்

ஒரு நாடு அபிவிருத்தியடையும்போது அது பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றதெனக் கடந்த அத்தியாயங்களிலே கற்றுள்ளோம், அப்பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்கலாமென இந்த அத்தியாயத்தில் ஆராய்வோம்.

மனிதன், அபிவிருத்தியின் அச்சாணியாக இருப்பதனால் மனிதனுக்குள்ள பிரச்சினைகளுக்கு நாம் முதலிலே தீர்வு காண வேண்டியது அவசியமாகும். அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலே பெருகிவரும் சனத்தொகை, அந்நாடுகளுக்கு ஒரு வளமாக அமையக்கூடினும், ஒப்பீட்டு முறையிலே நோக்குமிடத்து, ஏனைய வளங்கள் வரையறையுடையனவாக இருப்பதனால் சனத்தொகையானது அபிவிருத்திக்குக் குறுக்கீடான ஒரு பிரச்சினையாக இருக்கக் கூடும். எனவே, சனத்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவது முக்கியமான ஒரு நடவடிக்கையாகும். குறைந்தபட்சம், தற்காலிகமாக வேனும் சனத்தொகையின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் அவசியமாகும். சனத்தொகையின் வளர்ச்சி வேகம் குறையும்போது அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்குப் போதிய அவகாசம் கிடைக்கும். சனத்தொகையைச் சார்ந்த பிற பிரச்சினைகளும் இதனாற் படிப்படியாகக் குறையக்கூடும். சிங்கப்பூர் இப்படியான நடவடிக்கை மூலம் நற்பயன் பெற்றுள்ள ஆசிய நாட்டுக்குரிய ஓர் உதாரணமாகும். ஐக்கிய நாடுகள் அமையத்தின் ஆதரவின் கீழ் இந்தப்பிரச்சினை பற்றி 1950 கள் முதல் கவனஞ் செலுத்தப்பட்டு வருகின்றது. அத்துடன் ஒவ்வொரு நாடும் இது சம்பந்தமாக மேற்கொள்ளும் எந்த




உரு 6.1 நாசச் சக்கரம்

ஒரு நடவடிக்கைக்கும் ஐக்கிய நாடுகள் அமையம் தொடர்ந்து ஆதரவளித்து வருகின்றது.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பொருளாதார முறைகள் பற்றிக் குறிப்பிடும்போது அந்நாடுகளின் வறுமையெனும் நாசச் சக்கரத்தின் செயற்பாடு அபிவிருத்தியைப் பாதிக்கின்றது என்பது தெளிவாகும். 6.1 ஆம் உருவைப் பார்த்து இந்த நாசச் சசக்கரம் பற்றி நீங்கள் விளங்கிக் கொள்ளலாம்.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் சனத்தொகை அதிகமாகவுள்ள போதிலும், வருமானக் குறைவு காரணமாகச் சேமிப்புக் குறைகின்றது. குறைந்த சேமிப்பு விகிதம் காரணமாக மூலதனச் சம்பாத்தியம் குறைகின்றது. இதனால் தேசிய மூலதனச் சம்பாத்தியம் குறையக் கைத்தொழில், விவசாயம் ஆகிய துறைகளிலே முதலீடு செய்யப்படும் தொகையும் குறைகின்றது. அதனால் உற்பத்தி குறைகின்றது. உற்பத்தி குறைவதனால் வருமானம் குறையும் என்பது தெளிவு. மேலும். உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதற்குச் செலவாகும் மூலதனச் சுமை காரணமாக, முதலீடு செய்வதற்குள்ள சிறிய மூலதனமும் ஒழிந்து போகின்றது. மூலதனப் பற்றாக்குறையை எவ்வாறேனும் நிவர்த்தி செய்து கொண்டால் பயன் தரவல்ல முதலீடுகளைச் செய்வதற்கு வேண்டிய பணம் கிடைக்கும். அப்போது உற்பத்தி உயரும்; உற்பத்தி உயர வருமானம் உயரும். அதனால் சேமிப்பும் உயரும். அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் மூலதன சம்பாத்தியத்தினை எவ்வாறு அதிகரிக்கச் செய்யலாம்? இதற்கு மிகவும் சிறந்த வழி தேசிய சேமிப்பைப் பெருக்குவதாகும். ஆயின், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலே, சேவைகளுக்கும் நலன்புரி நடவடிக்கைகளுக்கும் பண ஒதுக்கம் செய்த பின்னர், புதிய அபிவிருத்தித் திட்டங்களில் செலவிடுவதற்குச் சொற்ப தொகையான பணமே எஞ்சும். மேலும் இந்நாடுகளிலே, தனிநபர்களுடைய சராசரி வருமானம் குறைவாக இருப்பதுடன் அவர்களுடைய சேமிப்பு மட்டமும் மிகச் தாழ்வாக இருக்கின்றது. இந்த நாடுகளின் ஏற்றுமதி வருமானம் குறைந்த மட்டத்திலேயே இருக்கும். அது அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கே செலவிடப்படுகின்றது. உணவுப் பொருள்கள், துணி வகைகள், முன்னுரிமைபெற்ற அத்தியாவசியப் பொருட்கள் ஆகியனவே பெரும்பாலும் இதனைக் கொண்டு

இறக்குமதி செய்யப்படுகின்றன. ஏற்றுமதி மூலம் கிடைக்கும் வருமானம் குறைவு என்பதனாலும் உணவுப் பொருள்கள் முதலிய அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு அதிக செலவு ஏற்படுகின்றது என்பதனாலும் தேசிய சேமிப்பு மட்டத்தை உயர்த்துவது முடியாத காரியமாகின்றது. இப் படியான சூழலில், ஏற்றுமதி மூலம் கிடைக்கும் வருவாயை அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுத்துவது சிக்கலாகும்.

முதலீட்டுக்குத் தேவையான மூலதனத்தை நாட்டிலிருந்து பெற்றுக் கொள்ளுவது சிரமம் என்பதனால், அபிவிருத்தி யடைந்து வரும் நாடுகள் வெளிநாட்டுச் செலாவணியைப் பெருக்கிக் கொள்ளுவதற்கு முயலுதல் வேண்டும். இந்த நாடு கள் தமது ஏற்றுமதியைப் பெருக்குதல், பிறநாடுகளிலிருந்து கிடைக்கும் வருவாயைப் பெருக்குவதற்குரிய ஒரு வழியாகும். ஆயினும் இந்த நாடுகள் முக்கியமாக ஏற்றுமதி செய்கின்ற அடிப்படைப் பொருள்களுக்கு உலகச் சந்தையிலே நியாயமான விலை கிடைக்காமையினால் ஏற்றுமதி மூலம் கிடைக்கும் வரு வாயும் மட்டுப்படுத்தப்படுகின்றது. அது மாத்திரமன்றி, இப் பொருள்களுக்கு உலகச் சந்தையிற் காணப்படும் கேள்வியும் படிப்படியாகக் குறைந்து வருவதாகத் தோன்றுகின்றது. மறுபுறம், அபிவிருத்தியடைந்த நாடுகள் உற்பத்தி செய்யும் கைத்தொழிற் பொருள்களுக்குள்ள கேள்வி உயர்ந்து கொண்டு வருகின்றது. கேள்வி உயருவது போலவே அப்பொருள்களின் விலைகளும் உயர்ந் து கொண்டு போகின்றன. எனவே அபி விருத்தியடைந்துவரும் நாடுகள் பிறநாட்டு வருவாயைப் பெற் றுக் கொள்வதற் குரிய பயிர்கள் சிலவற்றில் மாத்திரம் தங்கி யிராது, தமது பொருளாதார முறைகளைப் பன்முகப் படுத்து வதற்குரிய பல வழிவகைகளை மேற்கொண்டுள்ளன. ஏற்று மதியைப் பன்முகப்படுத்துதல் இவ்வழி வகைகளுள் ஒன்று. இது வரை ஏற்றுமதி செய்யப்பட்ட சில அடிப்படைப் பொருள்களுடன் புதிய ஏற்றுமதிப் பொருள்கள் பலவற்றை உற்பத்தி செய்து பிறநாட்டு வருவாயைப் பெருக்குவதே அதன் நோக்கமாகும். எமது நாட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சிறு ஏற்றுமதிப் பயிர்ச்செய்கைத் திட்டம் மிகவும் முக்கியமான ஒரு எடுத்துக்காட்டாகும். அவ்வாறே எமது நாட்டிலும் தென் கொரியா, தாய்லாந்து போன்ற நாடுகளிலும் ஆடை கைத்தொழில், உல்லாசப் பிரயாணம் போன்ற துறைகளை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இவற்றை விட, பிறநாட்டுச் செலாவணியைப் பேணும் நோக்குடன் இந்தியா, பிறேசில், தென்கொரியா போன்ற நாடுகள் இறக்குமதிக்கு மாற்றீடான கைத்தொழில்களையும் அபிவிருத்தி செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

ஆயின், மேற்குறிப்பிட்ட வழிவகைகளுள் எதனைக் கைக் கொள்ளினும் சர்வதேச சந்தை அபிவிருத்தியடைந்த நாடுகளாற் கட்டுப்படுத்தப்படுவதனால் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் அவை எதிர்பார்க்கும் பலனைப் பெற்றுக் கொள்ள முடியா திருக்கின்றன. எடுத்துக்காட்டாக, ஆடைக் கைத்தொழிலை எவ்வளவுதான் அபிவிருத்தி செய்தாலும், அதனால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை அபிவிருத்தியடைந்த நாடுகள் பங்கீட்டு முறையின்படியே கொள்வனவு செய்கின்றன.

இவ்வாறாக, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலே, முதலீடு செய்வதற்குப் போதியளவு மூலதனம் உள்நாட்டி லிருந்தேனும் வெளிநாட்டிலிந்தேனும் கிடைக்கப் பெறாமையி னால் மூலதனப் பற்றாக்குறையினை நிவிர்த்தி செய்வதற்குக் கட்டாயமாக வெளிநாட்டு உதவிகளையும் பெற்றுக் கொள்ள வேண்டிய சூழ்நிலை உண்டாகின்றது. பிறநாட்டு உதவியின் கீழ் நிதி, இயந்திர சாதனங்கள், தொழினுணுக்க அறிவு ஆகியன நன்கொடையாகவும் கடனாகவும் வழங்கப்படுகின்றன. மூலதனம் சம்பந்தமான பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் நோக்குடன் பிறநாட்டு உதவியின் கீழ்க் கடன் பெறுவதனை அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள், மூலதனத்தைப் பெற்றுக் கொள்வதற்குரிய ஒரு வழியாகக் கருதுகின்றன. ஆயினும், இக்கடன்களுக்குச் செலுத்த வேண்டிய வட்டியினையும் தவணைப் பணத்தையும் நோக்கும்போழுது, அது அந்த நாடுகளால் தாங்க முடியாத ஒரு சுமையாகும் என்பது புரியும். எனவே அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் அபி விருத்தியடைந்த நாடுகளிடமிருந்து கடன்களைப் பெறும்போது அக்கடன்களைத் தமது பொருளாதார அபிவிருத்திக்கு ஏற்ற முறையிலே பயன்படுத்திக் கொள்வது மிக முக்கியமாகும். நன்கொடையாக ஒரு தொழிற்சாலை கிடைக்கின்றபோதுங்கூட, அத்தொழிற்சாலைக்குத் தேவையான மூலப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளுதல், தொழிற்சாலையைக் கொண்டு நடத்துதல், இயந்திர உபகரணங்களுக்குத் தேவையான உதிரிப் பாகங்களைப் பெற்றுக் கொள்ளுதல், உற்பத்தித்திறன், விநியோகம் ஆகியன பற்றி நீண்டகால நோக்கில் ஆராய்தல் வேண்டும். அவ்வாறே ஒரு கடனைப் பெற்றுக் கொள்ளும் போதும், அக்கடன் செலுத்தி முடிக்கப்பட வேண்டிய காலம், வட்டி வீதம் ஆகியன பற்றியும், அக்கடனுக்குரிய வேறு நிபந்தனைகள் பற்றியும், நன்கு ஆராய்தல் வேண்டும்.

பிறநாட்டு உதவியாகக் கிடைக்கும் வளங்களை நுகர்வுக்குப் பயன்படுத்திக்கொள்ளாது, கைத்தொழில், விவசாயத்துறைகளை அபிவிருத்தி செய்வதற்குப் பயன்படுத்துவது அபிவிருத்திக்குரிய ஒரு சிறந்த வழிமுறையாகும. கைத்தொழில், விவசாயத் துறைகளை அபிவிருத்தி செய்வது, தேசிய மூலதனச் சம் பாத்தியத்தைப் பெருக்குவதற்குரிய முக்கியமான ஒரு வழி யெனலாம். விவசாயத்துறையின் அபிவிருத்திக்கு உற்பத்தியைப், பெருக்குதல் வேண்டும். இதற்கு இரு வழிகளுள. பயிர்ச் செய்கைக் காணியைப் பெருக்குவது ஒன்று. மற்றது, அறு வடையைப் பெருக்குதல். ஆயினும், தற்போதைய சூழ்நிலையில், நீர் வழங்கள் மூலம் பயிர்ச்செய்கைக் காணியைப் பெருக்கு வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும், பயிர்ச்செய்கைக்கு உகந்த காணி குறைவு என்பதனால் அறுவடையை அதிகரிக்கச் செய்வதே சிறந்த வழியாகும். சுழற்சி முறைப் பயிர்ச் செய்கையைப் பின்பற்றுவதனாலும் பலவகையான பயிர்களைச் செய்கை பண்ணுவதனாலும் உற் பத்தியைப் பெருக்கிக் கொள்ளலாம். அது மாத்திரமன்று இந்த நாடுகளிலே காணப்படும் வேலை போதாமைப் பிரச்சி னைக்குரிய ஒரு பரிகாரமாகவும் இந்த வழியைக் கைக்கொள்ள லாம். அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் அரசாங்கங்களும் சர்வதேசத் தாபனங்களும் உற்பத்தியைப் பெருக்குவதற்குரிய விசேட திட்டங்களை அண்மைக் காலத்தில் ஆரம்பித்துள்ளன. இத்திட்டங்களின்படி, அதிக விளைச்சலைத் தரக்கூடிய புதிய கலப்புப் பிறப்பு விதை இனங்களை அறிமுகஞ் செய்தல், நீர்ப்பாசன வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல், செயற்கைப் பசளை, கிருமி கொல்லி மருந்து வகைகள் ஆகியனவற்றைப் பயன்படுத்துவதற்கு உதவியளித்தல், நல்ல விவசாய விரிவாக்கச் சேவைகளை வழங்குதல், விநியோக வசதிகளையும், கடன் வசதிகளையும் வழங்குதல் ஆகிய நடவடிக்கைகள் மூலமும் கூடிய பலனைப் பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கைத்தொழில் மயமாக்கும்போது, இறக்குமதிப் பொருள் களுக்குப் பதிலான பொருள்களை உற்பத்தி செய்வதற்குரிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதன் மூலம் அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகள், இறக்குமதியின் பொருட்டுப் பெருந் தொகையான மூலதனத்தைச் செலவிடுவதைத் தவிர்த்துக் கொள்ளலாம். முடியுமான சந்தர்ப்பங்களிலெல்லாம் பிறநாட்டு

இயந்திர சாதனங்களுக்கும் எரிபொருள்களுக்கும் ஏற்படும் செலவைக் குறைத்துக் கொள்ளத்தக்க முறையிலே, மனித உழைப்பு மூலம் அந்தந்த நாடுகளிலுள்ள வளங்களைப் பயன்படுத்துவது முக்கியமாகும். கைத்தொழில் மயமாக்கும் போது ஏற்ற தொழினுணுக்கத்தைக் கைக்கொள்ளுவதன் மூலம் வேலையில்லாப் பிரச்சினையைத் தவிர்த்துக் கொள்ளலாம். இந்தியாவிலே சீனிக் கைத்தொழிலிற் பயன் படுத்தப்படும் எளிய இயந்திர சாதனம் இதற்குரிய உதார ணமாகும்.

எவ்வாறாயினும் ஒரு நாடு காலாகாலமாகப் பிறநாட்டு உதவியிலே தங்கியிருப்பதைவிடச் சுயவல்லமையைக் கொண்டு வாழத்தக்க முறையிலே தேசிய உற்பத்தியைப் பெருக்கு வதுபோலவே பிறநாட்டு வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்கும் வழிவகைகளை வகுத்தல் முக்கியமாகும். இந்தக் குறிக்கோளை அடைவதற்கு எந்த ஒரு நாட்டினதும் உதவியைச் சாராத பொருளாதார முறை ஒன்றினை அமைத்தல் வேண்டும். இவ்வாறு, ஒரு நாடு சுய வல்லமையைக் கொண்டு வளர வேண்டுமானால் அந்த நாட்டிலே அரசியல், பொருளாதார. உறுதிப்பாடு இருக்கவேண்டியது மிகவும் அவசியமாகும்.

அபிவிருத்தியடைந்துவரும் அநேகமான நாடுகளிலே காணப்படும் கல்வி முறையும் சில சமூகத் தாபனங்களும் அபிவிருத்திக்குக் குறுக்கீடாக இருப்பதனால், அது பற்றி ஆராய்வதும் முக்கியமாகும். சமூக, பொருளாதார அபிவிருத்தியை அடைவதே கல்வி முறையின் முக்கிய குறிக் கோளாகும். கல்வி கற்பவரிடத்திலே நற்குணமும் நல்ல மனப்பாங்கும் உண்டானால் மாத்திரமே இந்தக் குறிக்கோள் கைகூடும். இந்த நாடுகளிலே சமுதாயத்துக்கு ஒவ்வாத மனப்பாங்குகள் ஏதும் காணப்படின் அவற்றைப் போக்கி நல்ல மனப்பாங்குகளை வளர்ப்பது கல்வித்துறையைச் சார்ந்த கடமையாகும்.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலே உற்பத்தியைப் பெருக்குவதற்கு வேண்டிய முகாமைத்துவம், தொழிற் பயிற்சி ஆகியவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்றதாகக் கல்வி முறை அமைய வேண்டும். இந்த நாடுகளை அபிவிருத்தி செய்வதற்குத் தொழினுணுக்கம், கைத்தொழில் ஆகியவற்றிலே

கைத்தேர்ச்சியும் அறிவுமுள்ளவர்களுடைய சேவைகள் மிகவும் அவசியம். கல்வி மூலமே இத்தகைய தேர்ச்சிகளையும், அறிவினையும் பெற்றுக்கொள்ளலாம், கைத்தொழிற் துறையினை அபிவிருத்தி செய்யும்போது தேவையான தேர்ச்சியுள்ளவர்கள் உருவாகத் தக்க முறையிலே கல்வி முறையினை அமைத்தல் வேண்டும். அதாவது கல்வி முறையை வேண்டியவாறு புனரமைப்புச் செய்தல் வேண்டும்.

## ஏழாம் அத்தியாயம்

# சர்வதேசத் தாபனங்கள்

எமது நாட்டுக்குப் போலவே பிற நாடுகளுக்கும் உதவி வழங்கும் பல சர்வதேசத் தாபனங்கள் பற்றிக் கடந்த ஆண்டு கற்றுள்ளீர்கள். உலகிலுள்ள பல்வேறு நாடுகள் இத் தாபனங்களிலே அங்கத்துவம் வகிக்கும் முறை பற்றியும் கற்றுள்ளீர்கள். நமது நாடும் ஐக்கிய நாடுகள் சபை, யுனிசெவ், அணிசேரா நாடுகள் இயக்கம், சார்க் அமையம் முதலிய பல தாபனங்களிலே அங்கத்துவம் வகிக்கின்றது. இத் தாபனங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு குறிக்கோளுடன் தாபிக்கப்பட்டுள்ளன. இந்தப் பாடத்திலே, உலகின் அபிவிருத்திக்குக் கைகொடுக்கின்ற சர்வதேசத் தாபனங்கள் பற்றியும், அவை எவ்வாறு அப்பணியினை நிறைவேற்று கின்றன என்பது பற்றியும் ஆராய்வோம்.

இரண்டாவது உலகப் போரினால் நிர்மூலமாக்கப்பட்ட பொருளாதார வளங்களைப் புனரமைப்புச் செய்வதற்கும், காலத்துக்குக் காலம் இக்கட்டான நிலையை அடைந்த பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் காண்பதற்குமாகப் பல சர்வதேசத் தாபனங்கள் உருவாக்கப்பட்டன.

உலக நாடுகளுக்கிடையிற் பெருந்தொகையான பணம் கைமாற்றப்படுவதால் சர்வதேச வியாபாரத்துறையில் முன்னர் நிலவிய சமதன்மையும் செலாவணியுறுதிப்பாடும் அற்றுப் போயின. இது எல்லைகளை வகுப்பதற்கு வழிவகுத்த மையினால், ஒருபுறம், வியாபாரத் துறை முன்னேற்றம் தடைப்பட்டது; மறுபுறம், இந்த எல்லைகளைக் கட்டுப் படுத்துவதற்குப் பல்வேறு சர்வதேசத் தாபனங்கள் தோன்ற லாயின. 1944 இல் 44 அரசாங்கங்களின் பிரதிநிதிகள் பிரித்தானியாவின் ஹூட் என்ற நகரிற் கூடி வகுத்த நிபந்தனை களின்படி 1945 இல் உலக வங்கியும் (**World Bank**) சர்வதேச நிதியமும் (**IMF**) உருவாக்கப்பட்டன. சர்வதேச ஒத்துழைப்பை

வளர்த்தல், சர்வதேச வர்த்தகத்தை விரிவுபடுத்துதல், சர்வதேச வர்த்தகத்திலே சமநிலையான வளர்ச்சியை ஏற்படுத்தி, உறுப்பு நாடுகளிலே வேலை வாய்ப்புக்களையும் தனிநபர் வருமானத் தரத்தையும் உயர்த்தல், உற்பத்தி வளங்களை அபிவிருத்தி செய்தல் ஆகியன சர்வதேச நிதியத்தின் குறிக்கோள்களுள் மிக முக்கியமான சிலவாகும். உறுப்பு நாடுகள் மத்தியில் செலாவணியுறுதிப்பாட்டை ஏற்படுத்துவது மற்றுமொரு முக்கியமான குறிக்கோளாகும். உறுப்பு நாடுகளிடமிருந்து குறிக்கப்பட்ட ஒரு விகிதப்படி சேர்க்கப்பட்ட பெருந்தொகையான பணம் இந்நிதியிலுள்ளது. இப்பணம், உறுப்பு நாடுகளின் கொடுப்பனவு நிலுவைப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்குக் குறுகிய காலக் கடன்களாக வழங்கப்படுகின்றது.

## சர்வதேச புனரமைப்பு, அபிவிருத்தி வங்கி (IBRD)

இது 1945 இலே தாபிக்கப்பட்டது. ஆரம்பத்திலே இத்தாபனம், இரண்டாவது உலகப் போரின் பின்னர் ஐரோப்பாவிலேற்பட்ட புனரமைப்பு நடவடிக்கைகளிலே கவனஞ் செலுத்தியது. இப்போது பிரயோசனமான முதலீடுகளைச் செய்வதற்கு நியாயாமன வட்டிக்குக் கடன் வழங்கி, மூலதனமில்லாத உறுப்பு நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்குக் கைகொடுத்து உதவுவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. கடன்கள், நேராக அரசாங்களுக்கும், அரசாங்கங்களின் உறுதியைப் பெற்றுத் தனிப்பட்ட முயற்சியாளருக்கும் வழங்கப்படுகின்றன. இந்த வங்கியுடன் இணைந்த தாபனங்கள் இரண்டுள. ஒன்று சர்வதேச அபிவிருத்திச் சங்கம் (IDA). மற்றது, சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் (IFC). பொதுவாக "உலக வங்கி" எனப்படுவது, சர்வதேசப் புனரமைப்பு அபிவிருத்தி வங்கியையும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தையும் கொண்டமைந்துள்ளதாகும். உறுப்பு நாடுகளின் நிதி வளங்களைப் பயன்படுத்தி அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே உலக வங்கியின் குறிக்கோள். உலக வங்கியில் 150 நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன. இந்த 150 உறுப்பு நாடுகளினதும் பங்களிப்புப் பணமே இவ்வங்கியின் மூலதனமாகும். ஆயினும் இந்தப் பங்களிப்புப் பணத்திற் கூடிய பகுதி அபிவிருத்தியடைந்த

நாடுகளாலேயே வழங்கப்படுகிறது. ஆயின் வங்கியின் தாபக அதிகாரப் பத்திரத்திலே காட்டப்பட்டுள்ளதின்படி, பிரயோசனமான நடவடிக்கைகளுக்கு மாத்திரமே வங்கி கடன்களை வழங்குதல் வேண்டும். கடன்களைப் பெறுகின்ற வளர்முக நாடுகளின் பொருளாதார அபிவிருத்தி துரிதப்படுத்தப்பட்ட வேண்டும். அவை கடன்களைத் திருப்பிச் செலுத்துவதிற் கண்ணும் கருத்துமாக இருத்தல் வேண்டும். கடன்கள் அரசாங்கங்களுக்கும் அரசாங்கங்களினால் உறுதி செய்யப்படும் தாபனங்களுக்கும் மாத்திரமே வழங்கப்படும். கொடுக்கப்படும் கடன் பணத்தைக் கொண்டு குறிக்கப்பட்ட ஓர் உறுப்பு நாட்டிலிருந்து பொருள்களைக் கொள்வனவு செய்ய வேண்டுமெனக் கட்டுப்படுத்த முடியாது. 1985, 1986 ஆம் ஆண்டுகளுக்கென உலக வங்கியினால் வழங்கப்பட்ட கடன் தொகைகளும், அத்தொகைகள் பல்வேறு துறைகளுக்கிடையிற் பகிர்ந்தளிக்கப்பட்ட முறையும் 7.1 ஆம் அட்டவணையில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளதின்படி கூடுதலான கடன்கள் விவசாய அபிவிருத்தி, கிராமிய அபிவிருத்தி, சக்தி வலு, போக்குவரத்துத்துறை ஆகியவற்றுக்கே வழங்கப் பட்டுள்ளன. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலே, கைத்தொழில் அபிவிருத்திக்கு மூலதனப் பிரச்சினை பெரிய முட்டுக்கட்டையாக இருக்கின்றதென மேலே கண்டுள்ளோம். ஆயினும் ஒப்பீட்டு முறையில் நோக்கும் போது, கைத்தொழில் அபிவிருத்திக்கு உலக வங்கி வழங்கும் கடன் அவ்வளவு முக்கியமானதல்ல என்பதை 7.1 ஆம் அட்டவணை எடுத்துக் காட்டுகின்றது.

விவசாய அபிவிருத்திக்கும் கிராமிய அபிவிருத்திக்கும் கடன் பெற்ற நாடுகளுள் பிறேசில், இந்தியா, நைஜீரியா, இந்துனீசியா, பாக்கிஸ்தான் ஆகியநாடுகள் முக்கிய இடம் பெறுகின்றன. அபிவிருத்தி நிதிச் சங்கத்துக்கூடாகக் கடன் பெற்ற முக்கியமான நாடுகளுள் துருக்கி, இந்தியா, சிலீ, மொறோக்கோ, இக்வதோர், பாகிஸ்தான் முதலியன அடங்கும். சத்தி வளத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு, இந்தியா, பிறேசில், தென் கொரியா, சீனா, துருக்கி ஆகிய நாடுகள் பெருந்தொகையான பணத்தைக் கடனாகப் பெற்றுள்ளன. கைத்தொழில் அபிவிருத்திக்காக இந்தியா, ஹங்கேரி, சயறே போன்ற நாடுகள் கடன் பெற்றுள்ளன. 1986 யூன் வரை, இலங்கை, உலக வங்கியிடமிருந்து 12 திட்டங்களுக்குக் கடன் பெற்றுள்ளது. இந்தக் கடன்களின் மொத்தத் தொகை 210.7 மில்லியன் அமெரிக்க டொலராகும்.

Central

சர்வதேச புனரமைப்பு, அபிவிருத்தி வங்கி வழங்கிய கடன்கள் பற்றிய விபரங்களும் முழுத்தொகையும் விதமும்
(மில்லியன் அமெரிக்க டொலர்)

| | 1985 | | 1986 | |
|---|---|---|---|---|
| விவசாய கிராமிய அபிவிருத்தி | 2389.6 | 21.0 | 3761.7 | 28.5 |
| அபிவிருத்தி நிதிச் சங்கம் | 506.1 | 4.5 | 1324.7 | 10.1 |
| கல்வி | 514.9 | 4.5 | 577.7 | 4.4 |
| சத்தி, எண்ணெய், வாயு, நிலக்கரி | 1193.7 | 10.5 | 213.0 | 6.1 |
| வலு | 2171.6 | 19.1 | 2423.2 | 18.4 |
| கைத்தொழில் | 636.6 | 5.6 | 757.2 | 5.7 |
| திட்டங்களுக்கு அல்லாத கடன் | 435.0 | 3.8 | 900.0 | 6.8 |
| சனத்தொகை, சுகாதாரம், போசணை | 160.9 | 1.4 | 166.6 | 1.3 |
| சிறு முயற்சி | 553.1 | 4.9 | 264.5 | 2.0 |
| தொழினுணுக்க உதவி | 42.5 | 0.4 | 60.1 | 0.5 |
| தொலைபன்னி | 59.6 | 0.5 | 24.5 | 02. |
| போக்குவரத்து | 1866.9 | 16.4 | 1253.8 | 9.5 |
| நகர அபிவிருத்தி | 204.6 | 1.8 | 944.5 | 7.2 |
| நீர்ப்பாசனமும் வடிகாலமைப்பும் | 622.8 | 5.5 | 507.3 | 3.8 |

அட்டவணை 7.1

அட்டவணை 7.2

1985 - 86 வரை அபிவிருத்திச் சங்கம் வழங்கிய கடன்கள் பற்றிய விபரங்களும் வீதமும்
(மில்லியன் அமெரிக்க டொலர்)

| | 1985 | | 1986 | |
|---|---|---|---|---|
| விவசாய கிராமிய அபிவிருத்தி | 1359.7 | 44.9 | 1015.7 | 32.3 |
| அபிவிருத்தி நிதிச் சங்கம் | 59.3 | 2.0 | 124.5 | 4.0 |
| கல்வி | 412.9 | 13.6 | 251.5 | 8.0 |
| சத்தி, எண்ணெய், வாயு, நிலக்கரி | 137.7 | 4.5 | 18.1 | 0.6 |
| வலு | 78.7 | 2.6 | 363.7 | 11.6 |
| கைத்தொழில் | 0.9 | 0.3 | 63.9 | 2.0 |
| திட்டங்களுக்கு அல்லாத கடன் | 194.2 | 6.4 | 421.0 | 13.4 |
| சனத்தொகை, சுகாதாரம், போசணை | 30.1 | 1.0 | 252.9 | 8.1 |
| சிறு முயற்சி | 7.5 | 02 | 10.0 | 0.3 |
| தொழினுணுக்க உதவி | 67.2 | 2.2 | 77.8 | 2.5 |
| தொலைபன்னி | 62.0 | 2.0 | 25.9 | 0.8 |
| போக்குவரத்து | 271.8 | 9.0 | 244.4 | 7.8 |
| நகர அபிவிருத்தி | 180.0 | 5.9 | 173.0 | 5.5 |
| நீர்ப்பாசனமும். வடி காலமைப்பும் | 158.0 | 5.2 | 97.5 | 3.1 |

விவசாய கிராமிய அபிவிருத்திப் பிரிவின் கீழ் வழங்கப்படும் கடன் கடற்றொழில், காடுவளர்ப்பு, நீர்ப்பாசனமும் வடிகால் அமைப்பும், கால்நடை வளர்ப்பு, பல்லாண்டுப் பயிர்கள், ஆராய்ச்சிகள், திட்டவேலைகள் ஆகிய நடவடிக்கைகளுக்குப் பங்கிடப்படுகின்றது. சக்தி உற்பத்திக்காக வழங்கப்படும் கடனும் நீர்மின்வலு, எண்ணெய், வாயு, நிலக்கரி ஆகிய பிரிவுகளுக்குப் பங்கிடப்படுகின்றது. கைத்தொழிற் கடனின் கீழ் எந்திரவியல், பசளையும் பிற இரசாயனப் பொருள்களும், இரும்பும் உருக்கிரும்பும், கடுதாசி உற்பத்தி, துணி உற்பத்தி, சுரங்க வேலை ஆகியவற்றுக்கு கடன் வழங்கப்படுகின்றது. அது மாத்திரமன்றி, உல்லாசப் பிரயாணக் கைத்தொழில், தரைப் போக்குவரத்து, துறைமுக அபிவிருத்தி, விமானத்தள அபிவிருத்தி போன்றவற்றுக்கும் உலக வங்கி கடன் வழங்கு கின்றது. உற்பத்தி நடவடிக்கைகளுக்கு மாத்திரமன்றிச் சுகாதார நடவடிக்கைகள், போசணை போன்ற நடவடிக் கைகளுக்கும் கடன் வழங்கப்படுகிறது. எதிர்பாராத இன்னல்கள் குறித்தும் உலக வங்கியிடமிருந்து கடன் பெற்றுக் கொள்ளலாம். 1985 இல் மெக்சிக்கோ நகரில் ஏற்பட்ட பெரிய பூமி நடுக்கத்தின் பின்னர் புனரமைப்புக்கும் திருத்த வேலைகளுக்கு மென வழங்கப்பட்ட கடன் இதற்கு உதாரணமாகும்.

## சர்வதேச அபிவிருத்திச் சங்கம் (IDA)

சர்வதேச புனரமைப்பு அபிவிருத்தி வங்கி மூலம் உருவான தாபனங்கள் இன்னும் இரண்டுள. 1956 இல் ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச நிதியச் சங்கமும் 1960 இல் ஆரம் பிக்கப்பட்ட சர்வதேச அபிவிருத்திச் சங்கமுமே அவையாகும். ஓர் அரசாங்கத்தின் பிணையின்றி, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் முன்னுரிமை பெற்ற திட்டங்களுக்கு வட்டியில்லாத ஐம்பது வருட நீண்டகாலக் கடன்கள் இத்தாபனத்தினால் வழங்கப்படுகின்றன. இந்தக் கடன்களுக்குரிய தயவுக் காலம் 10 ஆண்டு.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுள் மிகவும் வறிய நாடுகளுக்கு உலக வங்கியின் நிபந்தனைகளைவிடத் தளர்ந்த நிபந்தனைகளின்படி கடன்களை வழங்குவதற்கென்றே சர்வதேச அபிவிருத்திச் சங்கம் தாபிக்கப்பட்டது. எடுத்துக் காட்டாக, 1984 இல் 791 டொலருக்குக் குறைந்த தனிநபர் மொத்தத் தேசிய உற்பத்தியைக் கொண்டிருந்த நாடுகள்

வறிய நாடுகளாகக் கணிக்கப்பட்டன. இந்தச் சங்கத்தின் நிதியின் பெரும்பகுதி உறுப்பு நாடுகளின் பங்களிப்பாகும். இதனை விட, ஏனைய அங்கத்துவ நாடுகளின் நிதி, வங்கியின் வருவாயிலிருந்து ஒதுக்கப்படும் நிதி, திருப்பிச் செலுத்தப் படும் கடன் தொகை ஆகியவற்றை இந்நிதி கொண்டமையும். உலக வங்கியைப் போன்று, இத்தாபனத்தினைப் பொறுத்த மட்டிலும், அதிக நிதியைப் பங்களிப்புச் செய்துள்ள அபிவிருத்தியடைந்த நாடுகளே, இத்தாபனத்தின் கொள்கையை வகுப்பதிலே செல்வாக்குக் கொண்டிருப்பதாகத் தோன்றுகின்றது. விவசாய, கிராமிய, அபிவிருத்திகள், சக்தி நடவடிக்கைகள் முதலியவற்றுக்கே இத்தாபனமும் அதிக கடன்களை வழங்கியுள்ளது. 1986 இல் இத்தாபனம் இலங்கையின் நான்கு திட்டங்களுக்கு கடன் வழங்கியது.

சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து கடன் கோரும் விண்ணப்பங்கள் எப்பொழுதும்,கையிலுள்ள நிதித் தொகையை மிஞ்சும். எனவே, உள்ள பணத்தைச் சங்கம் எப்பொழுதும் கவனமாகவே பங்கிட்டுக் கொடுக்க வேண்டியுள்ளது. சாதாரணமாகக் கொடுக்கப்பட்டுள்ள கடன்களில் 80 சத வீதத்திற்கு அதிகமான தொகை 410 அமெரிக்க டொலருக்குக் குறைந்த தனிநபர் மொத்தத் தேசிய உற்பத்தியையுடைய நாடுகளுக்கே கொடுக்கப்படிடுள்ளது. இச்சங்கத்தின் கடன்கள் அபிவிருத்திக்கு ஊக்கமளித்துள்ளதாகவும், இச்சங்கம் விசேட ஆர்வத்துடன் நடவடிக்கைகளை மேற்கொண்ட தெற்காசிய நாடுகளிலே, விவசாய உற்பத்தி உயர்ந்தமையினால் உணவுப் பொருள்களின் இறக்குமதி குறைந்துள்ளதாகவும் தோன்றகின்றது.

## ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)

1966 இல் நிறுவப்பட்ட இவ்வங்கியின் தலைமை அலுவலகம் பிலிப்பீன்சு நாட்டு மணிலா நகரத்திலுள்ளது. ஆசிய பசிபிக் வலயத்தின் அபிவிருத்திக்கு வேண்டிய நிதியைத் தனியார்துறை, அரசாங்கத்துறை ஆகிய இரு மூலங்களிலுமிருந்து பெற்றுக் கொள்ளுதல் ; பொருளாதாரக் கொள்கைகளை

இணைப்பாக்கம் செய்யும்போது உறுப்பு நாடுகளுக்கு உதவி வழங்குதல் ; அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தொழினுணுக்க உதவியைப் பெற்றுக் கொடுத்தல் என்பனவே இந்த வங்கியின் முக்கிய குறிக்கோள்களாகும்.

இவ்வங்கி, ஆசிய பசிபிக் பிராந்தியத்தைச் சேர்ந்த 31 நாடுகளையும் இப்பிராந்தியத்துக்கு வெளியேயுள்ள மேற்கு ஐரோப்பா, அமெரிக்கா, போன்ற 14 நாடுகளையும் உறுப்பு நாடுகாளகக் கொண்டமைந்துள்ளது. உறுப்பு நாடுகளின் பங்களிப்பு மூலமே வங்கிக்கு நிதி கிடைக்கின்றது. இந்த வங்கிக்கும் பிராந்தியத்துக்கு வெளியே அமெரிக்காவின் தலைமையிலுள்ள உறுப்பு நாடுகளினாலேயே அதிக நிதி வழங்கப்பட்டுகின்றது. இதனால் இந்த நாடுகளும் இந்த வங்கியின் நிதி நிலையைக் கட்டுப்படுத்துவதிற் செல்வாக்குடையனவாக இருக்கின்றன. அத்துடன் இவ் வங்கி பிற மூலதன மூலங்களிலிருந்தும் நிதியைக் கடனாகப் பெற்றுக் கொள்ளுகின்றது. இந்த வங்கியினால் மிகவும் தாழ்ந்த அபிவிருத்தி மட்டத்திலிருக்கும் உறுப்பு நாடுகளுக்குச் சகாயமான நிபந்தனைகளின்படி கடன்கள் வழங்குவதற்கென ஆசிய அபிவிருத்தி வங்கி எனப்படும் வங்கி 1974 இல் உருவாக்கப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கியானது ஏனைய சர்வதேச தாபனங்களுடனும் சேர்ந்து செயற்பட்டு வருகின்றது. இது, உலக வங்கி, ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம், இஸ்லாமிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நம்பிக்கை நிதி ஆகியவற்றுடன் இணைந்து திட்டங்களுக்கு நிதி வழங்குகின்றது. அவ்வாறே, இவ்வங்கி ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் பிராந்தியப் பிரதிநிதியாகவும் செயற்படுகின்றது.

1984 இல் வழங்கப்பட்ட கடன்களுள் 34 % சத்தி சம்பந்தமான திட்டங்களுக்கே வழங்கப்பட்டது. தேசிய சத்திப் பிறப்பாக்கிகளின் அபிவிருத்திக்கு அதிக கவனஞ்செலுத்தப்பட்டது. பங்களதேஷில் வாயு உற்பத்திக்கும், பிலிப்பீன்சில் நிலக்கரிக் கைத்தொழிலுக்கும், தாய்லாந்தில் இலிக்கனைற்று உற்பத்திக்கும், லாவோஸ், பாகிஸ்தான், மலேசியா ஆகிய நாடுகளில்

மின்வலு உற்பத்திக்கும் கடன்கள் வழங்கப்பட்டன. அதுமாத்திர மன்றி இருக்கின்ற வலுச் சக்தி மூலங்களின் வினைத்திறனை அபிவிருத்தி செய்வதற்கெனப் பங்களதேஷ், நேபாளம், பிலிப் பீன்சு ஆகிய நாடுகளுக்கு கடன் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. 1986 இல் இலங்கையின் நான்கு திட்டங்களுக்கு மாத்திரமே அபிவிருத்தி வங்கியினால் கடன் அனுமதிக்கப்பட்டது. இரண்டாவது கைத்தொழில் அபிவிருத்தித் திட்டம், கல்வித்துறை சார்ந்த இடைநிலைத் தொழிற்றுறைப் பயிற்சித் திட்டம், நகர அபிவிருத்தி சார்ந்த மாநகரத் திட்டமும் முகாமைத்துவ திட்டமும், நீர்ப்பாசனம், சுகாதார முறைகள் ஆகியவற்றைப் புனரமைக்கும் திட்டம் ஆகியனவே அந்நான்கு திட்டங்களுமாகும்.

விவசாயம், விவசாயப் பொருள்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களுக்கும் 34 வீதக் கடன்கள் வழங்கப்பட்டன. பாக்கிஸ்தானின் நீர்ப்பாசனத் திட்டங்களுக்கும், ஒரு முக்கிய நீர் வழங்கும் திட்டத்துக்கும், இந்துனீசியாவின் குறைந்த வருமானம் பெறும் விவசாயிகளின் மிருகவள அபிவிருத்தி, ஓயில்பாம் பயிர்ச்செய்கை, கடற்றொழில் ஆகியவற்றுக்கும், மலேசியா, லாவோஸ் ஆகிய நாடுகளின் காட்டுக் கைத்தொழிலுக்கும், இலங்கையின் காட்டு வளர்ப்புத் திட்டங்களுக்கும் கடன்கள் வழங்கப்பட்டன. இலங்கையின் கிரிந்தி ஒய திட்டத்தின் முதலாம், இரண்டாம் கட்டங்கள் இரண்டிலும் மிருகவள அபிவிருத்தி, காட்டு வளர்ப்புத் திட்டம் போன்றவற்றைச் செயற்படுத்துவதற்கு ஆலோசகர்களின் சேவைகள் இத்தாபனத்தினால் ஒழுங்கு செய்து கொடுக் கப்பட்டன.

போக்குவரத்து, செய்திப் பரிமாற்ற நறிவடிக்கைகளுக்கு 17 வீதக் கடன்கள் வழங்கப்பட்டன. இந்தக் கடன்கள் இந்துனீசியா, பப்புவாநிவ்கினி, சொலமன் தீவுகள் ஆகியவற்றின் பெருந்தெருக்களை அபிவிருத்தி செய்வதற்கும் பங்களாதேஷின் புகையிரப் பாதைகளின் அபிவிருத்திக்கும், இந்துனீசியா, மலேசியா ஆகிய நாடுகளின் துறைமுக அபிவிருத்தி வேலை களுக்கும், தாய்லாந்தின் தந்தித் தொடர்பு வேலைகளுக்கும் ஒதுக்கப்பட்டன.

ஆசிய அபிவிருத்தி வங்கியானது, இதுவரை 109 திட்டங்களுக்குத் தொழினுணுக்க உதவிகளைப் பெற்றுக் கொடுத்துள்ளது. இவற்றுள் 46 — விவசாயத் துறையைச் சார்ந்தனவாகும். வங்கியினால் கடன் வழங்கப்பட்ட திட்டங்களுள் 27 திட்டங்கள் 1984 இல் பூர்த்தியடைந்தன. இப்படியான நடவடிக்கைகளை விட, அரசாங்கத் துறையைச் சார்ந்த முயற்சிகளை தனியார் துறைக்குக் கையளித்தல், கிராமிய அபிவிருத்தி, நிதி மூலங்களின் வினைத்திறனை அபிவிருத்தி செய்தல் ஆகியன சம்பந்தமான சம்மேளனங்கள், கருத்தரங்குகள் ஆகியவற்றையும் ஆசிய அபிவிருத்தி வங்கி நடத்தியுள்ளது.

## கொழும்புத் திட்டம் (Colombo Plan)

1950 ஜனவரி மாதம் கொழும்பில் நடத்தப்பட்ட பொதுநலவாய நாடுகளைச் சேர்ந்த வெளிவிகார அமைச்சர்களின் கூட்டத்திலே, இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட அப்போதய நிதி அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜனவர்த்தன அவர்களினதும் அவுஸ்திரேலியப் பிரதிநிதி சேர் பேசி ஸ்பெண்டர் அவர்களினதும் தலைமையிலே தெற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளினது பொருளாதார, சமூக் முன்னேற்றத்துக்கான ஒத்துழைப்புத் திட்டமொன்று வரையப்பட்டது, கொழும்புத் திட்டமெனக் குறிப்பிடப்படும் இத்திட்டம் 1951 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. முதலில் பொதுநலவாய மண்டலத்தைச் சேர்ந்த ஐந்து நாடுகள் சேர்ந்து உருவாக்கிய இத்திட்டத்திலே, பொதுநலவாய மண்டலத்தைச் சாராத நாடுகளும் பின்னர் சேர்ந்துள்ளன. அப்கானிஸ்தான், அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், பூட்டான், பர்மா, கனடா, பியூஜி, இந்தியா, இந்துநீசியா, மாலைதீவுகள், நேபாளம், நியுசிலாந்து, பாகிஸ்தான், பப்புவா நிவ்கினி, பிலிப்பீன்சு, சிங்கப்பூர், தாய்லாந்து, பெரிய பிரித்தானியா, அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகிய நாடுகள் இப்போது இதில் அங்கத்துவம் வகிக்கின்றன. இதன் நிருவாகச் செலவுக்காக உறுப்பு நாடுகள் ஒரு சமமான தொகையைப் பங்களிப்பாகச் செலுத்துகின்றன. ஒரு மத்திய திட்டமேனும், தேசிய அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தேவையான நிதியை வழங்குவதற்கென ஒதுக்கப்பட்ட ஒரு பொதுவான நிதியேனும் இதனிடம் கிடையாது.

தேசிய திட்டங்களுக்கு மாத்திரமே இத்திட்டத்தின் கீழ் மூலதன உதவி வழங்கப்படுகின்றது. இது அபிவிருத்தி யடைந்துள்ள உறுப்பு நாடுகளிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்றது. விவசாயம், செய்திப் பரிமாற்றம், சத்தி, கல்வி, சுகாதாரம் போன்ற சமூகப் பொருளாதார அபிவிருத்திக்குரிய எல்லாத் துறைகள் பற்றியும் கவனம் செலுத்தப்படுகின்றது. தொழினுணுக்க உதவியின் கீழ் நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல், பயிற்சி பெறுவதற்குரிய புலமைப் பரிசில்களை வழங்கல், விவசாய கடற்றொழில், கைத்தொழில் திட்டங்களை வரைதல், கல்வி, சுகாதாரம் ஆகிய துறைகளுக்கும் சமூகப் பொருளாதார அபிவிருத்திக்குரிய பிற துறைகளுக்கும் உதவி வழங்கும் பொருட்டு பயிற்சியளித்தல், ஆராய்ச்சிகளுக்குத் தேவையான உபகரணங்களை வழங்குதல் ஆகியனவும் மேற்கொள்ளப் படுகின்றன. 1983 இல் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களுள் அவுஸ்திரேலியாவின் உதவியைக் கொண்டு பங்களாதேஷில் குளாய்க் கிணறுகளை அமைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட திட்டமும், பெரிய பிரித்தானியாவின் உதவியைக் கொண்டு நேபாளத்தில் ஆரம்பிக்கப்பட்ட வனப்பாதுகாப்புத் திட்டமும், நியுசிலாந்தின் உதவியைக் கொண்டு பியூஜி தீவுகளில் மேற் கொள்ளப்பட்ட மண்ணாராய்ச்சித் திட்டமும், அமெரிக்காவின் உதவியைக் கொண்டு பங்களாதேஷில் மேற்கொள்ளப்பட்ட கிராமிய மின் வழங்கல் திட்டமும் முக்கியமான சிலவாகும். நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதில் யப்பான், அவுஸ்திரேலியா, ஐக்கிய அமெரிக்க நாடுகள், பெரிய பிரித்தானியா, நியுசிலாந்து, கனடா ஆகிய நாடுகள் ஒத்துழைத்து வருகின்றன.

உறுப்பு நாடுகளிலே போதைப் பொருள்களால் உண்டாகின்ற தீய விளைவுகளைக் கருத்திற் கொண்டு, போதைப் பொருள்களுக்கு அடிமையாகி உள்ளவர்களின் புனர்வாழ்வுக்கான திட்டமொன்று 1973 இல் வகுக்கப்பட்டது. போதைப் பொருள்களைத் துர்ப்பிரயோகஞ் செய்வதற்குரிய காரணங்களைப் போக்குதல், போதைப் பொருள்களுக்கு அடிமைகளாகுபவர்களுக்குரிய திருத்த முறைகளைக் கையாளல், அவர்களைப் புனரமைப்புச் செய்தல், போதைப் பொருள்களை எடுத்துச் செல்வதைக் தடை செய்தல் ஆகியன இதன் முக்கிய குறிக்கோள்களாகும். இத்தாபனம் மற்றுமொரு முக்கியமான பணியையும் மேற்கொண்டு வருகின்றது. அதாவது

போதைப் பொருள்களின் தீமைகள் பற்றிக் கருத்தரங்குகளை நடத்துவதுடன், அவை பற்றி வெளிவந்துள்ள நூல்கள், ஏடுகள் முதலியவற்றை உறுப்பு நாடுகளுக்கு விநியோகஞ் செய்தும் வருகின்றது.

## தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கம் அல்லது ஆசியான் (ASEAN)

தாய்லாந்தின் பங்கொக் நகரில் 1967 இல் தாபிக்கப்பட்ட இத்தாபனம் தென்கிழக்கு ஆசிய வலயத்தின் பொருளாதார முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துவதையும் அதன் உறுதிப்பாட்டை மேம்படுத்துவதையும் குறிக்கோள்களாகக் கொண்டுள்ளது. இந்துனீசியா, மலேசியா, பிலிப்பீன்சு, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளே முதலில் இதில் அங்கத்துவம் வகித்தன. 1984 இல் புறூணையும் இதிற் சேர்ந்து கொண்டது.

ஆரம்பத்தில் இதிலே சம்பந்தப்பட்ட ஐந்து நாடுகளும் நட்பு, ஒத்துழைப்பு ஒப்பந்த மொன்றிற் கைச்சாத்திட்டன. எல்லா நாடுகளினதும் சுதந்திரம், இறைமை ஆகியவற்றுக்கு மதிப்பளித்தல், பிற நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களிலே தலையிடாமை, சமாதானமான முறைகளிலே பிணக்குகளைத் தீர்த்து வைத்தல், இந்த நாடுகளுக்கிடையிற் பயனுள்ள ஒத்துழைப்பை உண்டாக்குதல் ஆகியன அதில் இடம் பெற்றுள்ள விடயங்களாகும். இதனைவிட நட்புப் பிரகடனம் ஒன்றும் கைச்சாத்திடப்பட்டது. சமூக, பொருளாதார, கலாசார உறவுகள் சம்பந்தமாகக் கைக்கொள்ள வேண்டிய நடைமுறைகள், ஆலோசனை வழங்கல், வலயத்தில் சமாதானத்தைப் பேணல், அரசியற் சுதந்திரத்தினையும் உறுதிப்பாட்டையும் பாதுகாத்தல், வாழ்க்கைத் தரத்தை உயர்த்தல், இயற்கை அழிவுகளின்போது ஒருவருக்கொருவர் உதவியளித்தல், பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஒத்துழைத்தல் ஆகிய விடயங்கள் அப்பிரகடனத்தில் இடம் பெற்றன. இக் குறிக்கொள்களை அடைதற் பொருட்டுப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. வர்த்தக உறவுகளை உறுதிப்படுத்துவதற்கும் விஞ்ஞான, விவசாயத்துறைகள் சார்ந்த ஒத்துழைப்பை அபிவிருத்தி செய்வதற்கும் ஐரோப்பிய பொருளாதார சமூகத்

துடன் ஐந்தாண்டு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. வர்த்தகம், முதலீடு, தொழினுணுக்கப் பரிமாற்றம், அபிவிருத்தி முதலியவற்றுக்குக் கைகொடுக்கும் பொருட்டு இந்துனீசியா, மலேசியா, பிலிப்பீன்சு, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு யப்பான் கடன் உதவிகள் வழங்கியது. இவ்வாறே ஆசியான் தாபனம் மேற்கொண்ட முயற்சிகளின் பெறுபேறாக, உறுப்பு நாடுகளிலே விலங்கு விருத்தித் திட்டங்களை மேற்கொள் வதற்கென நியுசீலாந்தினால் உதவிகள் வழங்கப்பட்டன. அத்துடன், பிலிப்பீன்சின் முன்னுரிமைத் திட்டமொன்றுக்கும் நியுசீலாந்தின் உதவி கிடைத்தது. மேலும், இப்பிராந்தியத்தைச் சேர்ந்த நாடுகளின் கடற்றொழிலின் மேம்பாட்டுக்குரிய தொழினுணுக்க உதவியும் அறுவடைகளைப் பாதுகாப்பதற்குரிய உதவியும் கனடாவினால் வழங்கப்பட்டன.

ஆசியான் தாபனத்தின் உறுப்பு நாடுகளின் ஒத்துழைப்புடன் பல கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஈரலழற்சி (Hepatitis) நோய்க்குரிய ஊசி மருந்தை உற்பத்தி செய்வதற்குச் சிங்கப்பூரிலும், யூரியாவை உற்பத்தி செய்வதற்கு இந்துனீசியா, மலேசியா ஆகிய நாடுகளிலும், நீறு உற்பத்தி செய்வதற்குத் தாய்லாந்திலும், செம்பை உற்பத்தி செய்வதற்குப் பிலிப்பீன்சிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகள் இதற்கு எடுத்துக் காட்டுகளாகும். மேலும், முடிப்புப் பொருள்களின் தீர்வை வரிகள் குறைவாக இருக்கத்தக்கதாக, ஆசியான் நாடுகளின் ஒத்துழைப்புடன் கூட்டுக் கைத்தொழில் முயற்சிகள் (Joint Ventures) ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆசியான் தாபனம் இவற்றைவிட வர்த்தகம், விவசாயம், கனிப்பொருளும் சக்தியும், போக்குவரத்தும் செய்திப் பரிமாற்றமும், ஆராய்ச்சியும் தொழினுணுக்கமும், கல்வி, சமூக அபிவிருத்தி, உல்லாசப் பயணம், கலாசாரம் ஆகிய சகல துறைகளிலும் ஒத்துழைத்து வருகின்றது. ஆசியான் நாடுகளில் மேற்கொள்ளப்படும் வர்த்தக நடவடிக்கைகளிலே தமது உறுப்பினருக்கு முன்னுரிமை வழங்குவதற்கு இணங்குதல் ஆசியான் விவசாய அபிவிருத்தித் திட்டத்துக்குரிய மத்திய நிலையம் ஒன்றினை நிறுவதல், விஞ்ஞானம், தொழினுணுக்கம் ஆகிய துறைகளுக்குரிய ஆசியான்

குழு ஒன்றினை நிறுவுதல், ஆசியான் அபிவிருத்திக் கல்வித் திட்டம் ஒன்றினை ஆரம்பித்தல், ஆண்டுதோறும் திரைப்பட விழாக்களையும் இளைஞர் சங்கீதக் களியாட்டங்களையும் ஒழுங்கு செய்தல் ஆகியவற்றை இதன் பொறுப்புகளாகக் குறிப்பிடலாம். பலதிறப்பட்ட இந்தச் செயற்பாடுகள் மூலம் பிராந்தியத்தின் அபிவிருத்திக்குரிய பல விடயங்கள் நிறை வேற்றப்படுகின்றன.

## உலக சுகாதாரத் தாபனம் (W. H. O)

ஐக்கிய நாடுகள் தாபனத்துடன் இணைந்து, சமூக அபிவிருத்தியை நோக்கிற் கொண்டு 1984 இல் நிறுவப்பட்ட ஒரு தாபனமே உலக சுகாதாரத் தாபனம். சர்வதேச சுகாதார நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் மத்திய நிலையமாக இத்தாபனம் செயற்படுகிறது. இதன் தலைமையலுவலகம் சுவிற்சிலாந்து ஜெனீவா நகரத்தில் அமைந்துள்ளது. 1986 இல் இதில் 166 நாடுகள் அங்கத்துவம் வகித்திருந்தன.

இத்தாபனத்தின் யாப்பிலே இதன் குறிக்கோள்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. " சகல மக்களுக்கும் மிகச்சிறந்த சுகாதார வசதிகளைச் செய்து கொடுத்தல் " என்பதே அது. சர்வதேச சுகாதார விவகாரங்களை நெறிப்படுத்தும் ஒரு அதிகாரத் தாபனமாக இது இயங்கி வருகின்றது. அங்கத்துவ நாடுகளின் வேண்டுகோளின் பேரில் நோய்களைக் கூட்டுப்படுத்தலும், அவற்றை வேரோடழித்தலும், தேசிய தேவைகளுக்கு உகந்த வகையிற் சுகாதாரப் பணியாளருக்குப் பயிற்சியளிப்பதும், தேசிய சுகாதாரக் கட்டுக்கோப்பினை வலுவுடையதாகச் செய்வதற்குரிய திட்டங்களுக்கு உதவிபுரிவதும் இதன் நோக்கங்களாகும். ஆபத்தான சந்தர்ப்பங்களிலும் இயற்கை அழிவுகளின்போதும் இத்தாபனம் உதவி வழங்கி வருகின்றது. முழு உலகத்துக்கும் பொதுவான விபத்துக்கள் சம்பந்தமான ஆராய்ச்சிக் கருத்துக்களையும் விஞ்ஞானச் செய்திகளையும் இத்தாபனம் செயற்படுத்தி வருகின்றது. அயன மண்டல வலயத்திற் பரவுகின்ற நோய்கள் பற்றி

விசேட கவனஞ் செலுத்துவதுடன் நோய்களுக்கு நேராக இலக்காகும் நாடுகளிலே ஆராய்ச்சி வசதிகளை அபிவிருத்தி செய்யவும் உதவி வழங்கி வருகின்றது. இந்நோய்கள் பற்றி எப்பொழுதும் விழிப்பாக இருப்பதுடன், சர்வதேச உல்லாசப் பிரயாணங்களின் பொருட்டுச் சுகாதாரச் சட்டதிட்டங்களையும் வகுக்கின்றது. மருந்து சம்பந்தப்பட்ட பிற பொருள்களையும் சீர்தூக்கிப் பார்த்துக் கட்டளைகளை இத்தாபனம் வகுக்கின்றது. சுகாதரத் தகவல்களைச் சேகரித்து விநியோகஞ் செய்யும் இத்தாபனம் புற்றுநோய், இருதயநோய், உளநோய் போன்ற நோய்கள் பற்றி நிதானமான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றது. தீய விளைவுகளை உண்டாக்கும் மருந்து வகைகள் பற்றிய அறிக்கைகளைப் பெற்று அவற்றைப் உறுப்பு நாடுகளுக்கு அறிவிக்கின்றது. சூழலிலுள்ள மாசுப் பொருள்களால் மனித சுகாதாரத்துக்கு ஏற்படக்கூடும் பாதிப்புகள் பற்றிய எல்லாத் தகவல்களையும் ஆழ அலசிப் பார்த்து அறிக்கைகள் வெளியிடுகின்றது. வைத்திய நிபுணர்களுக்கும் சுகாதாரத் தொழிற்றுறைப் பிரிவினருக்கு மிடையில் ஒத்துழைப்பை வளர்ப்பது இத்தாபனத்தின் மற்றுமொரு குறிக்கோளாகும். சுகாதாரம், சுகாதார முறைகள் பற்றி மக்களுக்கு விளக்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது இத்தாபனத்தின் மற்றுமொரு கடமையாகும். எடுத்துக்காட்டாக "2000 ஆம் ஆண்டு சகலருக்கும் சௌக்கியம்' என்னும் தொனிப்பொருளுக்கு ஏற்ற உலகளாவிய திட்டமொன்று 1984 இல் உலக சுகாதாரச் சபையினால் அங்கீகரிக் கப்பட்டுள்ளது. உலகிலுள்ள எல்லா மக்களும் சமூகரீதியிலும் பொருளாதார ரீதியிலும் பயனுள்ள வாழ்க்கை வாழ்வதற்கேற்ற சுகாதார வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதென்பதே இதன் பொருளாகும் "சகலருக்கும் சுக வாழ்வு" என்பதற்கு மிகவும் முக்கியமான நடவடிக்கை "அடிப்படைச் சுகாதார வசதிகள்" என்பது புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. இதற்குரிய குறைந்தபட்ச நடவடிக்கைகள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன.

வீட்டிலிருந்து 15 நிமிடத்திற் செல்லக்கூடிய ஒரு இடத்தில் குடிப்பதற்கு உகந்த நீரும் போதிய சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளும் இருத்தல், தொண்டைக் கரப்பன், குக்கல், இருமல், ஏற்ப்புவலி, போலியோ, சின்னமுத்து,

சயரோகம் ஆகிய நோய்களுக்குரிய நிர்ப்பீடன நடவடிக்கைகளை மேற்கொள்ளல், ஒரு மணித்தியாலத்துக்குள் 20 மருந்து வகைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வசதிகளையும் சுகாதார வசதிகளையும் பிரதேசத்தில் ஏற்படுத்திக்கொள்ளுதல், பிரசவ அலுவலகங்களையும் கர்ப்பிணித்தாய்மாரையும், ஒரு வயது வரை குழந்தைகளையும் கவனிப்பதற்குரிய பயிற்சி பெற்றவர்களின் சேவைகள் கிடைக்கக் கூடியதாக இருத்தல் ஆகியனவாம்.

இது தவிர, உலக சுகாதாரத் தாபனத்தைச் சார்ந்த ஆய்வுப் பிரிவானது மலேரியா, டெங்குக் காய்ச்சல், கழிச்சல் போன்று அயனமண்டலத்திற் பரவுகின்ற நோய்கள் பற்றியும், தற்போது பெரும்பாலும் மேற்கு நாடுகளிற் பரவி வருகின்ற எயிட்ஸ் நோய் பற்றியும் முக்கியமான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ளது. இவ்வாறே புற்றுநோய் பற்றிய ஆராய்ச்சிகளில் மட்டுமன்றிப் புற்றுநோய்க்குக் காரணமாகும் சூழற் காரணிகள் பற்றியும் இத்தாபனம் ஆராய்ந்து வருகின்றது.

## உணவு, விவசாயத் தாபனம் (F. A. O)

ஐக்கிய நாடுகள் தபானத்துடன் இணைந்த தாபனமாக 1945 இல் நிறுவப்பட்ட உணவு, விவசாயத் தாபனத்திலே 1896 இல் 156 நாடுகள் அங்கத்துவம் வகித்தன. இதன் தலைமை அலுவலகம் உரோமாபுரியிலுள்ளது. அங்கத்துவ நாடுகளைச் சார்ந்த மக்களுடைய போசணை மட்டத்தினையும், வாழ்க்கைத் தரத்தினையும் உயர்த்துவதும், சகல உணவுப் பொருள்களினதும் விவசாயப் பொருள்களினதும் உற்பத்தி. விநியோகம் ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதும். கிராமப்புற மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதுமே இத்தாபனத்தின் குறிக் கோள்களாகும்.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் வாழும் இலட்சக் கணக்கான மக்களுடைய பசியையும் வறுமையையும் போக்குவதற்கே இத்தாபனம் பெரும்பாலும் பாடுபடுகின்றது. இத்தாபனம் அதன் சொந்த மண்டலத் திட்டங்கள் மூலம் விசேட பிரச்சினைகளுக்குப் பெரும்பாலும் நேரடியாகத்

தொழினுணுக்க உதவிகள் வழங்குகின்றது. இத்தாபனத்தின் சாதாரண நிகழ்ச்சித் திட்டத்தின்படி தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல், கொள்கைகள், திட்டங்கள் ஆகியன பற்றி அரசாங்கங்களுக்கு அறிவுரை வழங்கல், உணவு விவசாயம் ஆகியன சம்பந்தமான பிரச்சினைகள் பற்றி அரசாங்கங்களுக்கும் நிபுணர்களுக்கும் இடையிற் கூட்டங்களை ஒழுங்கு செய்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. உலகில் வாழுகின்ற எல்லா மக்களுக்கும் எல்லா வேளைகளிலும் அவரவருக்குத் தேவையான உணவைப் பெற்றுக் கொள்வதற்குப் பௌதிக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் இயல்பு இருக்க வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொள்வதன் மூலம் பட்டினிக்கும் வறுமைக்கு முள்ள தொடர்பை இத்தபானம் ஏற்றுக் கொள்ளுகின்றது. ஒன்றிணைந்து கிராமிய அபிவிருத்திக்கு ஊக்கமளிக்கும் கொள்கை, திட்டம் ஆகியவற்றின் மூலம் விவசாயிகளுடைய சிறு பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காணப்படுகின்றது. இவற்றை நிறைவேற்றுதற் பொருட்டுப் பயிர்ச் செய்கை, விலங்கு வேளாண்மை, சிறு அளவிலான கடற்றொழில், வனக் கைத்தொழில் ஆகியவற்றிற் கவனஞ் செலுத்தப்படுகின்றது.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் வாழும் மக்களுள் குறிப்பிடத்தக்க தொகையினருக்குப் போதியளவு போசணை கிடைப்பதில்லை. அந்நாடுகளின் உணவு உற்பத்தி குறைவாக இருப்பதே இதற்குரிய முக்கிய காரணம், மேலும் உணவுப் பொருள்களின் விநியோக முறையிலும் நம்பிக்கை வைக்க முடியாது. அது மாத்திரமன்றி நிர்ப்பந்தமான நிலைமை காரணமாகப் போதிய உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து கொள்ளவேனும் கொள்வனவு செய்யவேனும் பொருளாதார வல்லமையும் இவற்றுக்கில்லை. இதனாற் பெருந் துன்பப்படுகின்ற நாடுகளின் அரசாங்கங்களினாலும் இப்பிரச்சினைகளைத் தனித்துத் தீர்த்து வைக்க முடியாமலிருக்கின்றது. இவ்விடத்திலும் உணவு, விவசாய அபிவிருத்திக்கு வேண்டிய தகவல்களையும் விசேட அறிவினையும் வழங்குவதன் மூலம் இத்தாபனம் உதவி வழங்குகின்றது. ''எல்லோருக்கும் உணவு கிடைக்கட்டும்'' என்பதே இத்தாபனத்தின் பிரமாணம். மண்டல திட்டங்கள் மூலம் இத்தாபனம் அபிவிருத்திக்கு உதவியளித்து வருகின்றது.

உணவு உற்பத்தியைப் பாதிக்கின்ற காரணிகளை இல்லாமற் செய்வதற்கும் இத்தாபனம் பல்வேறு வழிவகைகளைக் கைக்கொண்டு வருகின்றது. எடுத்துக்காட்டாக, பங்களாதேஷ், பர்மா, பிலிப்பீன்சு, இலங்கை, தாய்லாந்து ஆகிய நாடுகளிலே சிறிய காணிகளுக்கு நீர் வழங்குவதற்கு நீர்ப் பம்பிகளைப் பயன்படுத்துவதற்கும் அவற்றை உற்பத்தி செய்யும் முறையைக் காட்டிக் கொடுப்பதற்கும் மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதிக விளைச்சலைத் தரும் விதை வகைகளையும் பயிர் வகைகளையும் திட்டங்கள் மூலம் அறிமுகஞ் செய்ததன் பின்னர் மேற்கு ஆசியாவின் சிற்சில பிரதேசங்களில் பால் உற்பத்தி 30 — முதல் 60 — வரை உயர்ந்துள்ளதாக அறிக்கைகள் கிடைத்துள்ளன.

## எட்டாம் அத்தியாயம்

# அபிவிருத்தியடைந்துவரும் இலங்கை

இலங்கையானது தெற்கு ஆசிய வலயத்துக்குரிய மிகப் பழைய இந்திய கலாசாரத்தின் செல்வாக்கைப் பெரிதும் பெற்றுள்ள ஒரு நாடு என ஒன்பதாம் ஆண்டில் நீங்கள் கற்றுள்ளீர்கள். இந்த வலயத்துக்குரிய ஏனைய நாடுகளைப் போன்று இலங்கையும் பிரித்தானியாவின் ஒரு குடியேற்றமாக இருந்தே பின்னொரு காலத்திற் சுதந்திரம் பெற்ற ஒரு நாடு. இதன் பொருளாதார முறை விவசாயத்தைச் சார்ந்துள்ளது.

## புராதன இலங்கையின் பொருளாதார முறை

இலங்கையின் இன்றைய பொருளாதாரப் பாணியை நன்கு விளங்கிக் கொள்ளுதற் பொருட்டுப் புராதன இலங்கையின் பொருளாதார முறை பற்றிச் சற்று ஆராய்வோம்.

இன்றுபோல் அன்றும் பெரும்பாலான மக்கள் கிராமங்களிலேயே வாழ்ந்தனர். கிராமங்கள் பெரும்பாலும் தன்னிறைவுடையனவாகத் திகழ்ந்தன. கிராமங்களின் முக்கியமான கூறுகளாகக் குளங்கள், வயல்கள், வீடுவாசல்கள் ஆகியனவும் மந்தைகள் மேய்வதற்கான பொதுப் புன்னிலங்களும் விறகு பெற்றுக்கொள்வதற்கும், சேனைப் பயிர்ச்செய்கைக்கும் பயன்படுத்தப்பட்ட காட்டுப்பகுதிகளும் காணப்பட்டன. அன்றாட வாழ்க்கைக்கும் தொழிலுக்கும் தேவையான பொருள்களை மக்கள் பெற்றுக்கொள்ளுவதற்கு இந்தக் கிராமங்களுக்கு அண்மையிற் சந்தைகளும் இருந்தன. மிகச் சில நகரங்கள் மாத்திரமே இருந்தன. நகரங்கள் இன்றுபோல் பலதிறப்பட்ட கரும மையங்களாக இருக்கவில்லை. நகர வாழ்க்கை எளிமையாக இருந்தது.

நாட்டின் முக்கிய பொருளாதார வளமான காணிகள் அனைத்தும் அரசனுக்குச் சொந்தம் என்பது அக்காலத்துக் கருத்து. பல்வேறு சேவைகளை ஆற்றியமைக்காகக் காணிகள் மக்களுக்கு வழங்கப்பட்டன. சாதாரண குடிமக்கள் ஆண்டு தோறும் குறிக்கப்பட்ட நாட்களில் ஊதியமின்றி அரசனுக்குச் சேவை செய்வதற்குக் கட்டுப்பட்டிருந்தனர். இது ''இராசசேவை'' (சிங்களத்தில் இராசகாரிய) எனப்பட்டது. குளங்கள், கால்வாய்கள் ஆகியவற்றைக் கட்டுவிப்பதற்கும் பிற பொது வேலைகளைச் செய்விப்பதற்கும் இந்தச் சேவை பயன்படுத்தப்பட்டதாகத் தெரிகின்றது.

மக்கள் விவசாயத்தை முக்கியமான தொழிலாகக் கைக்கொண்டனர். அதற்கு அரசனின் ஆதரவு கிடைத்ததுடன் அதனால் சிறந்த நீர்ப்பாசனக் கைத்தொழில் முறையொன்றும் உருவானது. அரசனின் ஆதரவு கிடைத்தமையினாலும், நெற்செய்கையில் ஏற்பட்ட ஆர்வம் காரணமாகவும் நாடு அரிசியிலே தன்னிறைவு பெற்றது மாத்திரமன்றிச் சிற்சில சந்தர்ப்பங்களிலே அரிசியைப் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடியதாகவும் இருந்தது.

இலங்கையின் நீர்ப்பாசனத் தொழிலின் வரலாறும் நாட்டு மக்களுடைய வரலாற்றளவு பழமை வாய்ந்ததாகத் தெரிகிறது. ஆதிகாலத்தவர்கள் நீரைச் சேமித்து வைத்தற்குரிய முக்கியமான வழியாக ஆறுகளுக்கு அல்லது கால்வாய்களுக்கு அண்மையிற் குளங்களைக் கட்டும் முறையைக் கைக்கொண்டனர். இதனை விடக் கால்வாய்களுக்கும் குளங்களுக்கும் நீர் திசை திருப் பப்பட்டுப் பெரிய நிலப்பரப்புக்கு வழங்கப்பட்டது.

நீர்ப்பாசன வசதிகளைப் பயன்படுத்தி நெற் செய்கையுடன் குரக்கன், உழுந்து, பயறு, எள்ளு போன்றன பெருமளவிற் பயிரிடப்பட்டன. மாடு வளர்த்தல், வேட்டையாடுதல், மீன்பிடித்தல் ஆகிய தொழில்களைக் கைக்கொண்டோரும் அக்காலத்தில் வாழ்ந்தனர். இன்னும் வைத்தியர், சோதிடர், நீர்ப்பாசனச் சிற்பர், கலைஞர், குயவர், நெசவாளர், கடற் தொழிலாளர் ஆகியோர் பிற தொழில்களில் ஈடுபட்டோருள் சிலராவர். ஒவ்வொரு தொழிலையும் செய்தவர்கள் ஒவ்வொரு சாதியைச் சேர்ந்தவர்களாகக் கணிக்கப்பட்டமை பண்டைக் காலச் சமுதாயங்களிற் காணப்பட்ட குறிப்பிடத்தக்க ஒரு இயல்பாகும். இன்றுபோல் ஒவ்வொருவரும் தாம் விரும்பிய

தொழிலைச் செய்யும் சுதந்திரம் அக்காலத்தில் இருக்கவில்லை. இந்தப் பொருளாதார முறை நிலவிய காலத்திலே நாட்டில் வர்த்தக விவகாரங்களும் நடைபெற்றன. கிராமங்கள் பெரும் பாலும் தன்னிறைவும் பெற்று இருந்மையாலும், தேவைகள் இன்று காணப்படுமளவுக்குப் பலதிறப்பட்டு இருக்கவில்லை என்பதனாலும் வியாபாரம் மக்களுடைய வாழ்க்கையில் அவ்வளவு ஒரு தாக்கத்தைக் கொண்டிருக்கவில்லை என்று சிந்திக்க இடமுண்டு. ஆயினும், இந்து சமுத்திரத்திலே ஒரு கேந்திர நிலையத்தில் அமைந்திருப்பதனால் இலங்கை மேல் கீழ்த் திசைகள் இரண்டினதும் வர்த்தக நிலையமாக விளங்கியது. பணப் புழக்கம் மிகக் குறைவாக இருந்த அக்காலத்திலே பண்டமாற்று முறைப்படியே வர்த்தகம் பெரும்பாலும் நடைபெற்றது. இந்தியர், அராபியர், சீனர், உரோமர், கிரேக்கர், பாரசீகர் ஆகியோர் வியாபாரத்தின் பொருட்டு அக்காலத்திலே இங்கு வந்தார்கள்.

## பேரரசு காலத்து நிலைமை

இப்படியான பொருளாதார முறை பெரிதும் நிலவிய காலத்தில் இலங்கையின் கரையோரப் பகுதிகள் முதல் தடவையாக மேற்கு நாட்டவருடைய ஆதிக்கத்துக்குட்படத் தொடங்கின. கறுவாப் பயிர்ச் செய்கைக்கு முக்கியத்துவமளித்துக் கொண்டு ஏறக்குறைய மூன்று நூற்றாண்டு காலமாகப் போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் இலங்கையின் கரையோரப் பகுதிகளை ஆட்சிசெய்தனராயினும், நாட்டின் பொருளாதார முறையில் அதிகமாற்றங்கள் உண்டாக்கவில்லை. ஆயின் இலங்கை முழுவதினதும் ஆதிக்கத்தைப் பெற்ற பிரித்தானியர் இலங்கையின் பொருளாதாரத்திலே கண்கூடான பல மாற்றங் களை ஏற்படுத்தினார்கள். இவர்கள் வருமானம் பெறுவதற் பொருட்டு ஆரம்பத்திற் கைக்கொண்ட வழிமுறைகள் பற்றி அதிருப்தியடைந்து, வருமானம் பெறுதற்குரிய வேறு வழிவகைகள் பற்றிச் சிந்திக்கலாயினர். இப்படியாக இவர்கள் புதிய வழிவகைகள் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கையில் அப்போது பெருந் தோட்டப் பயிராக விளங்கிய கோப்பி இவர்களுடைய கவனத்தை ஈர்த்தது.

அக்காலத்திலே பிரித்தானியா முதலான சில ஐரோப்பிய நாடுகளிலே கோப்பி பிரபலமான ஒரு பானமாக இருந்தமையினால் அதற்குரிய கேள்வி அதிகரித்தது. இதனால்,

கோப்பிப் பயிர்ச்செய்கை மூலம் கூடிய வருமானத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தமையினால் பிரித்தானிய ஆட்சியாளர் கோப்பிப் பயிர்ச் செய்கைக்கு ஊக்கமளித்தனர். முதற் கோப்பித் தோட்டங்கள் பிரித்தானியராலேயே ஆரம்பிக்கப்பட்டன. மிகவும் குறைந்த விலைக்குக் காணிகளைப் பெற்றுக் கொடுத்தல், உபகரணங்களைக் குறைந்த விலையிற் கொள்வனவு செய்வதற்கு ஒழுங்குகள் செய்து கொடுத்தல், ஏற்றுமதித் தீர்வையைக் குறைத்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் அப்போதைய அரசாங்கம் கோப்பிப் பயிர்ச் செய்கையாளருக்கு ஊக்கமளித்தது.

கோப்பிப் பயிர்ச் செய்கையாளருக்குக் கிடைத்த சாதகமான நிலைமை காரணமாக முயற்சியாளர் பிரித்தானியாவிலிருந்து இங்கே திரண்டு வரலாயினர். கோப்பித் தோட்டங்களிலே கூலிவேலை செய்ய இந்நாட்டவர் விரும்பாதமையினால் அப்போது பிரித்தானியாவின் குடியேற்றமாக இருந்த இந்தியாவின் தென் பிரதேசத்திலிருந்து குறைந்த கூலிக்குத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர் கொண்டுவரப்பட்டனர். இந்த ஊக்குவிப்புக் காரணமாக பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியளவில் மலைப் பிரதேசத்திற் கோப்பித் தோட்டங்கள் பெருகத் தொடங்கின.

இவ்வாறிருந்தும் 1869 இல் உண்டான தீவிர நோயினாற் கோப்பிப் பயிர் அழியத் தொடங்கியது. கோப்பிக்குப் பதிலாகப் புதிய பயிர்கள் பற்றிச் சிந்தித்த பயிர்ச் செய்கையாளர் தேயிலை, சிங்கோனா, கொக்கோ ஆகியவற்றைப் பயிரிடுவதிலே ஆர்வம் கொண்டனர். இவற்றுள் தேயிலைச் செய்கை மாத்திரமே வெற்றியளித்தது. கோப்பிப் பயிர்ச் செய்கைக்கு ஒவ்வாத உயர்ந்த மலைப் பிரதேசங்களுங்கூடத் தேயிலைச் செய்கைக்கு உகந்தனவாகக் காணப்பட்டன. அதனால் 19 ஆம் நூற்றாண்டின் இறுதியளவில் மலைப் பிரதேசத்திற் பெரும் பகுதி தேயிலைத் தோட்டங்களாக மாறியது. இந்தத் தேயிலைத் தோட்டங்களுள் ஒரு சில தவிர ஏனையவை எல்லாம் பிரித்தானியருக்கும் பிரித்தானியக் கம்பனிகளுக்குமே சொந்தமாக இருந்தன. இலங்கையரும் தேயிலைச் செய்கையில் ஈடுபட்டமையால் வர்த்தகத் தோட்டங்களைவிடப் பல சிறிய தேயிலைத் தோட்டங்களும் உண்டாயின.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியளவில் இறப்பர், தென்னை ஆகியவற்றையும் வர்த்தகப் பயிர்களாகப் பயிரிடும்

முறை ஆரம்பிக்கப்பட்டது. இறப்பர் பெரும்பாலும் கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை ஆகிய மாவட்டங்களிலேயே பயிரிடப்பட்டது. தென்னை பெரும்பாலும் சிலாபம், குருணாகல் ஆகிய மாவட்டங்களிலும் கரையோரப் பிரதேசங்களிலும் பயிரிடப்பட்டது. இறப்பரையும் தென்னையையும் பயிரிடுவதில் நமது நாட்டுச் செல்வந்தர்களே அதிக கவனஞ் செலுத்தினார்கள். இப்படியாகப் பிரித்தானிய ஆட்சியாளரால் ஆரம்பிக்கப்பட்ட பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை காரணமாக எமது நாட்டுப் பொருளாதார முறை புதிய திசையிற் செல்லலாயிற்று. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் மூலம் நன்மைகள் ஏற்பட்டது போலவே தீமைகளும் ஏற்பட்டுள்ளன.

பயிர்ச்செய்கைப் பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அரசாங்கம் பெருந்தொகையான வருமானத்தைப் பெற்றது. இந்த வருமானத்திற் பெரும்பகுதி முயற்சியாளருடைய நலனுக்காகப் பயன்படுத்தப்பட்ட போதிலும் பெருந்தெருக்கள், புகையிரதப் பாதைகள் ஆகியவற்றை அமைத்தல், பிரதான துறைமுகத்தை அபிவிருத்தி செய்தல், தந்திச் சேவைகள், வங்கி முறைகள், கல்வி ஆகியன காரணமாக நாட்டு மக்கள் நன்மை அடைந்துள்ளனர்.

பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை காரணமாக அதனுடன் சம்பந்தப்பட்ட எழுதுவினைஞர், ஒப்பந்தக்காரர், சுகாதார சேவையாளர், களஞ்சியக் கட்டுப்பாட்டாளர் போன்ற புதிய பதவிகள் உண்டாயின. இவற்றுக்கு நியமனம் பெறும் வாய்ப்பு எமது நாட்டவர்களுக்குக் கிடைத்தது.

எவ்வாறாயினும், பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை காரணமாக உண்டான இந்தப் பொருளாதார முறையிலே தோட்டப் பொருள்களை வெளிநாடுகளுக்கு விற்றுப் பெற்றுக் கொள்ளப்படும் பணத்தைக் கொண்டு எமது நாட்டுக்குத் தேவையான பொருள்களைப் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் முறைக்கு நாடு பழக்கப்பட்டது. அதாவது ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதார முறை இதனால் உண்டானது. இந்த முறையின்படி பிரித்தானிய ஆட்சியாளர் தமது சொந்த நாட்டிலும் தமது குடியேற்றங்களிலும் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை மேலுக் மேலும் இங்கே இறக்குமதி செய்து அவற்றை நுகர்வதற்கு நம் நாட்டவரைப் பழக்கினர்கள். இதனால் இரும்பு, உருக்கிரும்பு, புடைவை சம்பந்தமான

தேசியக் கைத்தொழில்கள் வீழ்ச்சிடைந்தன. அது மாத்திரமன்றி அரிசி, சீனி, உருளைக்கிழக்கு, மிளகாய் போன்ற உணவுப் பொருள்களை விற்பனை செய்யும் கொள்கையின் விளைவாக நாட்டின் தன்னிறைவுத் தன்மை அற்றுப் போனது. மேலும், பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்காகப் பிறநாட்டவர் காணிகளைக் கைப்பற்றியமையினால் மலைநாட்டுக் கிராம வாசிகளுக்கு காணிப் பற்றாக்குறைப் பிரச்சினை உண்டானது. அவ்வாறே பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்காக மலைநாட்டுக் காடுகள் அழிக்கப்பட்டமையினால் எங்களுடைய நாட்டு வளமுடைய மண் கழுவப்பட்டுப் போனது மாத்திரமன்றி எமது நீர் வளமும் பாதிக்கப்பட்டது.

இது தவிர, எமது நாட்டைச் சேர்ந்த சிலரும் பிறநாட்ட வரைப் பின்பற்றிக் காணி உடைய செல்வந்தர்களாக மாறினார்கள். இந்தியத் தமிழர் பிரச்சினையும் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை காரணமாக உண்டான ஒன்றாகும். பெருந் தோட்டப் பயிற்ச்செய்கை முறையின் பெறுபேறாகக் கூலிக்கு வேலை செய்கின்ற ஒரு வகுப்பினர் உருவாகினர்.

## எமது பொருளாதாரமுறை ஏற்றுமதி இறக்கு மதிப் பொருளாதாரமாக மாறியமை

பிரித்தானியர் ஆட்சிக் காலத்திலேயே இலங்கையில் ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரம் உண்டானதென மேலே குறிப்பிடப்பட்டுள்ளது. இன்றைய உலக நாடுகள் எல்லாவற்றிலும் ஏற்றுமதிப் பொருளாதார முறைகளே காணப்படுகின்றன. வர்த்தகப் பொருள்களையும் அவற்றின் விலைகளையும் பொறுத்து ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் சாதகமாகவேனும் பாதகமாகவேனும் அமையும்.

இலங்கையின் முக்கிய ஏற்றுமதிப் பொருள்களான தேயிலை, இறப்பர், தெங்கு உற்பத்திப் பொருள்களின் விலைகள் பெரிதும் தளம்புவது மாத்திரமன்றி இவற்றை விற்பனை செய்வதற்கு உலகச் சந்தையிலே போட்டியிட வேண்டியும் நேரிடுகின்றது. 1977 இல் இலங்கையின் முழு ஏற்றுமதியில் 50 வீதமாக இருந்த தேயிலை 1982 இல் 30 வீதமாகக் குறைந்ததாயினும் அது இன்னும் எமது பிரதான ஏற்றுமதிப் பொருளாக இருக்கிறது. 1982 இல் இலங்கை, உலகத் தேயிலை உற்பத்தியில் 11 வீதத்தினை உற்பத்தி செய்ததுடன் உலகத் தேயிலை ஏற்றுமதியில் 25 வீதத்துக்கும் 30 வீதத்துக்கும் இடைப்பட்ட தொகையை இலங்கை ஏற்றுமதி செய்தது.

இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 14% இறப்பர் மூலமும் அதனுடன் சம்பந்தப்பட்ட உற்பத்திப் பொருள்கள் மூலமும் கிடைக்கின்றது. உகல இறப்பர் உற்பத்தியில் ஏறக்குறைய 4% இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்றது.

தேசிய ஏற்றுமதி வருமானத்தில் 8% தேங்காயிலிருந்து கிடைக்கின்றது. உலகத் தேங்காய் ஏற்றுமதியில் 6% இலங்கையினால் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. 1970 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட 10 ஆண்டுகளின் உற்பத்தியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது 1970 ஆம் ஆண்டு முதலான பத்தாண்டு (1970 —79) காலத் தேங்காய் உற்பத்தி 10% வரை குறைந்தமை தோன்றும். ஆயினும், 1980 இம் ஆண்டையடுத்த பத்தாண்டு காலத்தில் இந்த நிலைமை நீங்கித் தேங்காய் உற்பத்தி படிப்படியாக உயர்ந்து வருவதாகத் தோன்றுகின்றது.

இலங்கையின் பொருளாதார முறை ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதார முறையாக மாறிய காலத்தின் ஆரம்பத்தில், பாரம்பரிய ஏற்றுமதிப் பொருள்களாகக் கருதப்படும் தேயிலை, இறப்பர். தேங்காய் ஆகியவற்றின் மூலம் கிடைத்த வருமானத்துக்கேற்ப அவை முக்கியத்துவம் பெற்றன. பிறநாட்டு நாணயச் சம்பாத்தியத்தைப் பொறுத்தமட்டில் தேயிலை இன்னும் முதலிடம் வகித்து வருவதனால், இறப்பர், தேங்காய் ஆகிவற்றின் முக்கியத்துவம் ஓரளவிற்குக் குறைக்கப்பட்டுள்ளது. புடைவைகள், தைக்கப்பட்ட ஆடைகள், ஏற்றுமதிக்கான சிறு விவசாயப் பயிர்கள், சிறு கைத்தொழில்கள், கைப்பணிப்பொருள்கள், கனிப் பொருளெண் ணெய் உற்பத்திப் பொருள்கள், உல்லாசப்பயணக் கைத்தொழில் ஆகியன பிற நாட்டு நாணயத்தைப் பெற்றுத் தருகின்ற முக்கிய மார்க்கங்கள் என்னும் நிலையை அடைந்து வருகின்றன. இது மட்டுமன்றி, தற்போது நாம் ஏற்றுமதி செய்யும் பொருள்கள் அவ ற்றைக் கொள்வனவு செய்யும் நாடுகளுக்கு அத்தியாவசியமா ? இல்லையா ? என்பதைப் பொறுத்து, நாம் ஏலவே குறிப்பிட்டுள் ளவாறு, அவற்றின் விலைகள் மாறிக்கொண்டே இருக்கின்றன. மறுபுறம் நாம் முக்கியமாக இறக்குமதி செய்கின்ற உணவுப் பொருள்கள், மருந்து வகைகள், எண்ணெய் ஆகியன எமக்கு அத்தியாவசியமானவை மாத்திரமன்றி அவற்றின் விலைகளும் உயர்ந்து கொண்டே போகின்றன. இதனால் அண்மைக் காலத்திலிருந்து இலங்கையின் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் சாதகமற்ற நிலையை அடைந்துள்ளது.

## பொருளாதார அபிவிருத்திக்குள்ள குறுக்கீடுகள்

பொருளாதார அபிவிருத்திக்குள்ள குறுக்கீடுகள் பற்றி ஆராயும்போது. அபிவிருந்தியடைந்துவரும் நாடுகளுக்குப் பொதுவான பல பிரச்சினைகள் இலங்கைக்கும் உண்டென்பதைக் காணலாம். இந்நூலிற் பல்வேறு இடங்களிலே கூறப்பட்டுள்ளவாறு, இலங்கையின் அபிவிருத்திக்குத் தடையாகவுள்ள காரணிகளுள் சில இங்கே எடுத்தாளப்படும். துரிதமாகப் பெருகிவரும் சனத்தொகை, ஏற்றுமதிப் பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்காத உலகச் சந்தையை நம்பியிருக்க வேண்டிய சூழ்நிலை, மூலதனப் பற்றாக்குறை, நிலக்கரி, கனிப்பொருளெண்ணெய் போன்ற சத்தி வளங்கள் இல்லாமை, விஞ்ஞான, தொழினுணுக்க முன்னேற்றக்குறைவு ஆகியன அவற்றுட் சிலவாகும்.

உயர்ந்த வாழ்க்கைத் தரத்துக்கு மனிதனுக்குத் தேவையான உணவு, உடை, வீடுவாசல், தொழில் ஆகியவற்றிலே நேரான செல்வாக்குடைய துரித சனத்தொகைப் பெருக்கம், மூலதனச் சம்பாத்தியம் ஆகியன பற்றிய விரிவான விளக்கங்கள் அடுத்துவரும் பகுதிகளிற் கொடுக்கப்படும்.

அண்மைக் காலத்தில் இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி வீதம் குறைந்து வருவது நாம் கவனிக்க வேண்டிய ஒரு விடயமாகும். 1971 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின்போது சனத்தொகைப் பெருக்கம் 2.3 வீதமாகக் காணப்பட்டது. இது 1984 இல் 1.7 வீதமாகக் குறைந்தது. இந்த வளர்ச்சி வீதம் தொடர்ந்து இருக்குமாயின் 41 ஆண்டுகளிலே சனத்தொகை இரு மடங்காகும். இது இந்தியா, பாகிஸ்தான், பிலிப்பீன்சு, பங்களாதேஷ், தாய்லாந்து போன்ற அபிவிருத்தியடைந்துவரும் பிற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது எமக்கு ஆறுதலளிப்பதாக இருக்கக்கூடினும், அபிவிருத்தியடைந்த நாடுகளின் சனத்தொகை இருமடங்காவதற்குச் செல்லும் காலத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இதனைச் சாதகமான ஒரு நிலைமையாகக் கருதமுடியாது என்பது தெளிவாகும். எடுத்துக்காட்டாக, 1984 ஆம் ஆண்டிற் காணப்பட்ட சனத்தொகை வளர்ச்சி வீதத்தின்படி சிங்கப்பூர், யப்பான் ஆகிய நாடுகளின் சனத்தொகை இரு மடங்காவதற்கு முறையே 58 ஆண்டுகளும் 102 ஆண்டுகளும் செல்லும். 1984 ஆம் ஆண்டின் சனத்தொகை

வளர்ச்சி வீதத்தின்படி, சனத்தொகை இரு மடங்காவதற்குப் பெரிய பிரித்தானியாவில் 293 ஆண்டுகளும் பிரான்சில் 152 ஆண்டுகளும் ஐக்கிய அமெரிக்க நாடுகளில் 100 ஆண்டுகளும் செல்லும். ஒரு நாட்டின் சனத்தொகை துரிதமாக வளர்ச்சி அடையும் போது, உயர்ந்த வாழ்க்கைத் தரத்துக்கு வேண்டிய உணவு, வீடுவாசல், கல்வி வசதிகள், போக்குவரத்து வசதிகள், தொழில் வாய்ப்புக்கள் முதலியவற்றை வழங்குவது சிக்கலாக இருக்கும். இதற்குரிய காரணம் பெரும்பாலும், சனத்தொகைக்கும் வயது அமைப்புக்குமுள்ள தொடர்பாகும்.

துரித சனத்தொகை வளர்ச்சி வீதம் போன்றே ஒரு நாட்டுச் சனத்தொகையின் வயதமைப்பும் தேசிய அபிவிருத்தியிற் செல்வாக்கு உடையதாக இருக்கின்றது. இலங்கையின் சனத்தொகையின் வயதமைப்பும் நாட்டின் அபிவிருத்தியிற் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்றது எனலாம். 1981 ஆம் ஆண்டுச் சனத்தொகை மதிப்பீட்டின்படி இலங்கையின் சனத்தொகையின் வயதமைப்பு கீழ்க் காட்டப்பட்டுள்ளது.

### இலங்கையின் சனத்தொகை - வயது அமைப்பு - 1981

| வயதுப் பிரிவுகள் | விகிதம் |
|---|---|
| 14 வயதுக்கு குறைவு | 35.3 (தங்கியிருக்கும் சிறார்) |
| 15 வயது முதல் 64 வரை | 60.4 (தொழிலாளர்) |
| 65 வயதுக்கு மேற்பட்ட | 4.3 (தங்கியிருக்கும் முதியோர்) |

மேற் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களின்படி தங்கியிருப் போரில் வீதம் ஏறக்குறைய 66 ஆகும்.

$$\left( \text{தங்கியிருபோரின் வீதம்} = \frac{(35.3 + 4.3) \times 100}{60.4} \right)$$

இது ஒவ்வொரு 100 தொழிலாளியிலும் 66 பேர் தங்கியிருக்கிறார்கள் என்பதைக் காட்டுகின்றது. 15 வயதுக்கும் 54 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் மத்தியில் பலனுள்ள தொழில்களில் ஈடுபடாதவர்களும். 14 வயதுக்குக் குறைந்தவர்கள் மத்தியிலும் 65 வயதுக்குக் கூடியவர்கள் மத்தியிலும் பலனுள்ள தொழில்களைச் செய்கின்றவர்களும் இருப்பதனாலே தங்கியிருப்பவர்களினது வீதம் ஓரளவுக்குச் சரியெனக் கொள்ளலாம். 1984 ஆம் ஆண்டுச் சனத்தொகை பற்றிய தகவல்களின்படி, தங்கிருப்பவர்களின் வீதம் இந்தியா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் 72; பிலிப்பீன்சில் 85; சிங்கப்பூரில் 45; யப்பானில் 47; பெரிய பிரித்தானியாவில் 56; ஐக்கிய அமெரிக்க நாடுகளில் 51.

ஒரு நாட்டுச் சனத்தொகையின் வயதமைப்பு அந்நாட்டின் அபிவிருத்தியுடன் நேராகத் தொடர்புடையதாகும். உணவு உற்பத்தி, சுகாதார வசதிகள், கல்வி வசதிகள் போன்ற நலன்புரிச் சேவைகளை வழங்குவதற்கும், தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கும் ஏற்ற திட்டங்களை வகுப்பதற்கு வேண்டிய தகவல்களை வயதமைப்பிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். ஒரு நாட்டிலே மற்றவர்களில் தங்யிருக்கும் இளையோருடைய எண்ணிக்கை அதிகமாக இருக்குபோது உணவு, சுகாதார வசதிகள், கல்வி வசதிகள், தொழில் வாய்ப்பு ஆகியவற்றின் பொருட்டுப் பெருந்தொகையான பணத்தைச் செலவிடவேண்டி நேரிடுகின்றது.

வருமானம் தாழ்ந்த மட்டத்திலிருக்கத் தங்கியிருப்பவர்களின் வீதம் உயர்ந்த மட்டத்தில் இருக்குமாயின் சேமிப்புக் கட்டாயமாகக் குறையும். மூலதனச் சம்பாத்தியத்தைப் பெறுவதற்குச் சிறந்த வழி சேமிப்புச் செய்தல். ஆயின், சனத்தொகை துரிதமாகப் பெருவகுவது காரணமாக நுகர்வுச் செலவு அதிகரிப்பதனால் சேமிப்புக் குறைகின்றது. இது பொருளாதாரத்தில் எல்லா அமிசங்களிலும் பிரதிபலிக்கும். ஆயின், அபிவிருத்தி அடைந்துவரும் ஏனைய நாடுகளைப் போல இலங்கையும், முதலீடு செய்வதற்குப் போதிய சேமிப்புக் கிடைக்காமையினாற் பிறநாட்டு உதவியை நம்பியிருக்க வேண்டி இருக்கின்றது.

இலங்கைக்குச் சொந்தமாகவுள்ள நிலப்பரப்பு வரையறையுடையது. வளமுள்ள மண், நல்ல காலநிலை, சுத்தமான நீர் ஆகிய வசதிகள் காணப்படும் இடங்களிலே மனிதன் குடியேறுவது இயல்பு. அப்படியான பகுதிகள் அபிவிருத்தியடைவதுடன் மனிதனுடைய தேவைகளும் பலவாகப் பெருக, முதலிலே உணவுப் பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்தப்பட்ட நிலப்பரப்புகளையே வேறு பல தேவைகளுக்கும் பயன்படுத்த வேண்டி நேரிடுகின்றது. பெருந் தெருக்கள், கட்டடங்கள், நீர்த்தேக்கங்கள் தொழிற்சாலைகள், விமான நிலையங்கள் போன்றவற்றை அமைப்பதற்கு இவ்வாறு நிலம் தேவைப்படும். பயிரிடத்தக்க பகுதிகளிலேயே குடியிருப்பதற்கு வேண்டிய வீடுகளும் அமைக்கப்படுகின்றன. இலங்கையில் நிலம் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என 9 ஆம் ஆண்டிற் கற்றுள்ளீர்கள். வரையறையுடைய ஒருவளம் என்பதனால் நிலத்தை நாம் சிந்தனையுடன் பயன்படுத்தல் வேண்டும்.

எமக்குள்ள முழு நிலப்பரப்பில் 40% மாத்திரமே பயிரிடத்தக்க நிலமாகும். இந்த நிலம் முழுவதிலும் உணவுப் பயிர்கள் செய்கை பண்ணப்படுவதில்லை. எமக்குப் பிறநாட்டுச் செலாவணியைப் பெற்றுத் தருகின்ற வர்த்தகப் பயிர்களின் பொருட்டுப் போதிய நிலம் பயன்படுத்தப்படுகின்றது. எனவே சனத்தொகை பெருக, குறிப்பாகப் பிறரில் தங்கியிருக்கும் இளையவர்களின் தொகை பெருக, உணவை வழங்குவது பற்றிய பிரச்சினைகள் தோன்றக்கூடும். ஒரு நாட்டின் உணவு வழங்கலை அதிகரிக்கச் செய்வதற்குரிய வழிவகைகளைப் பற்றி நினைவு கூருவோம்.

(i) புதிய நிலங்களிற் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளல்.

(ii) ஏற்கனவே பயிர் செய்யப்படும் நிலங்களிலிருந்து உயர்ந்த அறுவடையைப் பெற்றுக் கொள்ளல்.

(iii) உணவுப் பொருள்களை இறக்குமதி செய்தல்.

(iv) புதிய உணவுப் பொருள்களைக் கண்டுபிடித்தல்.

ஆகியன அவற்றுள் சில முறைகளாகும்

துரித மகாவலித் திட்டத்தின் கீழ் 13,000 எக்ரெயார் (320,000 ஏக்கர்) புதிய காணியில் பயிர் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆயின், சனத்தொகை பெருகுவதனாலும் சமுதாயத்தின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்தற் பொருட்டுக் கேள்வி அதிகரிப்பதனாலும் இவ்வாறாகப் புதிய காணிகளிலே பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் திட்டத்தினைத் தொடர்ந்து நடைமுறைப் படுத்துவதற்கு வாய்ப்புக் கிடைக்கமாட்டாது. மேலும், காடுகளை அழிப்பதனாலும், மண்ணரிப்பு, மழை வீழ்ச்சி முறையிலேற்படும் மாற்றங்கள், முதலியனவும் ஏற்படக்கூடும்.

ஏற்கனவே பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் காணிகளிலே அறுவடையைப் பெருக்குவதற்குப் புதிய தொழினுணுக்க முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. ஆயினும் கிருமி கொல்லிகள், களைக்கொல்லிகள் ஆகியனவற்றையும் போதிய பசளை வகைகளையும் பிரயோகிப்பதற்கு அதிக செலவு ஏற்படுவதுடன் இவற்றினாற் பல தீய விளைவுகளும் உண்டாகக்கூடும். அது மாத்திரமன்றிக் குறிக்கப்பட்ட ஒரு எல்லை வரை மாத்திரமே புதிய அறிவைப் பயன்படுத்தி அறுவடையைப் பெருக்கலாம்.

உணவுப் பொருள்களை இறக்குமதி செய்யும் முறையும் உணவுப் பொருள்கள் கிடைக்கும் என்பதை உறுதிப்படுத்த மாட்டாது. எமது நாட்டிலே சனத்தொகை துரித வேகத்திலே வளர்ந்து வருவதனால், உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு அதிக பிறநாட்டிச் செலாவணியைச் செலவிட வேண்டியுள்ளது. மேலும், இன்று எமக்கு உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்கின்ற நாடுகள் இன்னும் எவ்வளவு காலத்துக்கு இவ்வாறு ஏற்றுமதி செய்யக்கூடியதாக இருக்குமெனத் திடமாகக் கூற முடியாது. எனவே அத்தியாவசியப் பொருளான உணவுப் பொருளுக்குப் பிற நாடுகளை எப்பொழுதும் நம்பியிருத்தல் புத்திசாலித்தனமன்று.

தொழில் வாய்ப்புக்களைப் பொறுத்தமட்டிலும் இப்படியான ஒரு நிலைமையே உருவாகியுள்ளது. புதிய தொழில் வாய்ப்புக்கள் முதலீட்டிலேயே தங்கியுள்ளன. முதலீட்டுக்கு வேண்டிய பணத்தைப் பெற்றுக் கொள்வதற்குரிய சிறந்த வழி தேசிய சேமிப்பு. ஆயின், அது போதியதாகக் காணப்படாமையினால் அதன் மூலம் கிடைக்கும் தொழில் வாய்ப்புகள் குறைவாகும்.

கல்வி மட்டம், வேலைவாய்ப்பின்மை ஆகியன பற்றிய தரவுகள் 8.1 ஆம் அட்டவணையிற் கொடுக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் புலனாகும் ஒரு விடயம் யாதெனில், வேலையற்றவர்களுள் அரைவாசிக்கு மேற்பட்டோர் க.பொ.த (சா.த) பரீட்சையிலும் க.பொ.த. (உ.த) பரீட்சையிலும் சித்தியடைந்துள்ளவர்கள் என்பதாகும். அடிப்படை மனித உரிமைகள் காரணமாகவும், நீண்டகால முதலீடு என்பது காரணமாகவும் கல்விக்கென ஆண்டுதோறும் அரசாங்கம் பெருந்தொகையான பணத்தைச் செலவு செய்து வருகின்றது. ஆயினும் படித்தவர்களை நாட்டின் அபிவிருத்தியில் ஈடுபடச் செய்யும் வாய்ப்பு இல்லையெனின் அது நாட்டுக்கு ஒரு பெரும் நட்டமாகும்.

வேலை செய்யும் பிரிவினர் ஈடுபட்டுவரும் தொழில்களின்படி செய்யப்பட்டுள்ள பகுப்பு 8.2 ஆம் அட்டவணையிற் கொடுக்கப்பட்டுள்ளது. விவசாயத்திலும் அதனுடன் சம்பந்தப்பட்ட தொழில்களிலும் ஈடுபட்டுள்ளவர்களின் தொகை முதலிடம் பெறுகின்றது. பல்வேறு சேவைகளில் ஈடுபட்டுள்ளவர்களின் தொகை இரண்டாவது இடத்தைப் பெறுகின்றது. விவசாயத்திலும், அதனுடன் சம்பந்தப்பட்ட கைத்தொழில்களிலும் ஏறக்குறைய மூன்றிலொரு பங்கினர் ஈடுபட்டுள்ளனர். விவசாயத்திலும் அத்துடன் சம்பந்தப்பட்ட தொழில்களிலும், பொருளாதாரத்தின் ஏனைய துறைகள் எல்லாவற்றையும் விட அதிகமானவர்கள் நாட்டம் கொண்டுள்ளனர் என்பது அதிலிருந்து புலனாகின்றது,

சனத்தொகை துரிதமாக வளர்ந்து வரும்போது, இந்த அட்டவணையிற் காட்டப்பட்டுள்ள விகிதங்களை அப்படியே இருக்கச் செய்வதற்கு மாத்திரமே இந்தத் துறைகள் ஒவ்வொன்றிலும் தொழில் வாய்ப்புகள் தற்போதுள்ளதைவிட அதிகரித்தல் வேண்டும். அவ்வாறில்லையெனில், ஒவ்வொரு ஆண்டும் பெருந் தொகையானவர்கள் வேலையில்லாதோர் கூட்டத்திற் சேர்ந்து கொள்வார்கள். மேற்குறிப்பிட்ட விடயங்களை விடச் சுகாதாரச் சேவைகள், போசணை மட்டம், கல்வி, வீடு வாசல் வழங்கள் போன்ற பல துறைகளிலே, துரிதச் சனத்தொகைப் பெருக்கத்தின் பிரதிபலிப்பைக் காணலாம். எனவே எமது நாட்டிற் போதியளவு பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான காரணிகளைப் பூர்த்தி செய்தால் மாத்திரமே இன்றும் எதிர் காலத்திலும் இலங்கை மக்களுக்கு உயர்ந்த வாழ்க்கைத்தரத்தை உறுதி செய்து கொள்ளுமுடியும்.

## கல்வி மட்டமும் வேலையின்மையும்

| | கல்விமட்டம் | வேலை பெற்றுள்ளோர் தொழிலாளர் பிரிவில் என்ன வீதம் என்பது |
|---|---|---|
| 1. | பாடசாலைக்குச் செல்லாதோர் | 4.3 |
| 2. | ஆரம்பக் கல்வி பெற்றோர் | 4.8 |
| 3. | இடைநிலைக் கல்வி பெற்றோர் | 14.6 |
| 4. | காபொத. (சா.த) சித்திபெற்றோர் | 24.5 |
| 5. | க.பொ.தா (உ..த) சித்திபெற்றோர் | 34.8 |
| 6. | பட்டதாரிகள் | 9.7 |

(மூலம் மத்திய வங்கியின்அறிக்கை 1 — 1983)

அட்டவணை 8.1

## வேலை பெற்றுள்ளோர் ஈடுபடும் கைத்தொழிலின் படியான பகுப்பு

| கைத்தொழில் | எண்ணிக்கை (ஆயிரம்) | வீதம் |
|---|---|---|
| முழுத் தொகை | 4737.7 | 100.00 |
| விவசாயம், விவசாயம் சார்ந்த கைத்தொழில்கள், கடற்றொழில் | 2172.7 | 45.8 |
| சுரங்க வேலை, கல்லுடைத்தல் | 63.7 | 1.3 |
| உற்பத்தி வேலைகள் | 568.2 | 12.0 |
| மின்சாராம், நீர், வாயு | 18.0 | 0.4 |
| கட்டடத் தொழில்கள் | 229.1 | 4.8 |
| சில்லறை வியாபாரம், மொத்த வியாபாரம், ஹோட்டல்கள், போசன சாலைகள் | 490.8 | 10.4 |
| போக்குவரத்து, களஞ்சியப் பராமரிப்பு, செய்திப் பரிமாற்றம் | 197.4 | 4.2 |
| நிதி வழங்கள், காப்புறுதி | 52.9 | 1.1 |
| பல்வேறு குடிசன, சமூக சேவைகள் | 648.1 | 13.7 |
| பிற | 296.7 | 6.3 |

(மூலம் ; குடிசன மதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்).

அட்டவணை 8.2

ஒன்பதாம் அத்தியாயம்

# இலங்கையின் அபிவிருத்தியின் புதிய போக்கு

சுதந்திர இலங்கை தேயிலை, இறப்பர், தென்னை ஆகிய மூன்று பிரதான பயிர்களை ஆதாரமாகக் கொண்ட ஒரு பொருளாதார முறையை உரிமை வழியாகப் பெற்றுள்ளதென 7 ஆம் அத்தியாததிலே படித்துள்ளோம். அதன் விளைவாக இலங்கையின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட, உறுதியற்ற, உலகச் சந்தையிலேயே இதன் பொருளாதாரம் தங்கியிருந்து வருகின்றது. அவ்வாறே, ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலமாக வாழ்வாதாரப் பயிர்ச்செய்கையை அலட்சியஞ் செய்து வந்தமை காரணமாக உணவுப் பொருட்களுக்குப் பிற நாடுகளிலே பெரிதும் தங்கியிருக்க வேண்டிய துர்ப்பாக்கியமான நிலையையும் சுதந்திர இலங்கை எதிர்நோக்க வேண்டியிருந்தது. மறுபுறம், உணவுப் பொருள்களுட்பட எமக்குத் தேவையான பொருள்களை இறக்குமதி செய்யும் வாய்ப்பு எமது பிரதான ஏற்றுமதிப் பொருள்கள் மூலம் கிடைத்த வருவாயிலேயே முற்றிலும் தங்கியிருந்தது. இதனால் எமது பொருளாதாரம் மிகவும் உறுதியற்ற தன்மையுடையதாயிற்று. எனவே, பிறநாட்டு வருவாயைப் பெருக்கி அதனைப் பாதுகாப்பதற்கு வேண்டிய வழிவகைகளிலே கவனஞ்செலுத்துவது அவசியமாகும்.

சமூக ரீதியாக நோக்குமிடத்தும் குடியேற்றவாத ஆட்சி முறைக்குரிய பல பிரச்சினைகளைச் சுதந்திர இலங்கை உரிமை வழியாகப் பெற்றுக் கொண்டது. கல்வி, சுகாதாரம், வீடமைப்புப் போன்ற பிரச்சினைகள் இவற்றுள் முக்கியமான வையாகும். இந்த நிலைமையைப் போக்குவதற்கு எமது அபிவிருத்தி வழிவகைகளை மாற்றி அமைத்தல் தவிர்க்க முடியாத ஒன்றாகும். அத்துடன் அதனூடாகப் புதிய பல திருப்பங்கள் ஏற்படும்.

## வர்த்தக விவசாயம்

வர்த்தக விவசாயத்தின் மூலம் பிறநாட்டு வருமானத்தை அதிரிக்கச் செய்யக்கூடிய வழிகள் இரண்டு இருந்தன. பயிர்ச்செய்கை நிலத்தைப் பெருக்குதலும் எக்ரேயரிலிருந்து கிடைக்கும் விளைச்சலைப் பெருக்குதலும் அந்த இரு வழிகளுமாகும். ஆயின் பௌதிகக் காரணிகளின் நிமித்தம் பயிரிடத்தக்க நிலப்பரப்பைப் பெருக்குவது முடியாத காரியம் என்பதனால் விளைச்சலைப் பெருக்குவதிலேயே அதிக கவனஞ் செலுத்த வேண்டியதாயிற்று. இதற்கான முதல் நடவடிக்கையாக மீள் நடுகைத் திட்டம் செயற்படுத்தப்பட்டது. இதற்கு ஊக்கமளித்தற் பொருட்டுப் பல உதவிகள் வழங்கப்பட்டன. அத்துடன் இந்த உதவித் தொகைகள் காலத்துக்குக் காலம் கூட்டிக் கொடுக்கப்பட்டன. உதாரணமாக 1977 இல் தேயிலையை மீள் நடுகை செய்வதற்கான மானியமாக அரசாங்கத்தினால் எக்ரேயருக்கு வழங்கப்பட்ட தொகை 1985 இல் உயர்த்தப்பட்டது. அது மாத்திரமன்றி இதனைவிட முக்கியமான நடவடிக்கையாக மீள் நடுகை முறையில் அதிக விளைச்சலைத்தருகின்ற நாற்றுகளை நடும் முறை விவசாயிகளாற் பின்பற்றப்பட்டது. இவற்றைவிட உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் போன்ற பிறநாட்டுத் தாபனங்கள் மூலம் கிடைக்கின்ற உதவிகளும் பெருந் தோட்டப் பயிர்ச் செய்கையை அபிவிருத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

அவ்வாறே வர்த்தகப் பயிர்ச் செய்கையிற் கூடுதலான பசளை பயன்படுத்தப்படுவது மற்றுமொரு முக்கியமான புதிய திருப்பமாகும். அதிக பசளையைப் பயன்படுத்துவதற்கு விவசாயிகளை ஊக்கும் பொருட்டு அரசாங்கத்தினால் பசளைக்குரிய மானியங்களும் வழங்கப்படுகின்றன. 1960 களில் தெங்குப் பயிருக்குரிய பசளை உதவியாக விவசாயிகளுக்கு

வழங்கப்பட்ட தொகை 1976 ஆம் ஆண்டிலும் 1981 ஆம் ஆண்டிலும் உயர்த்தப்பட்டது. இவை அனைத்தினதும் பலனாகத் தேயிலை, இறப்பர், தெங்குப் பயிர்கள் ஆகியவற்றின் உற்பத்தி பெரிதும் உயர்ந்தது.

ஏற்றுமதிப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன் வழங்கப்பட்ட பல்வேறு உதவிகள் இவற்றின் உற்பத்தியில் ஈடுபட்டிருந்த சிறு தோட்டச் சொந்தக்காரருக்கும் வழங்கப்பட்டன. சிறு தோட்டச் சொந்தக்காரர் மத்தியிலே புதிய விவசாய அறிவினைப் பரப்புவதற்குரிய ஒரு நடவடிக்கை யாக விவசாய ஆலோசகர் சேவை ஆரம்பிக்கப்பட்டது. மூலதனப் பற்றாக்குறை சிறு தோட்டச் சொந்தக்காரரின் முக்கியமான பிரச்சினை என்பதனால் அதற்குப் பரிகாரமாக நிதி உதவித் திட்டம் ஒன்றும் அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டது.

விளைச்சலைப் பெருக்குவது போலவே உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தும் திட்டம் இவற்றுள் மிகவும் ம்க்கியமான ஒன்றாகும். 1985 இல் தேயிலை தயாரிக்கும் தொழிற்சாலைகள் 720 காணப்பட்டன. இவற்றுள் அநேகமானவை இரண்டாவது உலகப் போருக்கு பின்னர் அமைக்கப்பட்டனவாகும். இயந்திர சாதனங்கள் பழையனவாகும்போது வினைத்திறன் குறைகின்றது. இது உற்பத்தியைப் பெரிதும் பாதிக்கின்றது. ஆகையினாலேயே தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துவது மிகவும் முக்கியமான ஒரு நடவடிக்கையாகக் கருதப்பட்டது. இயந்திர உபகரணங்கள் களை நவீனமயப்படுத்துவதால் மாத்திரம் உற்பத்தித் திறன் உயர்ந்து விட மாட்டாது. இதில் தொழிலாளருடைய வினைத் திறனும் மிகவும் முக்கியமாகும். ஆகையினாலே அதற்குரிய வழியாகச் சம்பள உயர்வு, தொழிலாளர் சகாய நிதி, சேவை நிலைமைகளை மேம்படுத்தல் போன்ற வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டன.

1970 களின் காணிச் சீர்திருத்தம் மூலமாக பெருந்தோட்டக்கைத்தொழிலின் ஆரம்பத்திலிருந்து பெரும்பாலும் தனியார் துறையைச் சார்ந்திருந்த பொருளாதார நடவடிக்கைகளில் அரசாங்கம் தலையிட்டமை, இத்துறையில் ஏற்பட்ட மற்றுமொரு புதிய திருப்பமாகும். 1972 காணிச் சீர்திருத்தச் சட்டத்தின்படி வயற் காணிகள் புறநீங்கலாக, தனியாருக்குச் சொந்தமாக இருந்த 50 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகள் அச்சட்டத்தின் கீழ்க்கொண்டு வரப்பட்ட காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவினாற் கையேற்கப்பட்டன. அதன்படி 1,35,760 ஏக்கர் தேயிலைத்தோட்டக் காணி ஆணைக்குழு வசமானது. அதாவது 24.3 வீதமான தேயிலைத் தோட்டக் காணி ஆணைக்குழு வசமானது. அதன் பின்னர் இக்காணிகள் பிரதேசக் காணிச் சீர்திருத்த அதிகாரசபை, காணி ஆணையாளர் திணைக்களம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், அரச பயிர்ச் செய்கைக் கூட்டுத்தாபனம், ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபை போன்ற தாபனங்களினால் நிர்வகிக்கப்பட்டன. 50 ஏக்கருக்கு மேற்பட்ட வர்த்தகப் பயிர்த் தோட்டங்கள் மேற் குறிப்பிடப்பட்டுள்ள தாபனங்களின் நிருவாகத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டதையடுத்து, விவசாயக் கைத்தொழிலின் முகாமை, கண்காணிப்புப் போன்ற விடயங்களை நூற்றாண்டு காலமாகக் கொண்டு நடத்திய முகவர் தபானங்கள் கலைக்கப்பட்டன.

ஏற்றுமதிப் பொருள்களின் விலைகள் அடிக்கடி தளம்புகின்றன எனக் கடந்த அத்தியாயத்திலே நாம் படித்துள்ளோம். உதாரணமாக, இலங்கை இறப்பர், கிலோ 1.18 அமெரிக்க டொலராக 1979 இல் உலகச் சந்தையில் விற்பனையானது, இது 1982 இல் 0.85 டொலராகக் குறைந்தது.

தேயிலையின் விலை இவ்வளவுக்குக் குறையவில்லையாயினும் அதிலும் தளம்பல்கள் ஏற்பட்டன. தெங்குப் பொருள்களுள் பெரும்பகுதி நாட்டின் நுகர்வின் பொருட்டுப் பயன்படுத்தப்படுகின்றமையினால் அவற்றின் விலைகள் தேயிலை, இறப்பர் ஆகியவற்றின் விலைகள் போன்று தளம்புவதில்லையெனலாம்.

இந்த ஏற்றுமதிப்பொருள்களின் விலைகள் எப்பொழுதும் தளம்பிக்கொண்டிருப்பதனால், அவற்றின் விலைகளை உறுதி யாக வைத்திருப்பதற்குரிய ஒரு வழியாக அவற்றை உற்பத்தி செய்கின்ற பிற நாடுகளுடன் இணைந்து செயற்படுவதனை மற்றுமொரு முக்கியமான புதிய திருப்பமாகக் கூறலாம். விலைகளை நிலையாக வைத்திருப்பதன் பொருட்டு, இயற்கை இறப்பரை உற்பத்தி செய்கின்ற மலேசியா, இலங்கை முதலிய நாடுகள் அண்மையிற் செய்து கொண்டுள்ள ஒப்பந் தங்களை உதாரணமாகக் கூறலாம்.

சுதந்திரம் பெற்ற காலத்தில் இலங்கையின் மொத்தப் பிற நாட்டு வருமானத்திற் பெரும் பகுதி தேயிலை, இறப்பர், தென்னை ஆகிய பயிர்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தாயினும், அது படிப்படியாகக் குறையலாயிற்று. உதாரணமாக எடுத்துக்கொண்டால், 1956 இல் இலங்கை ஏற்றுமதி செய்த பொருள்களின் மொத்தப் பெறுமதியான 1,734 மில்லியன் டொலரின் 60% தேயிலையிலிருந்தும் 16% இறப்பரிலிருந்தும் 12% தெங்குப் பொருள்களிலிருந்தும் கிடைத்தது. ஆயின், 1979 இல் எமது ஏற்றுமதியின் மொத்தப் பெறுமதி 15,285 மில்லியன் டொலராக அதிகரித்ததாயினும் தேயிலை, இறப்பர், தெங்குப் பொருள்கள் ஆகியவற்றின் மூலம் முறையே 37.15, 8 என்ற வீத வருமானமே கிடைத்தது.

இவ்வாறாக, இந்தப் பிரதான பயிர்கள் மூலம் கிடைத்த வருமான வீதம் குறைந்தமைக்குரிய முக்கிய காரணம் புதிய சிறு ஏற்றுமதிப் பயிர்கள். புடைவைகள், தைக்கப்பட்ட ஆடைகள், பெற்றோலியப் பொருள்கள், இரத்தினக் கற்கள் போன்றன ஏற்றுமதிச் சந்தையை அடைந்தமையாகும்.

இக்காலத்திலே ஏற்றுமதிப் பொருள்களைப் பன்முகப் படுத்துவதிலே கிராமியத்துறையின் பங்கு முக்கியமானதாகும். 1976 களில் கோப்பி, கொக்கோ, காட்டு முந்திரிகை, பழ வகைகள், மலர்வகைகள், விசித்திரக் கற்கள், கறுவா, மிளகு,

பயறு, கராம்பு போன்ற சிறு ஏற்றுமதிப் பொருள்களின் விலைகள் உலகச்சந்தையில் உயர்ந்தன. இதன் விளைவாக, குறிப்பாகக் கிராமப்புறங்களிற் சிறியளவில் மேற்கொள்ளப்பட்ட இப்பயிர்ச் செய்கைகளிலே பெரும் முன்னேற்றம் ஏற்பட்டமை ஒரு புதிய திருப்பமாகும். பிற ஏற்றுமதிப் பொருள்களின் உற்பத்தி பற்றிய புள்ளி விவரங்களைச் சுலபமாகப் பெற்றுக் கொள்ளலாம். ஆயின் கிராமப் புறங்களிலே உற்பத்தியாகும் இந்த ஏற்றுமதிப் பொருள்கள் பற்றிய தரவுகளை அவ்வாறு பெற்றுக் கொள்ளுதலரிது. ஆயினும் கிடைக்கப்பெற்ற தகவல் களின்படி 1971 இல் இப்பொருகள் மூலம் கிடைத்த மொத்த வருமானம் 89.5 மில்லியன் ரூபாயாகக் காணப்பட்டது. அது 1974 இல் 248.2 மில்லியன் ரூபாயாகவும் 1977 இல் 548.9 மில்லியன் ரூபாயாகவும் உயர்ந்தது. 1977 இன் பின்னர் பொருள்களின் ஏற்றுமதியை மேலும் ஊக்குவிக்கும் பொருட்டுப் பல வழி வகைகள் கைக்கொள்ளப்பட்டன. இவற்றுள் ஏற்று மதிக் கிராமங்களை அமைத்தமை மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

1990 இல் மொத்த விவசாய ஏற்றுமதியின் தேறிதய பெறுமதி 60486 மில்லியன் ரூபாய் வரை உயர்ந்தமை இந்த வழிமுறைகளின் கூட்டுப் பலனெனலாம்.

## நுகர்வுப் பயிர்ச் செய்கை

பிறநாட்டுச் சந்தையுடன் இணைந்த வர்த்தகப் பயிர்ச்செய்கை முறையானது குடியேற்றவாத ஆட்சிக் காலத்தில் இலங்கையிற் பரவியது. அதனுடன் கிராமிய, வாழ்வாதாரப் பயிர்ச்செய்கையும் வளர்ந்து வந்தமை இந்த நாட்டுப் பொருளா தாரத்துறையிற் காணப்படும் ஒரு சிறப்பாகும். வாழ்வாதாரப் பயிர்ச்செய்கையானது இந்த நாட்டுக்கு இயல்பான ஒன்று மாத்திரமன்று. இந்நாட்டு மக்களுடைய தேவைகளுக்கு ஏற்ப வளர்ச்சியடைந்துள்ள ஒரு முறையெனவும் கூறலாம். நாளாந்த நுகர்வுக்குத் தேவையான நெல், உப உணவுப் பொருள்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வது இந்தப் பயிர்ச்செய்கை முறையின் முக்கியமான குறிக்கோளாகும்.

சுதந்திரம் பெற்ற பின்னர் அதிகாரத்துக்கு வந்த அர சாங்கம் ஒவ்வொன்றும் மேற்கொண்ட பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளிலே வாழ்வாதாரத் துறைக்கு

முக்கியத்துவமளித்து அதனைக் கட்டியெழுப்பியமைக்கு இரண்டு முக்கியமான காரணங்களுள. அவையாவன ; (1) இலங்கை மக்களுள் பெரும்பாலானோர் நெற் செய்கையினை அடிப்படையாகக் கொண்ட வாழ்வாதாரப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளமை (2) சனநாயக ஆட்சி முறையிற் பெரும்பாலான வர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது அரசாங்கத்தின் பொறுப்பெனும் கொள்கை.

இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் போலவே சுதந்திரம் பெற்ற பின்னரும் உணவுப் பொருள்களை இறக்குமதி செய்யும் போக்குடையதாக இருந்தது. இது இலங்கை உலகச் சந்தையுடன் கொண்டுள்ள தொடர்பின் ஒரு முக்கியமான அம்சமாகக் காணப்பட்டது. பிற நாடுகளிலே நம் நாடு இப்படியாகத் தங்கியிருந்தமையினால், எமது பொருளாதார அபிவிருத்தி பெரிதும் பாதிக்கப்பட்டது என்பது விளங்கியதனால் நெற்செய்கையை அபிவிருத்தி செய்து அதிக பலனைப் பெற்றுக் கொள்ளுவதில் அக்கறை கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இது குறித்துப் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றின் மூலம் வாழ்வாதாரப் பயிர்ச் செய்கையிற் பல புதிய திருப்பங்கள் ஏற்பட்டன. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முக்கியமா நடவடிக்கைகள் இரண்டுள. அவையாவன ; (1) நெற்காணிகளின் பரப்பளவைப் பெருக்குதல் (2) ஏக்ரேயருக்குக் கிடைக்கும் அறுவடையின் அளவைப் பெருக்குதல்.

நெற்செய்கைக்குரிய நிலப் பரப்பைப் பெருக்கும் போக்குச் சுதந்திரத்துக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இருந்து வருகின்றது. 1935 இல் டீ. எஸ். சேனானாயக்க அவர்களின் காணி அபிவிருத்திச்சட்டத்தின் மூலம் காணிப் பற்றாக்குறையினால் இடர்ப்பட்ட ஈரவலய விவசாயிகளுக்கு முதன் முதலாக வெப்ப வலயத்திற் காணிகள் பெற்றுக் கொடுக்கும் முறை ஆரம்பிக்கப்பட்டது.

இக்கொள்கை சுதந்திரத்தின் பின்னர் மென்மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டதனால் விவசாயக் குடியேற்றங்கள் பரவின. எடுத்துக்காட்டாக, 1936 தொடக்கம் 1966 வரை வெப்ப வலயக் காணிகள் உட்பட 6 இலட்சம் ஏக்கர் நிலம் 83,000 விவசாயக் குடும்பங்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கப்பட்ட தாக அசரசாங்கத்தின் உத்தியோகபூர்வமான அறிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன. அரசாங்கம் இக்கொள்கையின்படி மேற்கொண்டுள்ள முக்கியமான நடவடிக்கையாக 1970 இல் ஆரம்பிக்கப்பட்டு கி.பி. 2000 இற் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் மகாவலித்திட்டத்தினைக் குறிப்பிடலாம். 1978 இல் இத்திட்டத்தின் வரைவில் மாற்றங்கள் செய்யப்பட்டுப் பல துரிதத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. இந்தத் திட்டம் காரணமாக நெல் செய்கை பண்ணப்பட்ட காணியின் பரப்பளவு மிகவும் குறுகிய ஒரு காலத்தினுள் துரிதமாக அதிகரித்துள்ளது.

ஒரு எக்ரேயர் காணியின் விளைச்சலைப் பெருக்குவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளும் ஒரு புதிய திருப் பத்தினைக் குறிக்கின்றன. வாழ்வாதாரப் பயிர்ச் செய்கையை அபிவிருத்தி செய்யும் பொருட்டு அரசாங்கம் மேற்கொண்டுள்ள பல்வேறு நடவடிக்கைகளுள், நெல்லுக்குரிய உத்தரவாத விலைத் திட்டத்தினைச் செயற்படுத்தி வருவது முக்கியமான ஒன்றாகும். நியாயமான விலைக்கு, உரிய காலத்திலே உற்பத் திப் பொருள்களை விற்பனை செய்துகொள்ள முடியாமை, வாழ்வாதாரப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் எப்பொழுதும் எதிர்நோக்குகின்ற ஒரு பிரச்சினையாகும். தமக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கும் என்பது பற்றியும் இவர்கள் திட்டவட்டமாக அறியமாட்டார்கள்.

உணவு உற்பத்திப் பெருக்கத்துக்குக் குறுக்கீடாக இருந்த இத்தடையினைப் போக்குவதற்கு நெல்லுக்குரிய உத்தரவாத விலைத்திட்டம் 1948 இல் ஆரம்பிக்கப்பட்டது. 1972 இல் நெல் சந்தைப்படுத்தும் சபை தாபிக்கப்பட்டதையடுத்து உத்தரவாத விலையின்படி இத்தாபனம் நெல்லைக் கொள்ளவனவு செய்து வருகின்றது. உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் ஒரு புசல் நெல்லுக்கு அரசாங்கத்தினாற் செலுத்தப்படும் விலை பல தடவைகள் உயர்த்தப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, 1948 இல் ஒரு புசலின் உத்தரவாத விலை 8.00 ரூபாயாக இருந்தது. இது 1952 இல் 12.00 ரூபாயாகவும் 1977 இல் மேலும் 40.00 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டது. மீண்டும் 1986

இல் இது ரூ. 62.50 ஆக உயர்த்தப்பட்டது. இந்த விலையின்படி 169,181 இலட்சம் மெட்றிக் தொன் நெல், 1986 இல் நெல் சந்தைப்படுத்தும் சபையினாற் கொள்வனவு செய்யப்பட்டது. அநுராதபுரம், பொலன்னறுவை, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய உற்பத்தி கூடிய மாவட்டங்களிலிருந்து இக்கொள்வனவுகள் செய்யப்பட்டன.

விவசாயக் காப்புறுதித் திட்டத்தின் மூலம் விவசாயிகளின் வருமானத்தின் நம்பிக்கையற்ற தன்மையைப் போக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விவசாயிகளிடமிருந்து தவணை முறையில் ஒரு தொகை பணத்தை அறவிட்டு ஒரு நம்பிக்கை நிதியை உருவாக்கி, அறுவடை அழிவினால் நட்டமடையும் விவசாயிகளுக்கு அந்நிதியிலிருந்து நட்டஈடு வழங்குவதே விவசாயக் காப்புறுதித் திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும், தமக்கு ஏற்படும் அழிவுகளுக்கு அல்லது நட்டங்களுக்குப் போதியளவு நட்டஈடு கிடைக்குமெனும் நம்பிக்கை இருந்தால் விவசாயிகள், அதிக ஊக்கத்துடன் உழைத்து உற்பத்தியை அதிகரிக்கச் செய்வார்கள் என்பதில் ஐயமில்லை.

வாழ்வாதாரப் பயிர்ச் செய்கைத் துறைமூலம் கிடைக்கும் பலன் குறைவாக இருப்பதற்குக் கிராமவாசிகளின் கடன்பழுவும் ஒரு காரணமெனலாம். எப்பொழுதும் பணவசதியின்மையினால் அல்லற்படுவதனால் அதனைப் போக்குவதற்குரிய வாய்ப்பும் இவர்களுக்கு குறைவு. அதிகாரத்துக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும், திருப்திகரமான கடன் வசதிகளைக் கிராமப் புறத்தவர்களுக்குச் செய்து கொடுப்பதற்குப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளமையும் ஒரு திருப்பமாகும். 1961 இல் மக்கள் வங்கி தாபிக்கப்பட்டமை, கிராமப் புறத்தவருக்குரிய கடன் வசதிகளைப் பெருக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கையாகும். அவ்வாறே, கூட்டுறவுச் சங்கங்கள், அனுமதிக்கப்பட்ட சங்கங்கள் ஆகியவற்றுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் நிதி உதவிகளையும் பிற உதவிகளையும் வழங்குவது மக்கள் வங்கியின் குறிக்கோள்களாகும்.

இலங்கை வங்கியும் கிராமப்புறத்தவருக்கு உதவி செய்வதன் பொருட்டு 1972 இல் விவசாய சேவை நிலையங்களில் வங்கிக் கிளைகளைத் திறந்தது. இவை மூலம் கிரமப்புறப் பொருளாதார அபிவிருத்திக்கு ஊக்கமளிப்பதற்கும் கிராமப்புறக்

காணிகளிலிருந்து உச்சப் பலனைப் பெறுவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக, கிராமப்புறத்தவர்களுக்குரிய கடன் வசதிகளையும் பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகளையும் விருத்தி செய்யும் நோக்குடன் 1981 மார்ச்சு முதலாந் தேதி மத்திய வங்கியின் கிளை ஒன்று மாத்தறையிலே திறக்கப்பட்டது. அதன் சேவைகள் இன்னும் பல பிரதேங்களுக்கு இப்போது கிடைக்கின்றன. விவசாயத்துறை ஆய்வு வேலைகளின் பொருட்டு 1972 இல் விவசாய ஆராய்ச்சி, பயிற்சித்தாபனம் நிறுவப்பட்டமையும் ஒரு முக்கிய நடவடிக்கையாகும்.

விவசாயஞ் சம்பந்தமான பிரச்சினைகள் பற்றி நடவடிக்கைகள் மேற்கொள்ளுதற் பொருட்டு விவசாய அபிவிருத்திச் சபையெனும் தாபனம் அண்மையில் இலங்கையிலே தாபிக்கப்பட்டுள்ளது. இது 1978 சனவரி முதலாந் தேதி முதற் செயற்பட்டு வருகின்றது. விவசாத்துடன் சம்பந்தப்பட்ட முக்கியமான எந்த ஒரு விடயம் பற்றிதும் இறுதியான முடிவை எடுக்கும் பொறுப்பு இதற்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆதிகாலத்திலிருந்தே போதியளவு மூலதனத்தைச் செலவு செய்து அமைக்கப்பட்ட நீர்ப்பாசானமுறை ஒன்று வாழ்வாதார பயிர்ச்செய்கைத் துறையிற் காணப்படுகின்தெனலாம். குளங்கள், ஏரிகள், கால்வாய்கள் ஆகியன மூலம் நீரைக் கட்டுப்படுத்தியதால் அறுவடையைப் பெருக்கும் வாய்ப்புக் கிடைத்தது. முன்னேற்றமான நீர்ப்பாசன முறைகள் மாத்திரமல்லாது புதிய உற்பத்தி முறைகளும் இன்று வாழ்வாதாரப் பயிர்ச் செய்கைத் துறையிற் கைக்கொள்ளப்படுவதை நாம் காண்கின்றோம். இரசாயனப் பசளை வகைகள், கிருமி கொல்லிகள் போன்ற நவீன மருந்து வகைகளும், டிறாக்ரர்கள், நெல் விதைக்கும் இயந்திரங்கள் போன்ற நவீன கருவிகளும் இதிற் பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன் அதிக விளைச்சலைத் தரக்கூடிய விதைநெல் வகைகளும் இன்று பிரயோகிக்கப்படுகின்றன. அதிக விளைச்சலைத் தரக்கூடிய, கலப்பின நெல் வகைகள் இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து இலங்கையில்

விதைக்கப்பட்டு வருகின்றன. எச். 4. எச். 7. எச். 8 எனும் விதை வகைகள் இவற்றுக்குரிய உதாரணங்களாகும். சர்வதேச ஆராச்சிகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட விடயங்களும் பத்தளகொடை, கன்னொறுவை, மகா இலுப்பள்ளமை போன்ற தேசிய ஆய்வு நிலையங்களின் கண்டுபிடிப்புகளும் வாழ்வாதார விவசாயத்துறையின் அபிவிருத்திக்குப் பெரிதும் கைகொடுத்துள்ளன.

1987 மார்ச்சு மாதம் ஆரம்பிக்கப்பட்ட விவசாயிகள் காப்புறுதித் திட்டம் வாழ்வாதார விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஊக்குமளிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முக்கியமான ஒரு நடவடிக்கையாகும்.

## உப - உணவுப் பயிர்கள்

உணவுப் பிரச்சினை மோசமான நிலையை அடைந்ததினால் சுதந்திரத்தின் பின்னர் அதிகாரத்துக்கு வந்த அரசாங்கங்கள் ஒவ்வொன்றும் உப - உணருவுப் பொருள்களின் உற்பத்தியை அபிவிருத்தி செய்வதன் முக்கியத்துவத்தினை உணர்ந்து கொண்டன. தேசிய நுகர்வின் பொருட்டுச் செத்தல் மிளகாய், சின்ன வெண்காயம், பம்பாய் வெண்காயம், பயறு, பருப்புப் போன்ற உப உணவுப் பொருள்களைப் பெருந்தொகையாக இறக்குமதி செய்வதற்குப் பெருந்தொகையான வெளிநாட்டுச் செலாவணி செலவானது. இதற்குரிய மாற்று வழியாக இப்பொருள்களின் உற்பத்தியை உள்ளூரில் தூண்டிவிடும் கொள்கை 1960 இற்குப் பின்னர் கைக்கொள்ளப் பட்டது. வடக்கு, மத்திய மாகாணங்களிலே, உருளைக் கிழங்குப் பயிர்ச் செய்கையை ஊக்குவித்தற் பொருட்டு உத்தரவாத விலையாக அந்தருக்கு வழங்கப்பட்ட ரூ. 28/- 1968 இல் ரூ. 44/- ஆக உயர்த்தப்பட்டது. வெண்காயம் மிளகாய்ப் பயிர்ச் செய்கைகளை அபிவிருத்தி செய்வதற்குரிய விசேட நடைமுறைகளாக, அதிக விளைச்சலைத் தரும் பயிர்கள் பற்றிய ஆராய்ச்சிகளும் அவற்றின் நோய்களைக் கட்டுப்படுத்துவது பற்றிய பிரசாரங்களும் அமையும். நெற்செய்கையிற் போலவே, உப உணவுப் பயிர்ச் செய்கையிலும் ஈடுபடுவதற்கு விவசாயிகளைத் தூண்டுவதில் அரசாங்கம் மிகுந்த கவனஞ் செலுத்தி வருகின்றது.

# துரித மகாவலித் திட்டம்

மகாவலி அபிவிருத்தித் திட்டமே எமது நாட்டில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட திட்டங்களுள் மிகப் பெரியது. (9 ஆம் ஆண்டு சமூகக் கல்வி நூலின் 6 ஆம் அத்தியாயத்திலே மகாவலி அபிவிருத்தித் திட்டம் பற்றியுள்ள பகுதியை வாசிக்க). தற்போதுள்ள அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட துரித மகாவலித்திட்டத்தின்படி முதற் திட்டத்திலடங்கும் பிரதான நீர்த்தேக்கம் 5.6 ஆண்டுகளிற் பூர்த்தியாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் மூலம் புதிய 3,20,000 ஏக்கர் நிலம் உட்பட 3,50,000 ஏக்கர் நிலத்தை அபிவிருத்தி செய்யலாமெனவும் 400 மெகொவாட் மின்வலுவை உற்பத்தி செய்யலாமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்திட்டம் மூன்று பிரதான பகுதிகளைக் கொண்டுள்ளது;

(1) விக்டோரியா, கொத்மலை, மாதுறு ஓய, ரண்தெனிகலை ஆகிய பிரதான நீர்த்தெக்கங்களை அமைக்கும் திட்டம்.

(2) பள்ளத்தாக்குக் கால்வாய் அபிவிருத்தித் திட்டம்.

(3) விவசாயக் குடும்பங்களைக் குடியிருத்தல், புதிய நகரங்களை அமைத்தல், கைத்தொழில், விவசாய அபிவிருத்தி ஆகியன சம்பந்தமான திட்டம்.

விக்டோரியாத் திட்டம் முக்கியமாக, ஒரு நீர் மின்வலுத் திட்டமாகும். திட்டமிட்டபடி 1984 இல் விக்டோரியா நிர்த்தேக்கத்தை நிரப்புவதற்கு ஆரம்பிக்கப்பட்டது. இதனால் இலங்கையின் நீர் மின்வலு உற்பத்தி 210 மெகாவொட்டினால் அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

கொத்மலை நிர் மின்வலு ஆலோசனைத் திட்டத்திலே, மகாவலி கங்கையின் ஒரு கிளை ஆறான கொத்மலை ஓயவுக்குக் குறுக்கே ஒரு பெரிய அணைக்கட்டும் பூமிக்கு அடியிலுள்ள நீர்மின் நிலையத்துக்குச் செல்வதற்கான சுரங்கப் பாதைகளும் அமைக்கப்பட்டிருப்பதைத் தற்போது காணலாம். 1984 இற் கொத்மலை நீர்த்தேக்கத்தையும் நிரப்பும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

| தலைப்பு | 1987 மொத்தம் | 1988 மொத்தம் | 1989 மொத்தம் | 1990 மொத்தம் |
|---|---|---|---|---|
| ''எச்'' பிரதேசம் | 34,574 | 37,677 | 23,213 | 49,334 |
| (அ) நெல் | 26,612 | 27,511 | 18,815 | 35,487 |
| (ஆ) ஏனைய பயிர்கள் | 7,962 | 10,166 | 4,398 | 13,847 |
| ''பீ'' பிரதேசம் | 11,854 | 12,654 | 18,320 | 23,498 |
| (அ) நெல் | 10,746 | 11,795 | 17,357 | 21,928 |
| (ஆ) ஏனைய பயிர்கள் | 1,108 | 859 | 963 | 1,570 |
| ''சீ'' பிரதேசம் | 19,453 | 24,581 | 25,873 | 32,082 |
| (அ) நெல் | 18,738 | 22,773 | 23,974 | 28,359 |
| (ஆ) ஏனைய பயிர்கள் | 715 | 1,803 | 1,899 | 13,723 |
| ''ஜீ'' பிரதேசம் | 8,153 | 7,856 | 8,206 | 8,418 |
| (அ) நெல் | 6,090 | 5,570 | 5,946 | 6,896 |
| (ஆ) ஏனைய பயிர்கள் | 2,063 | 2,286 | 2,260 | 1,522 |
| மொத்தம் | 74,034 | 82,768 | 75,612 | 2,26,664 |

அட்டவணை 9.1 : மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ்ப் பயிரிடப்படும் புதிய நிலப்பரப்பு (எக்ரெயர்) மூலம் : இலங்கை மகாவலி அதிகார சபை

மாதுறு ஓய நீர்த்தேக்கத் திட்டமானது முக்கியமாக நீர்ப்பாசனம்,விவசாயக் குடும்பங்களைக் குடியேற்றுதல் ஆகிய வற்றுக்குரிய ஒரு திட்டமாகும். இதன் மூலம் 3.75,000 எக்ரெயர் புதிய நிலத்துக்கும் தற்போது செய்கை பண்ணப்பட்டு வரும் 3,7000 எக்ரெயர் நிலத்துக்கும் நீர் வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

துரித மகாவலித் திட்டத்தின் மிகப் பெரிய நீர்த்தேக்கத் திட்டம் றண்தெனிக்கலை. இதனால் மகாவலித் திட்டத்தைச் சேர்ந்த 'சி' 'பீ', பிரதேசங்களுக்கு நீர் வசதி அளிக்கப்பட்டுள்ளது.

9.1 அட்டவணையிலே மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ்ப் பயிரிடத்தக்க புதிய நிலப்பரப்பு எவ்வளவு என எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. 1982 இல் இந்த அட்டவணையின் தரவுகளின்படி ஏ, பீ, சி, ஜீ, ஆகிய பிரதேசங்களிலே நெல்லும் ஏனைய பயிர்களும் 31.348 எக்ரெயர் புதிய நிலத்திற் செய்கை பண்ணப்பட்டன. செய்கைக் காணி 1985 இல் 64,175 எக்ரெயராக உயர்ந்துள்ளது. அத்துடன் 1984 ஆம் ஆண்டளவில் மகாவலிக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் 41,670 குடும்பங்கள் குடியேற்றப்பட்டன.

மகாவலித் திட்டம் வெற்றியளிப்பதற்குக் காட்டு வளங்களைப் பாதுகாப்புது மிகவும் முக்கியமாகும். இதனால் மகாவலிக் குடியேற்றங்களில் வசிக்கின்றவர்களுக்குப் போதியளவு விறகு. மரம் ஆகியன சுலபமாகக் கிடைத்தற் பொருட்டு இப்போதுள்ள மேட்டுநிலத்தை முடிந்தவரை அப்படியிருக்கச் செய்வதற்கும், மறு நடுகை செய்வதற்கும் மகாவலி அதிகாரசபை நடவடிக்கைகள் எடுத்துள்ளது. இத்திட்டத்தின் அதிகார பிரதேசத்திதுள்ள விறகு மரங்களை வளர்ப்பதற்கும் கிராமங்கள் மத்தியிற் காடுகளை உருவாக்கு வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மகாவலிப் பகுதியில் நீர்ப்பாசனத் திட்டங்களைச் செயற் படுத்துவதற்கும் அவற்றைக் கொண்டு நடத்துவதற்கும் புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. நீர்ப்பாசன நீரைப் பயன்படுத்துகின்ற விவசாயிகளிடமிருந்து நீர்ப்பாசனக் கட்டணம் ஒன்றை அறவிடுவதற்கு 1984 இல் மகாவலி பொருளாதாரப் பிரிவு நடவடிக்கைகள் எடுத்துள்ளது. 1984 இல் ஏக்கருக்கு ரூ. 100/- அறவிடப்பட்டது. நீர்ப்பாசனத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் பேணுவதற்கும் ஏற்பட்ட செலவில் 50% நீர்ப்பாசனக் கட்டணம் மூலம் பெற்றுக்கொள்ளப் பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

மகாவலிக் குடியேற்றங்களின் ஆரம்பக் கட்டங்களிலே சமூக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், சுகாதாரம், கல்வி போன்ற அடிப்படை வசதிகளே வழங்கப்பட்டன. ஆயின், இத்திட்டத்தின் குடியேற்றங்களிலே, தற்போது பரந்த அளவிற் சமூக அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவது ஒரு புதிய போக்காகும். இது பற்றி மகாவலிப் பொருளாதாரப் பிரிவு கவனஞ் செலுத்தி வருகின்றது.

## பிற நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டங்கள்

உணவுப் பொருள்களினதும் உப-உணவுப் பொருள் களினதும் உற்பத்தியைப் பெருக்குவதற்கு நீர்ப்பாசன முறை களைப் பயன்படுத்த ஆரம்பிக்கப்பட்டதை அடுத்துக் கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் இவற்றின் உற்பத்திகள் குறிப் பிடத்தகளவு உயர்ந்துள்ளன. புதிய திட்டங்களை வகுத்தல், ஆரம்பிக்கப்பட்டுள்ள நீர்ப்பாசனத் திட்டங்களைக் கொண்டு நடத்துதல், சிறிய குளங்களையும் ஏரிகளையும் புனரமைப்புச் செய்தல் போன்ற நடவடிக்கைகள் இத்துறையின் அபிவிருத்திக்கு முக்கியமாகும். மகாவலித்திட்டத்தைவிட அண்மையில் ஆரம்பிக் கப்பட்ட பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களாகக் கிரிந்தி ஓய, இங்கினிமிட்டிய, முத்து கண்டி, ஜின் கங்கை, நில்வளா திட்டங்களைக் கூறலாம். இதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச விவசாய அபிவிருத்தி நம்பிக்கை நிதி, யப்பானிய அரசாங்கம் ஆகியவற்றிடமிருந்து உதவிகள் கிடைத்துள்ளன. பெரியபிரித்தானியாவினதும் உலக வங்கியினதும் உதவிகளைக் கொண்டு வடமத்திய மாகாணத்தில் ஐந்து குளங்களைப் புனரமைக்கும் திட்டம் ஒன்று 1976 இல் ஆரம்பிக்கப்பட்டது. நீரைக் கட்டுப்படுத்தி உணவுப் பயிர்ச் செய்கையைத் தீவிரப் படுத்துவதும் உற்பத்தியைப் பெருக்குவதுமே அதன் குறிக்கோள்களாகும்.

## ஒன்றிணைந்த மாவட்ட அபிவிருத்தித் திட்டம்

தேசிய மட்டத்திலான பிரதான திட்டங்கள் மூலம் நேரடியாக நன்மை பெறாத பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்கென 12 மாவட்டங்களுக்கான ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டமொன்று செயற்படுத்தப்படும் வருகின்றது. 1979 இல் குருணாகலையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த அபிவிருத்தி திட்டம் இப்போது குருணாகலை, மாத்தறை, அம்பாந்தோட்டை நுவரெலியா, மாத்தளை, புத்தளம், பதுளை, வவுனியா, மன்னார், இரத்தினபுரி, மொனறாகலை, கேகாலை ஆகிய மாவட்டங்களிலே செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மாவட்டத்திலும் பொருத்தமான திட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. எடுத்துக்காட்டாகக் குருணாகலை மாவட்டத்திலே தென்னங் காணிகளைப் புனரமைத்தல், கிராமப்புறங்களுக்கு நீர் வழங்கல் (குழாய்க் கிணறுகள்) ஆகிய திட்டங்களும், நுவரெலியா மாவட்டத்திலே மிருக வளர்ப்பு, மண்காப்பு, சுகாதார வசதிகள், சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி ஆகியவற்றுக்குரிய திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மாவட்ட மட்டத்திலே பொருளாதார, சமூக அபிவிருத்திகளைத் துரிதப்படுத்தும் பொருட்டு அரசாங்கம் கைக்கொள்ளும் கொள்கையின் பெறுபேறுகளென இந்தத் திட்டங்களைக் கூறலாம். இப்படியாக வகுக்கப்பட்டுள்ள திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்குப் பல பிற நாடுகளும் சர்வதேச தாபனங்களும் உதவியளிக்க முன்வந்துள்ளன. உலகவங்கி. உணவு விவசாயத் தாபனத்துடன் இணைந்த சர்வதேச விவசாய நம்பிக்கை நிதித் தாபனம், நெதலாந்து அரசாங்கம், நோறாட், (**Norwegian Aid for Development** -- நோர்வே அபிவிருத்தி உதவி) சீடா (**Swedish International Development Agency** — சுவீடன் சர்வதேச அபிவிருத்தி முகவர் நிலையம்) ஆகியன இவற்றுட் சிலவாகும், திட்ட, அமுலாக்கல் அமைச்சின் நெறிப்படுத்துதலின் படியே ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டம் செயற்படுத்தப் பட்டு வருகின்றது.

## கடற்றொழில்

கடற்றொழில் துறையினை முழுமையாக நோக்கும்போது, அதன் உற்பத்தி 1983 வரை சாதாரணமாக உயர்ந்த மட்டத்

திலிருந்த தென்பது தெளிவாகும். ஆயின், 1983 இல் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே ஏற்பட்ட குழப்ப நிலை காரணமாக உற்பத்தி 1984/85 ஆண்டுகளிற் குறைந்தது. எமது மீன் உற்பத்தியிற் பல காரணிகள் செல்வாக்குடையனவாக இருந்தன. மீன்பிடி முறைகள் நவீனமயமாக்கப்பட்டமை ஒன்று. மேலும் நெடுங்காலமாகக் கடற்றொழில் தனியார் துறையினரின் கட்டுப்பாட்டில் இருந்ததாயினும், இக்கைத்தொழிலுக்குத் தேவையான வலை, போன்ற பல பொருள்கள் கடற்றொழிற் கூட்டுத்தாபனத்தினாலேயே இறக்குமதி செய்யப்பட்டு வந்தன. இந்த ஏகபோக உரிமை கடற்றொழிற் கொள்கைக்கு அனுகூலமானதல்ல என்பதனால் 1977 இன் பின்னர். கடற்றொழிற் பொருள்களை இறக்குமதி செய்யும் உரிமை தனியார் துறைக்கு வழங்கப்பட்டது. அதனால் தேவையான பொருள்களைச் சுலபமாகப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு மீனவர்களுக்குக் கிடைத்தது. மற்றுமொரு குறிப்பிடத்தக்க முன்னேற்றமாக, ஆழ் கடலிலே மீன் பிடிப்பதற்குத் துரோலர் கப்பல்களும் பைபர் கண்ணாடி வள்ளங்களும் அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டன.

இதனைவிட, உற்பத்தியைப் பெருக்குதற் பொருட்டு, கடல் வளம் நிறையக் காணப்பட்ட பகுதிகளிலே கடற்றொழில் துறைமுகத் தொகுதிகள் அமைக்கப்பட்டன. இந்தத் துறைமுகங்களுக்கு அண்மையில், மீனை நீண்ட காலம் பழுதுபடாது வைத்திருப்பதற்கான ஐஸ் கூட்டங்களும் கப்பல்களைப் பழுது பார்ப்பதற்கான நிலையங்களும் அமைக்கப்பட்டன. அத்துடன் சீடா தாபனத்தின் உதவியைக் கொண்டு நீர்கொழும்பிற் கடற் தொழிற் பயிற்சி நிலையம் ஒன்றும் தாபிக்கப்பட்டுள்ளது. இவற்றுடன், மீனவர்கள் தமக்கு வேண்டிய கலங்கள், வலைகள் முதலியவற்றைக் கொள்வனவு செய்வதற்கு வேண்டிய பணத்தைப் பெற்றுக் கொள்ள உதவும் பொருட்டுக் கடன் வசதிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு கடன் வழங்குவதற்காக மொறட்டுவை, அம்பலாங்கொடை, திக்வல்லை, வெலிகம போன்ற முக்கிய கடற்றொழிற் பகுதிகளில், மக்கள் வங்கியினால், கடற்றொழில் வங்கிகள் திறக்கப்பட்டுள்ளமையும் முக்கியமான ஒரு திருப்பமாகும். நன்னீர் கடற்றொழிலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தினையும் இலங்கையில் மீன் உற்பத்தி உயர்ந்தமைக்குரிய ஒரு காரணமாகக் கூறலாம். 1976 இல் 12,300 தொன்னாக இருந்த நன்னீர் மீன் உற்பத்தி 1983 இல் 36,000 தொன்னாக உயர்ந்தது. இவ்வாறு

நன்னீர் மீன் உற்பத்தி உயர்ந்தமை அண்மைக்காலத்திலேற்பட்ட ஒரு புதிய திருப்பமாகும். நன்னீர் மீன் உற்பத்தியை இதனை விட உயர்த்தக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்ற போதிலும், நுகர்வோருடைய விருப்பு, கலாசாரக் காரணிகள் போன்றன குறுக்கீடாக இருக்கின்றன. இதனால் இந்நிலையைப் போக்குவதற்கும் இத்துறையினைத் துரிதமாக முன்னேற்றுவதற்குமெனக் கடற்றொழில் அமைச்சு 1979 இல் நன்னீர்க் கடற்றொழில் விவகாரங்களைக் கையாளுவதற்கெனப் புறம்பான ஒரு பகுதியை அமைத்துள்ளது. அவ்வாறே வெளிநாட்டு உதவியைக் கொண்டு நன்னீர் மீன் வளர்ப்பு நிலையங்களும் ஆராய்ச்சி நிலையங்களும் அமைக்கப்பட்டதுடன் விரிவாக்கச் சேவைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நன்னீர் கடற்றொழிலில் பெரும்பாலும் சிறு முயற்சியாளரே ஈடுபட்டுள்ளனர் என்பதனால் இத்துறைக்கு அரசாங்கம் பல உதவிகளை வழங்கி வருகின்றது. உதாரணமாக, இயந்திரம் பூட்டப்படாத வள்ளங்களையும் மீன்பிடி உபகரணங்களையும் கொள்வனவு செய்யும் செலவில் 90% உதவிப் பணமாக அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்றது.

இலங்கையில் மீன்வளம் நிறையக் காணப்படுகின்றதெனினும், பொருளாதாரத்துக்குப் பக்கபலமான முறையிலே அதனை அபிவிருத்தி செய்வதில் அவ்வளவு கவனஞ் செலுத்தப்படவில்லை. அவ்வாறே எமது உற்பத்தி,தேவையைப் பூர்த்தி செய்வதற்குப் போதாமையினால் மீனை இறக்குமதி செய்ய வேண்டியிருக்கின்றது. எனவே, சுலபமாகப் பெற்றுக் கொள்ளக்கூடியதாயுள்ள கடல் வளத்தினைப் பொருளாதார வளர்ச்சியின் பொருட்டுப் பயன்படுத்தும் நோக்குடன், கடற்றொழின் எல்லாப் பிரிவுகளையும் அபிவிருத்தி செய்வதற்கான ஐந்தாண்டுத் திட்டமொன்று 1979 இல் வகுக்கப்பட்டது.

அண்மையிற் கடற்றொழில் துறையில் ஏற்பட்ட மற்றுமொரு போக்கு யாதெனில், பெரும்பாலும் உள்நாட்டுச் சந்தைகளை மாத்திரம் நம்பியிருந்த கடற்றொழில், பிறநாட்டு நாணயத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரு வழியாக இப்போது அபிவிருத்தியடைந்துள்ளமையாகும். (9 ஆம் ஆண்டு சமூகக் கல்வி நூலிலே கடற்றொழில் பற்றிய பகுதியை வாசிக்க).

## கைத்தொழில்கள்

இலங்கை சுதந்திரம் பெற்றபோது அது கைத்தொழில் துறையில் அவ்வளவு முன்னேற்றம் பெற்றிருக்கவில்லை. தேசியக் கைத்தொழில்களை முன்னேற்றுவது பற்றிக் குடியேற்றவாதிகள் பாராமுகமாக இருந்தமையே இதற்குக் காரணம். அவ்வாறே பாவனையாளரும் தரமுயர்ந்த பிறநாட்டுப் பொருள்களையே பெரிதும் விரும்பினார்கள். இப்படியான சூழ்நிலையில், கைத்தொழில் பொருள்களை உற்பத்தி செய்வதில் தேசிய முயற்சியாளர் அதிக அக்கறை கொள்ளவில்லை. அவர்கள் அக்கறை கொண்டிருந்தாலும் பிறநாட்டுப் பொருட்களுக்கு போட்டியான பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய வல்லமை அவர்களுக்கு இருக்கவில்லை. அத்துடன் கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்குத் தேவையான வங்கிக் கடன்களைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும் இந்நாட்டு முயற்சியாளருக்குக் குறைவாகவே இருந்தது. இவற்றினாலே தனியார் துறையினர் தேசியக் கைத்தொழில்களை மேற்கொள்ளுவதற்குப் பெரிதும் தயங்கினார்கள். ஆயினும், சுதந்திரம் கிடைத்த பின்னர் அரசியற் சுதந்திரத்தினை அர்த்தமுடையதாகச் செய்தற் பொருட்டு விவசாயத் துறையினைப் போலவே, சுதேசப் பாவனைக்கு வேண்டிய கைத்தொழிற் பொருள்களின் உற்பத்தியையும் முன்னேற்றுவதற்கு ஒவ்வொரு அரசாங்கமும் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றது. ஆயின், அதனை நிறைவேற்றும் பொறுப்பு முற்று முழுதாக அரசாங்கத்துறையையே சார்ந்திருந்தது. எனவே, அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் மூலம் இந்நாட்டிற் பல கைத்தொழில்களை ஆரம்பிக்கும் போக்கு உருவானது. இவற்றுள் சில கைத்தொழில்கள் பிறநாட்டு உதவிகளைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டன. இவற்றுள் பெரும்பாலானவை பாரிய கைத்தொழில்களாகும். எடுத்துக்காட்டாக, ஒறுவலையிலுள்ள உருக்குக் கூட்டுத்தாபனத்தினையும், களனியிலுள்ள ரயர் கூட்டுத்தாபனத்தினையும் கூறலாம். அவ்வாறே இக்கூட்டுத்தாபனங்கள் மூலம் கைத்தொழிற் பொருள்களை உற்பத்தி செய்கையில் ஒருபுறம்,

முடிந்தவரை, தேசிய வளங்களைப் பயன்படுத்துவதில் அதிக கவனஞ் செலுத்தப்பட்டது. மறுபுறம். பிறநாட்டுச் செலாவணியைப் பாதுகாக்கும் குறிக்கோளுடன், இறக்குமதிப் பொருள்களுக்கு மாற்றீடான பொருள்களை உற்பத்தி செய்யும் கைத்தொழிற் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டது. ஆயினும் இந்தக் கைத்தொழில் கொள்கையின் குறிக்கோளை எம்மால் அடையமுடியவில்லை. தேசியச் சந்தைகளுக்குப் போதுமான பொருள்களை உற்பத்தி செய்துகொள்ள முடியாமை, தரக் குறைவு, வேலையில்லாப் பிரச்சினைக்குத் திருப்திகரமான தீர்வு கிடைக்காமை, சில கூட்டுத்தாபனங்கள் திறைசேரிக்குப் பாரமாகவுள்ளமை போன்றவையே இதற்குரிய காரணங்காளகக் கூறலாம்.

இந்தச் சூழ்நிலையில் 1970 களின் இறுதியிலிருந்து இலங்கை பின்பற்றிய கைத்தொழிற் கொள்கையில் மாற்றங்கள் ஏற்பட்டன. அரசாங்க கூட்டுத்தாபனங்களை வினைத்திற னுடன் வருவாய் தரும் வகையில் இயங்க வைப்பதன் பொருட்டு, அரசாங்கக் கைத்தொழில் தாபனம் தாபிக்கப்பட்ட மையும் திறைசேரியின் உதவியின்றி ஒவ்வொரு கூட்டுத்தாபன மும் இயங்க வேண்டுமென்ற நியதி விதிக்கப்பட்டமையும் கூட்டுத்தாபனங்கள் சம்பந்தமாக அரசாங்கம் மேற்கொண்ட முக்கியமான தீர்மானங்களாகும். அவ்வாறே, அவற்றுக்கு அதிக முக்கியத்துவம் காட்டக் கூடாதெனவும் சம அடிப்படை யிலான தனியார்துறை கைத்தொழில்களுடன் போட்டியிடும் வல்லமை அவற்றுக்கு இருக்க வேண்டும் எனவும் அரசாங்கம் மேலும் தீர்மானித்தது. அத்துடன் இறக்குமதிப் பொருள்களுக்கு இவற்றின் உற்பத்திகள் ஓரளவு போட்டியாக இருக்க வேண்டுமென்ற கருத்தும் இத்தீர்மானத்தில் அடங்கியது. அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் இப்படியாகப் புனரமைக்கப்பட்ட துடன், கைத்தொழிற் பொருள்களின் உற்பத்தித்துறையில் தனியார்துறையினரை மேலும் மேலும் பங்குகொள்ளச் செய்யும் முயற்சி அண்மையில் ஏற்பட்டுள்ள ஒரு புதிய போக்காகும். இதில் சுதேச முயற்சியாளரைப் போலவே பிறநாட்டு

முயற்சியாளரையும் பங்குகொள்ளச் செய்தற்பொருட்டுச் சம்பந்தப்பட்ட சட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. இப்படியாக, உள்நாட்டு வெளிநாட்டுத் தனியார் முதலீட்டாளரை உற்பத்தியிற் பங்கு கொள்ளச் செய்வதன் முக்கிய நோக்கம் வேலையில்லாப் பிரச்சினைக்கு விரைவான ஒரு தீர்வைக் காண்பதேயாகும். அவ்வாறே மோசமான நிலையை அடைந்துள்ள பிற நாட்டுச் செலாவணிப் பிரச்சினைக்குரிய ஒரு தீர்வாக முன்னரைப் போன்று உள்நாட்டுச் சந்தையை மாத்திரம் கருத்திற்கொள்ளாது வெளிநாட்டுச் சந்தைகளையும் குறித்தே கைத்தொழிற் பொருள்கள் உற்பத்தி செய்யப்படலாயின. இதன்படி உண்டான ஏற்றுமதி நோக்குடைய கைத்தொழிற் கொள்கை அண்மையிலேற்பட்ட முக்கியமான ஒரு திருப்பம் எனலாம். இக்கொள்கையை மேலும் வெற்றியளிக்கச் செய்தற்பொருட்டும், வேலை வாய்ப்புகளை உண்டாக்குதற் பொருட்டும் முதலீட்டு அபிவிருத்தி வலயங்கள் எனப்படுவன கட்டுநாயக்க, பியகம ஆகிய இடங்களிலே அமைக்கப்பட்டுள்ளன. இந்த வலயங்கள் மூலம் வெளிநாட்டு மூலதனம், வெளிநாட்டுத் தொழினுணுக்கம், முகாமைத்துவ முறைகள் ஆகியன மூலம் பயன் பெற்றுக் கொள்ளுவதும் புதிய கைத்தொழிற் கொள்கையின் குறிக்கோளாகும். 1984-85 ஆம் ஆண்டுகளில் இந்த வலயங்களில் 32 529 பேர் நேரடியான தொழில் வாய்ப்புப் பெற்றனர், இதனைவிட மறைமுகமான முறையில் அநேகர் தொழில் வாய்ப்புப் பெற்றனர். இந்த வலயங்களில் 211 திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் 54 உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. இவற்றின் மூலம் 1985 இல் ஏறக்குறைய 3,802 மில்லியன் ரூபா பிறநாட்டுச் செலாவணி பெற்றுக்கொள்ளப்பட்டது (1985 மத்திய வங்கியின் அறிக்கையின்படி).

முன்னர் இருந்துவந்த 5 வருட வரிச் சலுகை வழங்கும் கொள்கைக்கு மேலாக, பாரம்பரியமற்ற ஏற்றுமதிக் கைத்தொழிற் பொருள்களுக்கு 10 வருட அரை வரிச் சலுகை வழங்கும் முறை கைத்தொழில் துறையிலே காணப்படுகின்ற மற்றுமொரு சிறப்பான அம்சமாகும்.

## குடிசைக் கைத்தொழில்

மேலே எடுத்தாளப்பட்ட பாரிய, நடுத்தர, சிறிய

கைத்தொழில்களை விட இலங்கையின் கிராமப்புறக் கைத்தொழில் துறையின் முன்னேற்றத்திலும் அண்மைக் காலத்திலிருந்து விசேட கவனஞ் செலுத்தப்பட்டு வருகின்றது.

இத்துறையிலே, தொழினுட்ப அறிவு ஒவ்வொரு கைத் தொழிலுக்கும் மிகவும் முக்கியமாகும். எனவே அதனை வளர்த்தற் பொருட்டு அம்பக்கையில் மரவேலையிலும், தும்பரையில் பாய்த்தொழிலும், இரத்தினபுரி மாவட்டத்தில் இரத்தினக்கல் வேலையிலும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இன்னும், பாரம்பரிய கலைத்திறனை மீண்டும் வளர்த்தற் பொருட்டுப் பல கைப்பணிக் கிராமங்கள் அமைக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, நத்தரன்பொத்தையில் 40 கைப்பணிச் சிற்பக்குடும்பங்கள் குடியிருத்தப்பட்டமையைக் கூறலாம். மேலும், இச்சிற்பர்களுக்குத் தேவையான மூலப் பொருள்களை விநியோகஞ் செய்வதில் சிறு கைத்தொழில் திணைக்களம் உதவி வழங்குகின்றது. இன்னும், ஏற்றுமதிச் சந்தையின் தேவைகளுக்கு ஏற்பப் பாரம்பரிய பொருள்களினதும் புதிய ஏற்றுமதிப் பொருள்களினதும் ஏற்றுமதியை விரிவாக்கும் நடைமுறைகளையும் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

## தொழினுணுக்கம்

பொதுவாக நோக்குமிடத்து எங்கள் நாட்டுப் பாரிய கைத்தொழில்களிற் பிறநாட்டுத் தொழினுணுக்க முறைகளே பயன்படுத்தப்படுகின்றன வெனக் கூறலாம். (10 ஆம் ஆண்டு நூலின் 5 ஆம் 6 ஆம் அத்தியாயங்களை பார்க்க). பாரிய கைத்தொழிற்களில் பிறநாட்டுத் தொழினுணுக்க முறைகள் அப்படியே பயன்படுத்தப்படுகின்றமையினால் தேவையான இயந்திர சாதனங்கள் எல்லாவற்றையும் பிறநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டி இருக்கின்றது. எனவே இதற்குப் பிறநாட்டுச் செலாவணி செலவாகின்றது. அது மாத்திரமல்லாது, இதிற் சக்தி அதிகமாகச் செலவாவதினாலும், மனித உழைப்புக் குறைவாகவே பயன்படுத்தப்படுகின்றது என்பதனாலும் வேலையில்லாப் பிரச்சினைக்கு இது தீர்வாக மாட்டாது. எனவே, இலங்கையின் அபிவிருத்தி முயற்சியில் எதிர்நோக்க வேண்டிய மூலதனப் பற்றாக்குறை, பிறநாட்டுச்

செலாவணிப் பற்றாக்குறை. வேலையில்லாமை ஆகியவற்றுக் குரிய ஒருயொரு வழி, எமது நாட்டுக்குப் பொருத்தமான தொழினுணுக்க முறைகளை விவசாயத் தொழிலிலும், கைத்தொழில்களிலும் பயன்படுத்துவதாகும். பொருத்தமான தொழினுணுக்கம் பற்றி அதிக கவனஞ் செலுத்தப்படுவது தற்போது எமது நாட்டின் அபிவிருத்தித் துறையிலே தெளிவாகக் காணப்படும் ஒரு புதிய போக்காகும். பிறநாட்டுத் தொழினுணுக் அறிவைப் பயன்படுத்தி, எமது நாட்டு வேலைகளுக்குப் பொருத்தமான முறையில் திருத்தியமைக்கப்படுள்ள நடுகை இயந்திரம், அறுவடை இயந்திரம், நெல் தூற்றும் இயந்திரம் ஆகியவற்றை உதாரணங்களாகக் கூறலாம்.

## ஏற்றியிறக்குதலும் போக்குவரத்தும்

ஒரு நாட்டின் அபிவிருத்தியும் போக்குவரத்துத் துறையின் முன்னேற்றமும் ஒன்றுடன் ஒன்று இணைந்துள்ளன என்பது அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளின் அனுபவத்திலிருந்து நமக்குப் புலனாகும். போக்குவரத்து வசதிகளின் அபிவிருத் திக்கும் வினைத்திறனுக்கும் ஏற்ப உற்பத்தித் துறையில் துரித அபிவிருத்தியை ஏற்படுத்திக் கொள்ளலாமென்பதே இதன் காரணம்.

பொருள்களை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய சில காரணிகள் போக்குவரத்துச் சாதனங்கள் மூலமே ஓரிடத்துக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. எடுத்துக் காட்டாக உற்பத்திக்கு வேண்டிய மூலப் பொருள்களைத் தொழிற்சாலைகளிற் சேர்ப்பதற்கும் தொழிலாளருடைய போக்குவரத்துக்கும், உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களைச் சந்தைக்குக் கொண்டு செல்வதற்கும் போக்கு வரத்து வசதிகள் அத்தியாவசியமாகும். ஆயினும் போக்கு வரத்துச் செலவு ஒரு பொருளின் உற்பத்திச் செலவிற் பெரும் தாக்கத்தை உண்டாக்குகின்ற தென்பது குறிப்பிட வேண்டிய ஒன்றாகும். எனவே, போக்கு வரத்துத் செலவைக் குறைப்பதும் வினைத்திறனைப் பெருக்குவதுமே போக்குவரத்துத்துறையை அபிவிருத்தி செய்வதன் முக்கியமான நோக்கமாகும். இந்தக் குறிக்கோள் காரணமாக 19 ஆம் நூற்றாண்டு தொடக்கம் தரைப் போக்குவரத்திற் போலவே கடல் மார்க்கப் போக்கு வரத்திலும் பெரும் தொழினுணுக்கப் புரட்சியொன்று ஏற்பட்டு வருகின்றது.

இலங்கை, இந்தியா போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் தத்தமது, பொருளாதார முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டு அண்மைக் காலத்திலிருந்து போக்குவரத்துத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு முயன்று வருகின்றன.

## அ. புகையிரதப்பாதை

இலங்கை சுதந்திரம் பெற்றபோது தரைமார்க்கப் போக்குவரத்து முறைகளுள் புகையிரதப் போக்குவரத்துத் துறை அதிக முக்கியத்துரவம் பெற்றிருந்தது. பொருள்களைக் கொண்டு செல்வதற்கும் மக்களின் போக்குவரத்துக்கும் புகையிரதத் திணைக்களம் முக்கிய சேவை ஆற்றி வந்தது. குடியேற்றவாத காலத்துத் தேவைகள் குறித்தே இந்நாட்டில் புகையிரதச் சேவை ஆரம்பிக்கப்பட்டது. ஆயினும், சுதந்திரம் கிடைத்த பின்னர், உற்பத்தி வேலைகள், வர்த்தகப் பெருந் தோட்டத்துறையுடன் மாத்திரம் நின்றுவிடாது பிற துறைகளிலும் பரவத் தொடங்கியமையால், புகையிரதப் போக்குவரத்தைவிடப் பெருந்தெருப் போக்குவரத்து முக்கியத்துவம் பெறலாயிற்று. சுதந்திரத்துக்குப் பின்னர் புதிய புகையிரதப் பாதைகள் போடப்படாமைக்கு இதுவே காரணமாகும். அதுமட்டு மல்லாமல், பெருந்தெருப் போக்குவர்த்து முறைகளுடன் வெற்றிகரமாகப் போட்டியிட முடியாமற் போனதினாலும் புகையிரதப் போக்குவரத்துமுறை இலாபமற்ற ஒன்றாகக் காணப்பட்டது. குடியேற்றவாத காலத்திற்போன்று தற்போதும் இலங்கையின் புகையிரத சேவை அரசாங்கத்தினாற் கொண்டு நடத்தபடுவதனால், இதனால் எற்படும் நட்டத்தைப் பெரும்பாலும் திறைசேரியே ஏற்றுக்கொள்ளுகின்றது. ஆயினும் சுதந்திரத்தின் பின்னர் புகையிரதப் போக்குவரத்து முறையின் சிற்சில பிரிவுகளில் முன்னேற்றமேற்பட்டுள்ளமையைக் காணலாம். முதலாவதாக, தொழினுணுக்கப் பிரிவில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் குறிப்பிடலாம். புகையிரத இயந்திரங்களை இயக்குவதற்கு நிலக்கரிக்குப் பதிலாகத் திரவ எரிபொருள்கள் பயன்படுத்தப்படுகின்றமையும், நிறச் சமிக்ஞைகள் பயன்படுத்தப்படுகின்றமையும் இத்துறையில் ஏற்பட்டுள்ள முக்கியமான மாற்றங்களாகும். இவ்வாறே சேவை வசதிகளை அபிவிருத்தி செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் முதலாவதாக, புகையிரத பேருந்து ஒன்றிணைந்த சேவைகளே ஆரம்பித்துப் பெருந்தெருச் சேவைக்கும் புகையிரதச் சேவைக்கும் இடையிலே தொடர்பினை

ஏற்படுத்தியதைக் குறிப்பிடலாம். உல்லாசப் பிரயாணத்துக்கு உதவியாக சொகுசு ஆசன வசதிகளுடனும் பார்வைப்பீட வசதிகளுடனும் நகர்களுக்கிடையான துரித புகையிரதச் சேவைகள் ஆரம்பிக்க பட்டமை அண்மையில் உண்டான குறிப்பிடத்தக்க ஒரு முன்னேற்றமாகும். போக்குவரத்துத் துறையினை முழுமையாக நோக்குமிடத்து, அண்மையில் ஏற்பட்ட முக்கியமான மாற்றம் சிப்பங்கட்டும் முறையில் ஏற்பட்ட முன்னேற்றமாகும். இது ஏற்றியிறக்குதல் வேலைகளைத் திறமையாக மேற்கொள்வதற்கு வகுக்கப்பட்ட ஒரு முறையாகும். தரையிலிருந்து துறைமுகத்துக்கும் துறைமுகத்திலிருந்து தரைக்கும் கென்ரென்னர் பெட்டிகளை எடுத்துச் செல்லத்தக்க முறையிற் போக்குவரத்து வசதிகளை அபிவிருத்தி செய்வதிலேயே இந்த முறையின் வெற்றி தங்கியுள்ளது. சிப்பங்கட்டும் முறை அபிவிருத்திக்குக் கைகொடுக்கும் முகமாக அண்மையில் எமது புகையிரதச் சேவை மூலம் நுவரெலியா, கண்டி ஆகிய இடங்களிலிருந்தும் பெரும்பாகக் கொழும்பு பொருளாதார ஆணைக் குழுவின் நிலையத்திலிருந்தும் கொழும்புத் துறைமுகத்துக்குக் கென்ரெய்னர் பெட்டிகளை எடுத்துச் செல்லும் முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## ஆ. பெருந்தெருக்கள்

குடியேற்றவாதிகளின் தேவைகளுக்கு ஏற்பப் பிரதான நகரங்களை இணைக்கும் பெருந்தெருக்கள் சுதந்திரம் கிடைத்தபோது இங்கே காணப்பட்டன. பின்னர், நாட்டின் பல்வேறு அபிவிருத்தித் தேவைகளுக்கேற்ப இந்த வீதிகள் அகலமாக்கப்பட்டதுடன் புதிய வீதிகளும் அமைக்கப்பட்டன. மகாவலி போன்ற அபிவிருத்தித் திட்டங்கள், கிராம எழுச்சித் திட்டங்கள் முதலியன காரணமாக இதுவரை இருந்து வந்த கிராமப் புறத் தனித்தன்மை அற்றுப்போவதற்குத் தொடங்கியது. சுதந்திரம் கிடைத்தபோது பிரயாணிகளின் போக்குவரத்தின் பொருட்டு, பேருந்துச் சேவைகள் தனியார் கம்பனிகளினால் தெருக்கள் அதிகார சபையின் கீழ் இருந்த பெருந் தெருக்களில் நடத்தப்பட்டன. இதில் அரசாங்கம் பங்குபற்றிக் கொள்ளவில்லை. ஆயின், தனியார் பேருந்துச் சேவையிற் காணப்பட்ட குறைபாடுகளைப் போக்குதற் பொருட்டு 1958 இல் பேருந்துச் சேவை தேசியமயமாக்கப்பட்டு அதனைக் கொண்டு நடத்தும் பொருட்டு இலங்கைப் போக்குவரத்துச் சபை தாபிக்கப்பட்டது. இப்படியாகவே பெருந்தெருக்களில்

பிரயாண வசதிகளை அளிக்கும் பணி அரசாங்கத்தைச் சார்ந்தது. இதுவும் ஒரு வழியிலே புதியவொரு திருப்ப மெனலாம்.

இப்படியாக அமைக்கப்பட்ட போக்குவரத்துச் சபையைப் பரவலாக்கினால் அதன் வினைத்திறன் உயரக் கூடுமெனக் கருதி 1978 இற் போக்குவரத்துச் சபையின் கடமைகள் பரவலாக்கப்பட்டபோதிலும் வேலை வாய்ப்புகள் அதிகரித்தமை, பாடசாலைமாணவர் தொகை அதிகரித்தமை, நாட்டிற் பல்வேறு அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டமை போன்ற காரணங்களினால் பிரயாணிகளின் தொகை அதிகரித்துப் போக்குவரத்துச் சபையினால் நிலைமையைச் சமாளிக்க முடியாதநிலைமை உருவாகவே 1979 இல் பெருந்தெருக்களிலே பிரயாணச் சேவைகளை நடத்துவதற்குத் தனியார் பிரிவினருக்கும் அனுமதியளிக்கப்பட்டது. பெருந்தெருக்களிலே பிரயாணச் சேவைகளை நடத்துவதில் முன்னரிலும் பார்க்க முக்கியமான ஓர் இடத்தைத் தனியார்துறை பெற்றுள்ளது. இதுவும் தெட்டத்தெளிவான ஒரு புதிய போக்காகும். அத்துடன், இது வேலையில்லாப் பிரச்சினைக்கும் போதியளவுக்கு ஒரு தீர்வாக அமைந்துள்ளது. அன்றியும் திறந்த பொருளாதாரத்தின் செல்வாக்குக் காரணமாக மோட்டார் துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் வண்டிகள் முதலியனவும் இப்போது போக்குவரத் துக்குப் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன. இதுவும் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட ஒரு புதிய திருப்பமாகும்.

பெருந்தெருக்களிலே பொருள்களின் பெயர்ச்சியைப் பொறுத்தமட்டில் 90 வீதத்திற்கும் கூடுதலான பகுதி தனியார் துறையினராற் கொண்டு நடத்தப்படுகின்றது என்பதனை 1985 ஆம் ஆண்டு மத்திய வங்கிப் பொருளாதாரப் புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இத்துறையிலே தனியாரின் பங்கு புதியதொன்றல்ல எனினும் எடுத்துச் சொல்லப்படும் பொருள்களின் அளவு முன்னர் ஒருபோதுமில்லாதளவு அதிகரித்துள்ளது என்று கூறுதல் வேண்டும். மேலும், நாட்டிற் காணப்படுகின்ற பாரிய அபிவிருத்தி வேலைகள் காரணமாகப் பெருந்தொகையான பொருள்களை விரைவாகவும் திறமையாகவும் அங்குமிங்கும் கொண்டு செல்லவேண்டி இருப்பதனால் அதற்குக் கென்ரெய்னர்களைப் பயன்படுத்தும் முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கென்ரெய்னர் பெட்டிகளை ஏற்றிச் செல்லும் இழுவை லொறி வண்டிகள், டிறாக்ரர்கள், வான்கள் முதலிய புதிய போக்கு வரத்துச் சாதனங்கள் எங்கும் காணப்படுவதனால் பெருந்தெருக்களை அகலமாக்குவதிலும் பேணுவதிலும் அதிக கவனஞ் செலுத்தப்படுகின்றது. பெருந்தெருக்களை அகலமாக்குதல், பேணுதல், புதிய வீதிகளை அமைத்தல் போன்ற வேலைகள் அண்மைக் காலத்தில் அதிகரித்துள்ள மையினால் வேலைகளைச் சிறந்த முறையிற் கொண்டு நடத்தும் பொருட்டுப் பெருந்தெருக்கள் திணைக்களத்துக்குப் பதிலாகப் பெருந்தெருக்கள் அபிவிருத்தி அதிகாரசபை என்பது அமைக்கப்பட்டுள்ளது. இப்படியாகப் போக்குவரத்திலே போதிய முன்னேற்றம் காணப்படுகின்றபோதிலும், போக்குவரத்து வேலைகளைச் சரியான முறையிலே இட்டுச் செல்வதற்குரிய இடைக்கால அல்லது நீண்டகாலத் திட்டம் எதுவும் இதுவரை இருக்கவில்லை என்பது திட்ட அமுலாக்கல் அமைச்சின் கருத்தாகும். எனவே அந்தக் குறைபாட்டைப் போக்கிப் போக்குவரத்தைப் புனரமைத்தற் பொருட்டு 1985 இல் புதிய ஐந்தாண்டுத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## இ. துறைமுகம்

ஆசிய நாடுகளின் துறைமுகங்கள் பற்றி ஆராயும்போது இலங்கை மிகவும் முக்கியமான ஓர் இடத்தைப் பெறுகின்றது. இந்தியா, பாக்கிஸ்தான் போன்ற நாடுகளை எடுத்துக் கொண்டால் அந்நாட்டுகளின் பிறநாட்டு வியாபாரம் பல துறைமுகங்கள் வாயிலாக நடை பெறுகின்றபோது இலங்கையில் நிலைமை வேறுபட்டதாக இருப்பதே இதற்குக் காரணம். இலங்கையிற் கொழும்பு, காலி, திருகோணமலை ஆகிய மூன்று முக்கியமான துறைமுகங்கள் இருக்கின்றபோதிலும் பிறநாட்டு வர்த்தகத்தைப் பொறுத்தமட்டிற் கொழும்புத் துறைமுகமே மிகவும் முக்கியமான இடத்தை வகிக்கின்றது. 1980 களில் இந்நாட்டு வர்த்தகத்தில் 90 வீதத்துக்கும் அதிகமான பகுதி கொழும்புத். துறைமுகத்துக்கூடாகவே நடைபெற்றது. இது ஆங்கிலேயே ஆட்சியாளர் கடைப்பிடித்த கொள்கையின் பெறுபேறேயாகும். ஒப்பிட்டு நோக்கும்போது பிறநாட்டு வர்த்தகத்திலே அதிகம் ஈடுபடாத இலங்கை போன்ற ஒரு நாட்டுக்குப் பல துறைமுகங்கள் தேவையில்லை யென்ற கருத்தைக் கொண்டிருந்த ஆங்கிலேய ஆட்சியாளர் துறைமுக அபிவிருத்திக்குரிய முதலீடு முழுவதையும் கொழும்புத்

துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்குப் பயன்படுத்தினர்கள். இத்துறைமுகத்துக்கு வந்துபோகும் கப்பல்களின் தொன் பரிமாணத்தை நோக்கும்போது இது உலகத்து முக்கியமான துறைமுகங்களின் வரிசையைச் சேர்ந்ததென்பது புலனாகும். 20 ஆம் நூற்றாண்டின் முதற் பாதியிலே கொழும்புத் துறை முகம் ஆங்கில இராச்சியத்திலே மூன்றாவது துறைமுகமாவும் உலகிலே ஏழாவது துறைமுகமாகவும் காணப்பட்டது. இதற்குக் காரணம் இந்து சமுத்திரத்திலே இலங்கை ஒரு கேந்திர நிலையத்தில் அமைந்துள்ளமையினால் அதன் துறைமுகம் சர்வதேசக் கப்பல்களுக்கு ஒரு சேவை நிலையமாகவும் மீளக் கப்பலேற்றுவதற்குரிய ஒரு நிலையமாகவும் விளங்குவ தேயாகும். இப்படியாகக் கொழும்புத் துறைமுகம் முக்கியத்துவம் பெறுவதற்கு அமைவைப் பொலவே துறைமுகத்தின் வினைத் திறனும் காரணமாகின்றது. இது சம்பந்தமான வரலாறு முக்கியமானது. அதுபற்றி நாம் சற்று ஆராய்வோம். கொழும்புத் துறைமுகம் கிழக்கு நாடுகளிலே முதல் வரிசையைச் சேர்ந்த ஒரு கப்பல் தளமெனப் பெற்றிருந்த புகழ் 1950 களிலும் 1960 களிலும் மங்கத் தொடங்கியது. இலங்கையின் சாதகமற்ற வர்த்தக மீதி காரணமாக 1960 களின் ஆரம்பத்திலிருந்து இறக்குமதிக் கட்டுப்பாட்டுக் கொள்கையைப் பின்பற்ற வேண்டி ஏற்பட்டதனால் துறைமுகத்தின் வாயிலாக நடந்த வர்த்தகமும் குறைந்தது. ஆனால் இதனையும்விட, அரை நூற்றாண்டு காலத்துக்கு மேலாக இந்து சமுத்திரத்திலே சேவைகளுக்கும் மீள ஏற்றுதலுக்கும் சிறந்த ஒரு நிலையமாக இந்தத் துறைமுகம் பெற்றிருந்த புகழ் படிப்படியாகக் குறைந்தமையே இதற்குரிய முக்கிய காரணமானது. 1950 களிலிருந்து தொழிலாளர் பிரச்சினைகள் ஏற்பட்டதனால் துறைமுகத்தின் வினைத்திறன் குறையத் தொடங்கியது. இந்தக் காலத்துக்கு முன்னர், கொழும்புத் துறைமுகத்தில் இந்திய வமிசாவளியினரே பெரும் பாலும் தொழிலாளராகச் சேவை செய்தனர். இவர்கள் அமைய அடிப்படையிலே சேவை செய்தனர். இதனால் தொழிற் சங்கங்களை அமைத்துத் தமது நிலையைப் பலப்படுத் துவதற்கு இவர்களால் முடியவில்லை. ஆயின், சுதந்திரத்துக்குப் பின்னர் பெரும்பாலும் இலங்கையரே துறைமுகச் சேவையிற் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அத்துடன் அவர்கள் நிரந்தர அடிப்படையிலேயே சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இதனால் இவர்கள் தொழிற்சங்கங்கள் அமைத்துத் தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதன் பொருட்டு வேலை நிறுத்தம், மந்தகதியில் வேலை செய்யும் கொள்கை போன்ற நடவடிக்கைகளைக்

கைக்கொள்ள முனைந்தனர். இதனாற் சர்வதேசக் கப்பல்கள் கொழும்பு துறைமுகத்துக்கு ஆதரவளிக்கத் தயங்கின. இதனால் எரிபொருள், நீர், உணவுப் பொருகள் போன்றவற்றின் விற்பனை மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வருவாய் குறைந்தது. அத்துடன் மீள ஏற்றுதல் வேலைகளும் குறைந்தன. இவற்றுக்கு மாற்று மருந்தாக 1958 இல் துறைமுகம் தேசியமயமாக்கப்பட்டு அதனை நிருவாகஞ் செய்தற்பொருட்டுத் துறைமுகக் கப்பற் பொருள் கூட்டுத்தாபனம் அமைக்கப்பட்டது. ஆயின், இந்த நடவடிக்கைகள் மூலம் எதிர்பார்த்த பிரதிபலன்கள் கிடைக் கவில்லை. ஆரம்பத்திலே துறைமுக நிருவாகம் பற்றிய அறி வும் பயிர்சியுமில்லாத நிருவாகிகள் தொகையாக இருந் தமையினாலும், தொழிலாளருடனான தொடர்புக் குறையினா லும் துறைமுகத் தொழிலாளர் நிலைமை நன்மையான பக்கம் திரும்பவில்லை.ஆயினும் காலப்போக்கில் அனுபவத்துக்கேற்ப நிருவாகத்தில் முன்னேற்றம் காணப்பட்டது மாத்திரமன்றித் துறைமுகத் தொழிலாளரின் நலன் பற்றிப் பெரும் அக்கறை காட்டி அரசாங்கத்தினால் அவர்களுக்கு மாதாந்தச் சம்பளமும் பல்வேறு சலுகைகளும் வழங்கப்பட்டமையினால் அவர்களுடைய வினைத்திறனும் வேலையளவும் உயர்ந்தன. இதனால் 1970 களில் துறைமுக வேலைகள் மிகவும் திறமையாக நடைபெற்றன. 1964 இல் கப்பல்கள் சராசரி 10 நாட்களுக்குத் துறைமுத்திலே தங்கியிருந்தன. ஆனால் 1973 இல் இந்தக்கால எல்லை 4 நாட்களாகக் குறைந்தது. இதனைக் கொண்டு துறைமுக வேலைகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தை நாம் விளங்கிக்கொள் ளலாம். அத்துடன், கப்பற் சேவைகள் சம்பந்தமான வேலைகள் போலவே மீள ஏற்றுதல் வேலைகளிலும் 1970 . களில் முன்னேற்றம் காணப்பட்டது.

1975 ஆம் ஆண்டளவில் கொழும்புத் துறைமுகம் ஒரு புதிய யுகத்துட் பிரவேசித்தது. கப்பல், வர்த்தக வேலைகளைப் பொறுத்த மட்டிலே திருப்திகரமான வளர்ச்சி ஏற்பட்டதுடன், நிருவாக அமைப்பிலும், பௌதிகத் தோற்றத்திலும் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன. 1977 இன் பின்னர் பின்பற்றப்பட்ட தளர்ந்த வர்த்தகக் கொள்கை காரணமாகவும், செயற்படுத்தப் பட்ட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் காரணமாகவும் இந்நாட்டின் இறக்குமதித் திறனிற் பெரிய ஒரு மாற்றம்

ஏற்பட்டதினால் வர்த்தகத்தைப் பொறுத்தமட்டில் கொழும்புத் துறைமுகம் விரிவடைய ஆரம்பித்தது. கொழும்புத் துறை முகத்தின் வினைத்திறன் காரணமாக மீளக் கப்பலேற்றும் வேலைகளிலே துரித முன்னேற்றம் காணப்பட்டமை இதனை விடவும் முக்கியமான ஒரு விடயமாகும். எடுத்துக்காட்டாக 1970 இல் கப்பல்களுக்கிடையிலே 7,000 தொன் நிறையுடைய பொருள்கள் மாற்றப்பட்டன. இது 1979 இல் 14.000 தொன்னாகவும் 1982 இல் 1,83,000 தொன்னாகவும் 1985 இல் 7,72,000 தொன்னாகவும் உயர்ந்தது. இப்படியாக மீளக் கப்பலேற்றப்பட்ட பொருள்களின் பரிமாணம் துரிதமாக உயர்ந்தமைக்கு இரண்டு அடிப்படைக் காரணங்களுள. முதலாவது சிப்பங் கட்டுவது சம்பந்தமாக ஏற்பட்ட மாற்றம். இரண்டாவது காரணம், சிப்பங் கட்டுதல் மூலம் கொழும்புத் துறைமுகத்திடமிருந்து எதிர்பார்த்த சேவைகளைப் பூர்த்தி செய்யத்தக்க முறையில் இந்த வலயத்திலுள்ள ஏனைய துறை முகங்களை விட இலங்கைத் துறைமுகம் மேற்கொண்ட சில நடவடிக்கைகளாகும். சிப்பங் கட்டுதல் என்பது குறிப்பாகத் துறைமுகங்களிற் காணப்படும் நெருக்கடியைப் போக்கு வதற்கும் செயற்பாட்டுச் செலவைப் பெரிதும் குறைப்பதற்கும் வகுக்கப்படும் ஒரு நுணுக்க முறையாகும். துரிதமாக வளர்ந்துவருகின்ற கென்ரெய்னர் காவுகை முறையின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு இவ்வலயத்துத் துறைமுகங்களுள் கொழும்புத் துறைமுகத்திலேயே முதலா வதாக வசதிகள் செய்யப்பட்டன. 1981 இல் வகுக்கப்பட்ட பிரதான துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 300 மீற்றர் நீளமான கென்ரெய்னர்த் தளம் ஒன்று கட்டப்பட்டது. அவ்வாறே அதற்குத் தேவையான இயந்திர சாதனங்களும் அதிற் சேர்த்துக்கொள்ளப்பட்டன. ஆயினும், 1984 ஆம் ஆண்டளவில், சிப்பங்கட்டும் வேலைகள் துரித வேகத்தில் அபிவிருத்தியடைந்த மையினால், மேலே குறிப்பிடப்பட்ட கென்ரெய்னர் தளம் வருங்காலத் தேவைகளுக்குப் போதாதெனக் காணப்பட்டது. எனவே 300 மீற்றர் நீளமான மேலும் ஒரு தளம் சகல வசதிகளுடனும் 1987 மார்ச்சு மாதம் அமைக்கப்பட்டது.

துறைமுகத்தின் வினைத்திறனை அபிவிருத்தி செய்வ தற்கான மற்றுமொரு முன்னேற்ற நடவடிக்கையாக 1970

களின் இறுதியில் இலங்கை துறைமுக அதிகார சபை நிறுவப்பட்டது. துறை முகத்தின் நிருவாகத்தின் பொருட்டு ஒருங்கிணைந்த நிருவாக முறையொன்று வகுக்கப்பட்ட வேண்டியது அவசியமென 1960 களிலிருந்து அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட பல ஆணைக்குழுக்களால் எடுத்துக் காட்டப் பட்டது. இந்த ஆணைக்குழுக்களின் அறிக்கைகளில் துறை முகத்தின் சுமுகமான தொழிற்பாட்டுக்கும், பௌதிகத் திட்டத்தை விருத்தி செய்வதற்கும் குறுக்கீடாக இருந்த முக்கியமான காரணம், துறைமுகத்தை நிருவாகஞ் செய்வதற்கு மூன்று தாபனங்கள் இருந்தமையே எனச் சுட்டிக் காட்டப்பட்டது. துறைமுகக் கப்பற்பொருள் கூட்டுத்தாபனம், கொழும்பு துறைமுக ஆணைக்குழு, துறைமுகத் திட்டமிடற் பாதுகாப்புச் சேவைச் சபை ஆகிய மூன்று தாபனங்களுக்குமிடையில் ஒருங்கிணைப்பு இருக்கவில்லை. 1979 இல் நிறுவப்பட்ட இலங்கை துறைமுக அதிகாரசபை மூலம் இந்தக் குறைபாடும் நீக்கி வைக்கப்பட்டது.

## தேசிய கப்பற் சேவைகள்

இரண்டாவது உலக யுத்த காலத்தில் உலகக் கடல் மார்க்கப் போத்துவரத்துச் சாதனங்கள் ஒரு சில நாடுகளின் கட்டுப்பாட்டிலேயே இருந்தன. இது மாத்திரமல்லாது. பல்வேறு கடல் மார்க்கங்களிலே வர்த்தகக் கப்பற் சேவைகளை நடத்தி வந்த சர்வதேசக் கப்பற் கம்பனிகள், கட்டணப் போட்டிகளைத் தவிர்த்துக் கொள்ளும் நோக்குடன், ஒன்று சேர்ந்து சங்கங்களை அமைத்திருந்தன. இவற்றின் மூலம் பெற்றுக் கொண்ட ஏகபோக உரிமை காரணமாகக் கடல் மார்க்கப் போக்குவரத்துக் கட்டணங்களை இக்கப்பற் கம்பனிகள் தம் எண்ணப்படி உயர்த்தி வைத்திருந்தன. கப்பற் சங்கங்கள் சர்வதேசத் தன்மையைப் பெற்றிருந்தமையினால், இவற்றுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளும் வல்லமை உலக நாடுகளுக்கு இருக்கவில்லை.

கப்பற் கம்பனிகள் ஏகாதிபத்தியக் கொள்கை காரணமாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளைப் போலவே அபிவிருத்தியடைந்த நாடுகளும் பாதிக்கப்பட்டன. ஆயினும்

உலகச்சந்தையிற் குறைந்த விலையில் அடிப்படைப் பொருள்களை விற்பனை செய்த, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளே பெரிதும் பாதிக்கப்பட்டன. எனவே, உலகப் போரின் பின்னர், கப்பற் கம்பனிகளினுடைய பிடியிலிருந்து தப்பிப் பொருளாதார நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன், இலங்கையுட்பட அபிவிருத்தியடைந்து வரும் சில நாடுகளிலே தேசிய கப்பற் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதனால் ஏற்பட்ட மிக முக்கியமான பொருளாதார நன்மைகள் சில பின்வருமாறாகும் :

(அ) கப்பற் கட்டணத்தை உள்ளூர்ப் பணத்திற் செலுத் தலாம் என்பதனால், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் கொடுப்பனவு மீதிகளில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

(ஆ) புதிய முதலீட்டு முறையென்பதனாற் பல்வேறு தொழில் வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன.

(இ) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலே தொழி லாளர் சம்பளம் குறைவு என்பயனால் தேசிய சேவைகளுக்குரிய கப்பற் கட்டணம் குறைகின்றது.

(ஈ) தேசிய கப்பற் சேவைகள் மூலம் ஏற்படுகின்ற புதிய தொடர்புகள் காரணமாக நாட்டின் வெளி நாட்டு வர்த்தக நடவடிக்கைகளை விருத்தி செய்து கொள்ளும் வாய்ப்பு.

(உ) கப்பற் கம்பனிகளிலே அங்கத்துவம் பெற்று அவற்றின் நடவடிக்கைகளிலே செல்வாக்குச் செலுத்தும் வாய்ப்பு.

இவற்றைவிட, நாட்டின் அரசியற் சுதந்திரம், தேசிய பாதுகாப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்துவதும் கப்பற் சேவையின் மற்றுமொரு குறிக்கோளாகும்.

தேசிய வர்த்தகக் கப்பற் சேவைகள் மூலம் மேற் குறிக்கப்பட்ட நன்மைகளைப் பெற்றுப் கொள்ளலாம் என்பதனாலும், இலங்கை ஒரு தீவு என்பதனாலும், அதன் பொருளாதாரம் ஏற்றுமதியிறக்குமதியிற் பெரும்பாலும் தங்கியுள்ளது என்பதனாலும், சிறிய அளவிலாயினும் வர்த்தகக் கப்பற் சேவைகளைத்தாபிக்க வேண்டுமென 1950 இல் இலங்கைக்கு வந்த உலக வங்கிக் குழு சிபாரிசு செய்தது. அதற்கிணங்க அதன் பின்னர் அதிகாரத்துக்கு வந்த எல்லா அரசாங்கங்களும் கப்பற் சேவைகளை ஆரம்பிப்பதற்கு முக்கியத்துவமளித்தனவாயினும் 1971 ஆம் ஆண்டிலேயே இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் தாபிக்கப்பட்டது. அதன் பின்னர், சிலோன் சிப்பிங் லையின்ஸ் எனும் வர்த்தகக் கப்பற் சேவையும் இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தினால் ஆரம்பிக்கப்பட்டது. இப்படியாக ஆரம்பிக்கப்பட்ட இலங்கை தேசிய கப்பற் சேவை மிகவும் குறுகிய காலத்துள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது. அரசாங்கத்திடமிருந்து கிடைத்த பல்வேறு உதவிகளே இதற்குக் காரணம். அரசாங்கத்திடமிருந்து கிடைத்த நிதி உதவீ முதலாவதாகக் குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று. எடுத்துக்காட்டாக 1982 முதல் 1985 வரை மூலதனச் செலவுக்கென 571 மில்லியன் ரூபாயும், மூலதனத் தவணைக் கட்டணம், வட்டி ஆகியவற்றுக்கென 260 மில்லியன் ரூபாயும் திறைசேரியினால் வழங்கப்பட்டது. ஆயினும், இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் தாபிக்கப்பட்டதிலிருந்து அரசாங்கம் கடைப்பிடித்து வந்துள்ள பாதுகாப்புக் கொள்கையை இதன் முன்னேற்றத்துக்கு முக்கியமான காரணமாகும். இது இரு வழிகளிலே செய்படுத்தப்பட்டது. முதலாவது. அரசாங்கத் திணைக்களங்கள், சபைகள், கூட்டுத்தாபங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றினதும் அரசாங்கத் தொடர்புடைய பிற தாபனங்களினதும் ஏற்றுமதி இறக்குமதி வேலைகள் அனைத்தும் இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டுமெனும் விதி. இதனால் 1982 இல் பிரித்தானியாவுக்கான ஏற்றுமதியில் 95 வீதமும், ஐரோப்பாவுக்கும் தூர கிழக்குக்குமான ஏற்றுமதியில் 74 வீதமும் இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தினாற் கையாளப்பட்டன. அத்துடன், பிரதான இறக்குமதிப் பொருள்களான, மா, அரிசி, பசளை ஆகியனவும்

பல திட்டங்களுக்கு வேண்டிய அபிவிருத்தி மூலதனப் பொருள்களும் இக்கூட்டுத்தாபனத்தின் கப்பல்கள் மூலமே இறக்குமதி செய்யப்பட்டன.

இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு மேலாக 1973 இல் தாபிக்கப்பட்ட மத்திய கப்பற் சரக்குக் கூட்டுத்தாபனத்திடமிருந்து கிடைத்த ஆதரவும் முக்கியமாகும், கப்பலில் ஏற்றுவதற்குள்ள பொருள்களை ஒன்றுசேர்த்துக் கொழும்புத் துறைமுகத்துக்கு வரும் கப்பல்களில் அவற்றை ஏற்றி வைப்பதே இதன் முக்கியமான கடமையாகும்.

இப்படியாகப் பொருள்களை ஏற்றும்போது இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் கப்பல்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது. பிறநாட்டுக் கம்பனிகளுக்குரிய கப்பல்களைப் போலன்றி இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்துகுரிய கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்திலிருந்தே பிரயாணத்தை ஆரம்பிக்கின்றன என்பதனால் அவற்றிலே பெருந்தொகையான பொருள்களை மத்திய கப்பற் கூட்டுத்தாபனம் ஏற்றி வைக்கிறது. உதாரணமாக 1985 இல் இப்படியாக ஒவ்வொரு கப்பலிலும் ஏறக்குறைய 3,000 தொன் பொருள்கள் ஏற்றப்பட்டன.

உலகக் கப்பற் தொழில் அண்மைக் காலத்தில் எதிர்நோக்கியுள்ள இக்கட்டான நிலைமை காரணமாக அநேகமான நாடுகளின் தேசிய கப்பற் சேவைகள் நெருக்கடியான நிலையை அடைந்துள்ளனவாயினும், அரசாங்கத்திடமிருந்து கிடைத்த மேற்குறித்த உதவிகள் காரணமாக இலங்கை கப்பற் கூட்டுத்தாபனமானது போதிய இலாபமீட்டுகின்ற ஒரு தாபனமாக இயங்கி வருகின்றது. உதாரணமாக 1978 முதல் 1981 வரை இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் தேறிய இலாபமாக 1124 மில்லியன் ரூபாயைப் பெற்றுள்ளது. பிறநாட்டுச் செலாவணியைப் பெறுதற்குரிய ஒரு மார்க்கமாகவும் இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் போதிய சேவை ஆற்றியுள்ளது. 1972 இல் இக்கூட்டுத்தாபனத்தினால் 0.7 மில்லியன் ரூபாய் பிறநாட்டுச் செலாவணி மீதப்படுத்தப்பட்டது. இத்தொகை 1980 இல் 225 மில்லியனாகவும்1985இல் 403,38மில்லியனாகவு உயர்ந்தது. வேலை வாய்ப்பினைப் பொறுத்த மட்டிலும் பலர்

இத்தாபனத்தின் மூலம் தொழில் பெற்றுள்ளனர். இத்தாபனத்தில் 1980 இல் 834 பேர் நேரடியாகத் தொழில் புரிந்தனர். இத்தொகை 1984 இல் 1742 ஆக உயர்ந்தது. இவர்களைவிடப் பலர் மறைமுகமாக இக்கூட்டுத்தாபனத்தில் தொழில் புரிகின்றனர்.

கென்ரெய்னர் முறையை இந்நாட்டிலே பிரபலமடையச் செய்வதிலும் இக்கூட்டுத்தாபனம் பெரும் சேவையாற்றியுள்ளது. இலங்கைக் கப்பற் கூட்டுத்தாபனம் எட்டுக் கென்ரெய்னர் கப்பல்களைச் சேவையில் ஈடுபடுத்தியுள்ளது.

## விமானச் சேவை

இன்றைய உலகிலே போக்குவரத்துக்கும் பொருள்களை ஏற்றிச் செல்வதற்கும் ஆகாய விமானங்கள் மேலும் மேலும் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கும், நாட்டினுள்ளேயும் விரைவாகப் பிரயாணஞ் செய்வதற்கும் பொருள்களை ஏற்றிச் செல்வதற்கும் பயன்படுகின்ற ஆகாய விமானம் அபிவிருத்தி வேலைகளுக்கும் பேருதவியளிக்கின்றது.

இலங்கையில் முதலில் இருந்த தேசிய விமானச் சேவை ''எயர்சிலோன்'' எனப்பட்டது. அதனிடத்தில் 1979 இல் ':எயர் லங்கா'' எனும் பெயருடன் சர்வதேச விமானச் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. வேகமாகச் செல்லுகின்ற பெரிய விமானங்கள் வந்துபோவதற்கு வசதியாக 1970 களில் கொழும்பு சர்வதேச விமான நிலையம் (அதாவது கொழும்பிலிருந்து 32 கிலோமீற்றர் தூரத்திலுள்ள கட்டுநாயக் விமான நிலையம்) திருத்தியமைக்கப்பட்டது. இதனால் உல்லாசப் பிரயாணிகள், முயற்சியாளர், அரசாங்க அலுவலர் ஆகியோர் உட்பட இங்கு வந்த விமானப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. விமான நிலையங்களின் நிருவாகத்துக்கு வசதியாக 1979 இல், இலங்கை விமான நிலைய அதிகாரசபை எனும் பெயரில் ஒரு சபை உருவாக்கப்பட்டது. தேவையான போது சிற்சில கட்டுப்பாடுகளுக்கு அமையக் கொழும்பு விமான நிலையமும் (இரத்மலானை) யாழ்ப்பாண விமான நிலையமும்

(பலாலி) சர்வதேசச் சேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. உள்நாட்டுப் பிரயாணத்துக்கு அம்பாறை, மட்டக்களப்பு அனுராதபுரம் ஆகிய இடங்களிலுள்ள விமான நிலையங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் அவசரமான சந்தர்ப்பங் களிலே புத்தளம், கொக்கலை ஆகிய இடங்களிலுள்ள விமான நிலையங்களும் இறங்குவதற்குப் பயன்படுகின்றன.

சுதந்திர வர்த்தக வலையம் அமைக்கப்பட்டமையினால் விமான மூலம் ஏற்றிச் செல்லப்படும் பொருள்கள் அதிகரித்துள்ள ஏன. பாரமற்ற, விலை உயர்ந்த பொருள்களே சாதாரணமாக விமான மூலம் ஏற்றிச் செல்லப்படுகின்றன. தாமதமின்றி ஒப்படைக்கப்பட வேண்டிய மருந்து வகைகள், மரக்கறி, பழவகைகள் ஆகியனவும் விமான மூலமே அனுப்பி வைக்கப் படுகின்றன. அத்துடன், பிறநாட்டு விமானங்களுக்கு எரிபொருள், உணவுப் பொருள்கள் முதலியவற்றை வழங்குவதன் மூலமும், கட்டுநாயக்க விமான நிலையத்தின் அபிவிருத்திக்குத் தேவையான பிறநாட்டுச் செலாவணி சம்பாதிக்கப்படுகின்றது.

## செய்தித் தொடர்பு

அபிவிருத்திக்குச் சிறந்த செய்தித் தொடர்புமுறை அவசியம். காலநிலை பற்றிய முன் அறிவித்தல்களும் நவீன விவசாய தகவல்களும் விவசாயத்தினைச் சிறந்த முறையிலே மேற்கொள்வதற்கு உதவியாக அமையும். காலநிலை பற்றிய முன் அறிவித்தல் மீனவர்களுடைய பாதுகாப்புக்கு முக்கியமாகும். முயற்சியாளர் தமது வர்த்தகப் பொருள்களைக் காலநேரத்தில் சந்தைக்கு ஏற்ற முறையில் அனுப்பி வைப்பதற்கு விரைவாகச் செய்தியைப் பரிமாற்றிக் கொள்ளும் முறை முக்கியமாகும். நவீன கண்டுபிடிப்புகள் பற்றிய விஞ்ஞானத் தகவல்கள் திட்டமிடுவோருக்குச் சுலபமாகக் கிடைத்தல் வேண்டும். இவை எல்லாருக்கும் தபாற் சேவை, புதினப் பத்திரிகை, திரைப்படம், தந்தி, தொலைபேசி, ரூபவாஹினி, ரெலெக்ஸ் செய்தி போன்ற செய்தித் தொடர்புச் சேவைகள் ஆதாரமாகும். இவற்றை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வருதல் அபிவிருத்தி

வேலைகளுக்கு மிக முக்கியமான ஒரு முதல் நடவடிக்கையாகும். இலங்கையிற் சிறந்த தபாற் சேவை காணப்படுகின்றது. உள்ளூர் வெளியூர் தபால், தந்தி முதலியன இச்சேவையினாற் கையாளப்படுகின்றன. 1985 இல் 743 பிரதான தபாற்கந்தோர் களும் 3,200 உபதபாற் கந்தோர்களும் இலங்கையிற் காணப்பட்டன. இவற்றைவிட முகவர் தபாற் கந்தோர்கள் நிறுவப்பட்டமையும், அவை தபாற் சேவையில் மேன்மேலும் ஈடுபட்டு வருவதும் இத்துறையிலேற்பட்ட ஒரு புதிய திருப்ப மாகும்.

எமது நாட்டிற் சிறுவர், இளைஞர், பெண்கள் முதலிய பல பிரிவினரைக் குறித்து விளையாட்டு, கல்வி போன்ற பல துறைகளிலே சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பல புதினப் பத்திரிகைகளும், பிரசுரங்களும் வெளிவருகின்றன. முன்னிருந்து இயங்கிவந்த றொயிட்டர், பீ.ரீ.ஐ. (Press Trust of India) செய்தித் தாபனங்களுடன், இப்போது லங்கா புவத் எனும் செய்தித் தாபனமும் இயங்கி வருகின்றது. இப்படியாகப் பல வழிகளிலே விவரங்களைத் திரட்டி வெளியிடும் இப் பல்வேறு பிரசுரங்கள் மக்களுடைய அறிவைப் பேணி வளர்ப்பதற்குரிய நல்ல வழியாக அமை கின்றன. இவ்வாறு பல்வேறு புதினப் பத்திரிகைகள், பிரசுரங்கள் மூலம் மக்கள் தமது அறிவை வளர்ப்பதற்குள்ள வாய்ப்பு நாட்டின் சமூக வளர்ச்சிக்கு ஓர் ஊன்றுகோலாகும்.

திரைப்படம் இரசனைக்கும், அறிவு, உளப்பாங்கு ஆகியவற்றை வளர்ப்பதற்குமுரிய ஒரு செய்தித் தொடர்பு முறையாகும். சில வேளைகளில், குறிப்பாக மேனாட்டு ஆபாசமான திரைப்படங்கள் மூலம், சிறுவர் உள்ளம் திரிபடைவதனால் இதனால் தீய விளைவுகள் உண்டாவதாகப் பேசப்படுகின்றது. எனினும் சர்வதேசப் புகழ் பெறுமளவுக்கு இலங்கையின் திரைப்படக் கைத்தொழில் இப்போது முன்னேறியுள்ளது.

வானொலிச் சேவையும் முக்கியமான ஒரு செய்தித் தொடர்புச் சாதனமாகும். சுதந்திரம் பெறுவதற்கு முற்பட்ட காலம் முதல் இருந்து வந்த வானொலி காலத்துக்கு ஏற்ற முறையில் மாற்றமடைந்து வருகின்றது. இலங்கை வானொலிச் சேவையின் ஏகபோக உரிமை 1967 இல் நிறுவப்பட்ட இலங்கை வானொலிக் கூட்டுத்தாபனத்தைச் சார்ந்ததாகும். கொழும்பிலுள்ள பிரதான ஒலிபரப்பு நிலையத்தை விடப் பல பிரதேச நிலையங்கள் மூலமும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி வருகின்றது. உதாரணமாக அனுராதபுரம் (இராசரட்டைச் சேவை), மாத்தறை (ருகுணு சேவை), கண்டி (செங்கடகலைச் சேவை), மத்திய கீழக்குச் சேவை, மகாவலி மக்கள் வானொலிச் சேவை ஆகியவற்றைச் கூறலாம். அவசர செய்திகளை மக்களுக்கு அறிவிப்பதன் மூலமும் கல்வி கலாசார நிகழ்ச்சிகளை ஒலிப்ரப்புவதன் மூலமும் வானொலியானது அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு முக்கியமான ஒரு சேவையை ஆற்றி வருகின்றது. இக்கூட்டுத்தாபனமானது விசேடமாகப் பாடசாலை மாணவருடைய அறிவை வளர்ப்பதற்குரிய கல்வி நிகழ்ச்சிகளையும், நாட்டிலுள்ள பல்வேறு இன மக்கள் மத்தியில் ஒத்துழைப்பினை ஏற்படுத்தக்கூடிய சிங்கள், தமிழ் நிகழ்ச்சிகளையும் ஒலிபரப்பி வருகின்றது.

தற்போது இலங்கையில் மிகச் செல்வாக்குடைய செய்தித் தொடர்புச் சாதனமாக 1978 இல் ஆரம்பிக்கப்பட்ட தொலைக்காட்சிச் சேவை விளங்குகின்றது. இதில் முக்கியமாக ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தைக் குறிப்பிடலாம். ரூபவாஹினியின் நிகழ்ச்சிகளை நாட்டின் எந்தப் பகுதியில் இருக்கின்றவர்களும் கண்டுகளிக்கலாம், ஆனால் சுயாதீன தொலைக்காட்சியின் நிகழ்ச்சிகளைக் கொழும்பிலும் கொழும்பை சூழவுள்ள பகுதிகளிலும் உள்ள மக்கள் மாத்திரமே பார்க்கலாம். நாடு முழுவதையும் மாத்திரமல்லாமல் முழு உலகத்தையும் ஒன்றுபடுத்துகின்ற தொலைக்காட்சி காரணமாகப் பலதிறப்பட்ட விடயங்கள் பற்றி அறிந்து கொள்ளுவதுடன் பல காட்சிகளையும் மக்கள் கண்டு களிக்கின்றனர். மக்களுடைய பொது அறிவு, மொழித்திறன் ஆகியவற்றை அபிவித்தித் செய்வதற்கு உதவியாக இருக்கும் ரூபவாஹினியினால் தீய விளைவுகளும் உண்டாவதாகப் பேசிக் கொள்ளப்படுகின்றது. அபிவிருத்தி

வேலைகளைத் துரிதப்படுத்துவதற்குத் தாமதமின்றிச் செய்திகள் அறிவிக்கப்பட வேண்டியது அவசியமாகும். சுதந்திரம் கிடைத்த பின்னர் அதிகாரத்தைப் பெற்ற அரசாங்கங்கள் அனைத்தும் அவற்றின் புதிய அபிவிருத்தித் திட்டங்களிலே செய்தித் தொடர்புகளின் அபிவிருத்திக்குத் தவறாது முக்கியத்துவ மளித்துள்ளன. குறிப்பாகக் கடந்த சில ஆண்டுகளிலேற்பட்ட துரித அபிவிருத்தித் திட்டங்கள் காரணமாக இலங்கையின் தொலைபேசிக் சேவையைப் புனரமைப்புச் செய்து தரமுயர்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதற்காகத் தொலைத்தொடர்புத் திணைக்களம் 1989-93 இல் 24 மில்லியன் ரூபாய் செலவு செய்துள்ளது. இச்சேவையை வேண்டிய ளவுக்குத் தரமுயர்த்துவதற்கு இதனைப் போன்று இரு மடங்கு பணம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறே கடல் கடந்த நாடுகளுடனான தந்தித் தொடர்புகளிலும் அபிவிருத்தியைக் காணக்கூடியதாக இருக்கின்றது. 1984 ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது 1985 இல் ரெலெக்ஸ் அழைப்புகளின் எண்ணிக்கை 42% அதிகரித்துள்ளது. அதுபோலவே ரெலெக்ஸ் தொடர்பு நிலையங்களின் எண்ணிக்கையும் 1984 இல் 1,040 ஆக இருந்து 1985 இல் 1,235 ஆக அதிகரித்துள்ளது. பிற நாடுகளுடன் நாம் கொண்டுள்ள பிற செய்தித் தொடர்பு முறைகளாகத் தந்திச் சேவையையும் தொலைபன்னிச் சேவையையும் குறிப்பிடலாம்.

செய்தி பரிமாற்றத்திற் பயன்படுத்தப்படுகின்ற மிக முக்கிய மான சாதனமாகச் செய்மதியினைக் குறிப்பிடலாம். செய்திப் பரிமாற்றச் செய்மதி, வானிலைச் செய்மதி போன்ற பல்வேறு செய்மதிகள் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் விவரங்கள் அநேகமான நாடுகளிலே அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுகின்றன. இலங்கையும் செய்திச் செய்மதி மூலம், தூர நாடுகள் பற்றிய செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ளுகின்றது. அதுபோல், செய்மதி மூலம் வானிலை பற்றிய முன்னறிவித்தல்கள் முன்னரைவிட இப்போது திருத்த மாகக் கிடைகின்றன என்பதை நாம் அறிவோம். அப்படியான திருத்தமான முன்னறிவித்தல்கள் ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு மிகவும் முக்கியமென்பது மேலே எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

## சக்தி

பொருளாதார அபிவிருத்திக்குச் சக்தி மிகவும் முக்கியமான ஒரு காரணியாகும். கைத்தொழில்கள், போக்குவரத்துச் சேவைகள், வீட்டுப் பாவனைகள், வீதி வெளிச்சம் போன்ற பல்வேறு தேவைகளுக்குச் சக்தி அவசியம்.

பொதுவாக நோக்குமிடத்து, இலங்கையின் தனியாள் சக்தி நுகர்வு அதிரித்துக்கொண்டு வருகின்றது. 1985 ஆம் ஆண்டு இலங்கையின் மொத்தச் சக்தி நுகர்வு 6 மில்லியன் தொன் கனிப்பொருளிலிருந்து உற்பத்தி செய்யப்படும் சக்திக்குச் சமமாக இருக்கக் காணப்பட்டது.

ஒரு நாட்டின் அபிவிருத்தி மட்டம் உயர அதன் சக்தி நுகர்வும் உயரும். 1985 இல் இலங்கையின் சக்தித் தேவையில் 70% வர்த்தகம் சாராத சக்தித் தோற்றுவாய்கள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டது. விறகும் விவசாயக் கழிவுப் பொருள் களுமே இந்த வர்த்தகஞ் சாராத சக்தித் தோற்றுவாய்களாகும். இதன் பெரும் பகுதி விறகிலிருந்தே கிடைக்கின்றது. சக்தித் தேவையில் ஏறக்குடைய 30% வர்த்தகச் சக்தித் தோற்றுவாய்கள் மூலம் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. பெற்றோலியப் பொருள்களின் சக்தி, நீர் மின்வலு. வாயு வலு ஆகியன இவற்றிலடங்கும். வர்த்தகச் சக்தித் தோற்றுவாய்களுள் அரைப் பங்குக்கு மேல் பெற்றோலியப் பொருள்களாகும். தற்போது பெற்றோலியப் பொருள்கள் முன்னரைப் போன்று அதிகம் பயன்படுத்தப்படுவதில்லை. சக்தியை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படும் கனிப்பொருளெண்ணெயின் அளவு குறைந்து வருவதும், வீட்டுத்தேவைகளுக்குப் பெரும்பாலும் மின்சாரம், வாயு, விறகு போன்றன பயன்படுத்தப்படுவதுமே இதற்குரிய காரணமாகும். ஆயினும் தனியார்துறையிற் பிரயாணிகளின் போக்குவரத்து அதிகரித்து வருவதனால் டீசலின் பிரயோகம் அதிரித்துள்ளது.

மின்வலு உற்பத்தி இலங்கையில் 1895 இலேயே முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டது. கொழும்பில் வசித்த ஒரு சில பாவனையாளருக்கு மாத்திரமே அப்போது மின்சாரம் வழங்கப்பட்டது. இலங்கைக்குத் தேவையான மின்வலு, நீர் மின்வலு மூலமும் வெப்ப மின்வலு மூலமுமே பெற்றுக் கொள்ளப்படுகின்றது. எமது நாட்டில் உற்பத்தி செய்யப்படும் நீர் மின்வலு, வெப்ப மின்வலுவைவிட அதிகமாகும். எனவே, நீர் மின்வலு உற்பத்தியும் அதன் நுகர்வும் முன்னரைவிட அதிகரித்துள்ளமை ஒரு புதிய போக்கெனக் கூறலாம். பழைய இலச்சபான மின்வலு நிலையமே இந்த நாட்டில் முதலில் ஆரம்பிக்கப்பட்ட நீர் மின்வலு நிலையமாகும். 1950 இல் இதன் மூலம் 25 மெகவாட் மின்வலு உற்பத்தி செய்யப்பட்டது. இங்கினியாக்கலை, உடவளவை, விமலசுரேந்திர, பொல் பிட்டிய, புதிய இலச்சபான, உக்குவல ஆகிய மின்வலு நிலையங்கள் பின்னர் தோன்றியனவாகும். துரிதமாக உயர்ந்து வருகின்ற மின்வலுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கெனப் பல புதிய திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் விக்டோரியா, கொத்மலை, றண்தெனிக்கலை போன்றதிட்டங்கள் முதலிடம் பெறுகின்றன. இவற்றைவிட சமனல வாவி, கனியொன் இரண்டாம் கட்டம். போவத்தன்னை மின்வலு நிலையம் ஆகியனவுமுள.

1980 இல் 1479 கி. வா. நீர் மின்வலு உற்பத்தி செய்யப் பட்டது. இது 1985 இல் 2400 கி. வா. ஆக உயர்ந்தது. வர்த்தக, கைத்தொழில் தேவைகளுக்கான மின்வலுவினளவு அதிகரித்ததனால் உற்பத்தி உயர்த்தப்பட்டதே இதற்குரிய காரணமாகும். பாரிய கொழும்புப் பொளாதார ஆணைக்குழுவின் கீழ் நிறுவப்பட்டுள்ள முக்கியமான கைத்தொழில் வலயத்திலே சத்தியைப் பயன்படுத்தும் கைத்தொழில்கள் அமைக்கப்பட்டுள்ளமை காரணமாகவே மின்வலு தேவை இவ்வாறு உயர்ந்துள்ளது.

1965 இல் ஆரம்பிக்கப்பட்ட கிராமிய மின் திட்டம் மேலும் விசாலிக்கப்பட்டமை மின் உற்பத்தியிற் காணப்படும்

ஒரு புதிய போக்கெனக் கூறலாம். 1981 இன் இறுதியில் 1,300 கிராமிய மின் திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டன. இப்போது ஆண்டுக்கு ஏறக்குறைய 400 கிராமிய மின் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. அதாவது, இப்போது ஆண்டுக்கு 400 கிராமிய மின்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படுகின்றன.

வெப்ப மின்வலு களனிதிஸ்ஸ மின்வலு நிலயத்திலேயே உற்பத்தி செய்யப்படுகின்றது. அடுத்தது சபுகஸ்கந்தை டீசல் நிலையமாகும்.

பொதுவாக நோக்குமிடத்து, நீர் மின் வலுவின் பாவனை அதிகரித்து வருவதனால், பிறநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பெற்றோலியத்தில் தங்கியிருக்கும் நிலைமை குறைந்துள்ளது. இதனால் பிறநாட்டுச் செலாவணியின் சேமிப்பு அதிகரித்துள்ளதெனலாம். வர்த்தகச் சத்தியை உற்பத்தி செய்வதில் பெற்றோலியத்தின் பங்கு 1984 இல் 60 வீதமாக இருந்தது, இது 1985 இல் 55 வீதமாகக் குறைந்துள்ளது.

1970 களில் உண்டான கனிப்பொருள் எண்ணெ நெருக்கடியை அடுத்து உலகம் முழுவதும் தெளிவான இரண்டு திருப்பங்களைக் காணக்கூடியதாக இருந்தது. இலங்கையிலும் அவற்றை ஓரளவுக்குக் காணலாம் அவையாவன ; (1) தற்போது பயன்படுத்தப்படும் சத்தித் தோற்றுவாய்களைப் பாதுகாத்து அவற்றிலிருந்து உச்சப் பயனைப் பெறுதல். (2) பிற சத்தித் தோற்றுவாய்கள் பற்றி, குறிப்பாக, உயிரியல் வாயு, காற்றுச் சத்தி, சூரிய சத்தி போன்றுவிரையமாகாத மாற்றீட்டுச் சத்தித்தோற்றுவாய்களைப் பயன்படுத்துதல். எமது நாட்டில் வலு, மின்சத்தி அமைச்சின் அனுசரணையுடன் சத்தியைப் பயன்படுத்துகின்ற பல்வேறு துறைகளின் வினைத்திறனை விருத்தி செய்து சத்திப் பாதுகாப்புப் பற்றிக் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. இலங்கையிலே வீட்டுப் பாவனைக்குப் பயன்படுத்தப்படும் சத்தியைக் கட்டுப்பத்துவதன் மூலம் அதற்குரிய ஆரம்ப

நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. விறகைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் பொருட்டு விறகு குறைவாகத் தேவைப்படும் மட்பாண்டங்களை எல்லா மாவட்டங்களிலும் விநியோகஞ் செய்தல், குறைந்தளவு மண்ணெண்ணெயில் எரியக்கூடிய குப்பி விளக்குளைத் தயாரித்து அறிமுகஞ் செய்து வைத்தல் ஆகிய நடவடிக்கைகளை உதாரணங்களாகக் கூறலாம். எமது நாட்டிலே விறகு அதிகம் பயன்படுத்தப்படுவதனால், அதற்கு ஏற்றதாகக் காடுகளை வளர்த்தல் வேண்டும். இதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. உதாரணமாக, சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவர் நிலையம், ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகிய தாபனங்களின் உதவியைக் கொண்டு காடு வளர்ப்புத் திட்டத்தினை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. மேலும் சத்தியைப் பெற்றுக் கொள்ளுவதிலே, உயிரியல் வாயு, சூரிய வெப்பச் சத்தி ஆகியவற்றைப் பயன் படுத்துவதிலும், ஏனைய பல நாடுகளிற் போன்று எமது நாட்டிலும் கவனஞ் செலுத்தப்படுகின்றது.

## வீடமைப்பு

வீடு, மனிதனுடைய அடிப்படைத் தேவைகளுள் ஒன்று. வீடமைப்பு மூலம் ஒரு நாட்டின் சமூக, பொருளாதார அபிவிருத்தி ஊக்குவிக்கப்படுகின்றது.

அண்மைக் காலம் வரை இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களிலே வீடமைப்புக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப் படவில்லை. ஆகையினாலே, அண்மைக் காலம் வரை வீடமைப்புத் திட்டங்கள் சனத்தொகையின் வளர்ச்சி வேகத்துக்கு ஏற்றனவாக அமைந்திருக்கவில்லை. அது மாத்திரமன்று, வீடமைப்புக்கெனப் புறம்பான ஓர் அமைச்சு இருந்ததாயினும் 1970 கள் வரை அவ்வமைச்சுமே நகரப் புறங்களைச் சேர்ந்த மத்திய வகுப்பினருடைய வீட்டுப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதிலேயே அதிக கவனஞ் செலுத்தி வந்தது. இதற்காகப் பல வழிமுறைகள் கைக்கொள்ளப்பட்டன. உதாரணமாக அரசாங்கத்தினால் நகர்ப்புறங்களில் மாடி வீடுகள் அமைக்கப் பட்டன. அத்துடன் அரசாங்கத்திடமிருந்து கடன் வசதிகளைப் பெற்றுத் தனியார் துறையினரும் மாடி வீடுகளை அமைத்தனர். இவற்றை விட அரசாங்க அடமான வங்கி, தேசிய வீடமைப்புத்

திணைக்களம், அரசாங்க வங்கிகள் ஆகியன குறைந்த வட்டிக்கு வீடமைப்புக் கடன்களைத் தனிப்பட்டவர்களுக்கு வழங்கி வந்தன. ஆயினும் இந்த வசதிகளை ஒரு சிலரால் மாத்திரமே பெற்றுக்கொள்ள முடிந்தது.

1970 களின் இறுதியில் வீடமைப்புப் பிரச்சினை பற்றிய கொள்கையில் மாற்றம் ஏற்பட்டது. அதுவரை, பெரும்பாலும் மத்திய வகுப்பினருடைய வீடமைப்பு பிரச்சினை பற்றியே காட்டப்பட்டுவந்த அக்கறை குறைந்து, சகல பிரிவினரதும் வீடமைப்புத் தேவைகளைக் கவனத்திற் கொள்ளும் வகையிலே வீடமைப்புக் கொள்கை வகுக்கப்பட்டது. அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களிலே முன்னுரிமை பெறுகின்ற மூன்று துறைகளிலே வீடமைப்பும் நகர அபிவிருத்தியும் ஒன்று என்பதிலிருந்து இதற்கு எவ்வளவு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது என்பது புலனாகும். ஏனைய இரண்டும், துரித மகாவலித் திட்டமும் பாரிய கொழும்புப் பொருளாதார ஆணைக்குழுவுமாகும். வீடமைப்பும் நகர அபிவிருத்தியும் அரசாங்கத்தின் முக்கியமான திட்டங்களென்பதனால் இவை தொடர்பாக அரசாங்கம் பல புதிய கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளது. அதாவது அரசாங்கம், தேசிய வீடமைப்புச் சட்டதிட்டங்களை வகுக்கும் அதிகார சபையாகவும், வீடமைப்புக் கடன்களை வழங்குகின்ற ஒரு தாபனமாகவும், வீட்டுச் சொந்தக்காரனாகவும், சொத்துக்களை அபிவிருத்தி செய்யும் ஒரு தாபனமகைவும் பல கருமங்களை மேற்கொண்டு வருகின்றது. இக்கடமைகளைச் செவ்வனே செய்தற் பொருட்டுத் தேசிய விடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையும் நகர அபிவிருத்திச் சபையும் தாபிக்கப்பட்டமை மற்றுமொரு முக்கியமான நடவடிக்கையாகும். வீடமைப்புப் பிரச்சினையில் அரசாங்கம் நேரடியாக ஈடுபட்டுள்ளமையினாலும் அது அபிவிருத்தித் திட்டங்களிலே முக்கியமாய ஓர் அங்கமாகவுள்ளமையினாலும், 1977 ஆம் ஆண்டின் பின்னர், முன்னொருபோதும் காணப்படாதவாறு, வீடமைப்பு முதலீடு அதிகரிப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. எடுத்துக் காட்டாக, 1980 முதல் 83 வரையான காலப்பகுதியில் ஆண்டுக் குச் சராசரி 100 மில்லியன் ரூபாய் வரையில் வீடமைப்புக்குச்

செலவு செய்யப்பட்டது. இவ்வளவு பெருந்தொகையான பணத்தை ஆண்டுதோறும் வீடமைப்புக்காக ஒதுக்கியது மாத்திரமன்றிக் குறிக்கப்பட்ட ஒரு குறிக்கோளை நோக்கிற் கொண்டு வீடுகளை அமைக்கும் வேலைகளும் மெற்கொள்ளப் பட்டன.

இப்படியாக 1983 இல் இலங்கை ஓர் இலட்சம் வீடு எனும் இலக்கைத் தாண்டியது. இப்படியான குறிக்கோளை நோக்கிற் கொண்டு வீடுகளை அமைத்தற் பொருட்டுப் பல வழி முறைகள் கையாளப்பட்டன. நகரப் புறங்களிலே, குறைந்த வருமானம் பெறுவோருக்கு வீடு வசதிகளைச் செய்து கொடுப்பதிலே, சுய வீடமைப்பு முறைகளுக்கு ஊக்கமளிக்கப்பட்டது. இவை மத்துகமைப்பகுதியைச் சேர்ந்த கல்லெனிகந்த சுய வீடமைப்புத் திட்டத்திலேயே முதலில் ஆரம்பிக்கப்பட்டன. 1978 இல் ஆரம்பிக்கப்பட்ட மாதிரிக் கிராம முறை அல்லது கிராம எழுச்சி (கம்முதாவ) மூலம் வீடுகள், நீர் வழங்கள், சனசமூக நிலையங்கள், நூல் நிலையங்கள் முதலியன ஒழுங்கு செய்து கொடுக்கப்படுகின்றன. இக்கிராமங்கள் தவிர, அபிவிருத்தியடையாதிருந்த குடியேற்றங்களைப் புரைமைப்புச் செய்வதே கிராம எழுச்சித் திட்டத்தின் நோக்கமாகும். இன்னும், கிராமப் பகுதிகளிலே தேர்தல் தொகுதிகள் வாரியாக வீடுகள் வழங்கப்பட்டன. அதாவது, தேர்தற்றொகுதி வீடமைப்புத் திட்டங்கள் மூலம் வீடுகள் வழங்கப்படன. வீடமைப்பு அமைச்சைவிடப் பிற அமைச்சுக்களாலும் வீடுகள் கட்டித் கொடுக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக, கடற்றொழில் அமைச்சினால் மீனவர்களுக்கு வழங்கப்பட்ட வீடுகளும் மகாவலித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட் வீடுகளும்உதாரணங்களாகும். மேற்குறிப்பிடப்பட்ட நடவடிக்கை களின் பெறுபேறாக, 1971 இற்கும் 1981 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியிலே, வீடு கட்டும் வேகம் பெரிதும் அதிகரித்துள்ளது என்பதை 1981 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

1978 - 83 அனுபவத்தின்படி அரசாங்கத்தின் முன்னுரி மைக் கொள்கை போதியளவு மாற்றமடைந்துள்ளது. புதிய வீடுகளை அமைப்பதுடன், இருக்கின்ற வீடுகளைத் தரமு யர்த்துவது பற்றியும் வசதிகளைச் செய்வது பற்றியும் விசேட கவனஞ் செலுத்தப்படுகின்றது. 1984 இல் பத்து இலட்சம்

வீட்டுத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுக் கிராமப்புறம், நகரப்புறம் ஆகிய இரு பிரிவினதும் வீட்டுப் பிரச்சினை பற்றிக் கவனஞ் செலுத்தப்படுகின்றது. குறிப்பாக, நகரங்களிலே பெரும் பிரச்சினைக்குரிய சேரிகளினதும், குடிசைகளினதும் தரத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் போன்ற நகரங்களிலே சேரிகளிலும் குடிசைகளிலும் வசிக்கின்றவர்களுடைய வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் குறிக்கோளுடனேயே நகர அபிவிருத்திச் சபை செயற்பட்டு வருகின்றது. அதாவது, நகரங்களிலே சேரிகளிலும் குடிசைகளிலும் வசிக்கின்றவர்களை நகரங்களிலிருந்து அப்புறப் படுத்திவிடாது அவர்களுக்கு நல்ல வீடுகளை அமைத்துக் கொடுப்பதும், அவர்கள் இப்போது இருக்கின்ற வீடுகளைப் புனரமைப்புச் செய்து கொடுப்பதுமே புதிய வீடமைப்புக் கொள்கையாகும். புனரமைப்புச் செய்வதற்குப் பல வழிகளுண்டு. சேரிகளையும் குடிசைகளையும் குடியிருப்புக்கு ஏற்ற முறையில் திருத்தியமைக்கும்படி குடியிருப்பாளர்களுக்குப் புத்தி புகட்டுவது ஒரு வழி. மேலும், நகர அபிவிருத்தி அதிகார சபையின் நகர வீடமைப்புச் கொள்கையின்படி, கொழும்பிலும் அதன் சுற்றப் புறங்களிலும் தொண்டர் தாபனங்களின் உதவியைப் பெற்று 42 திட்டங்கள் செயற்படுதப்பட்டு வருகின்றன.

1977 இல் ஆரம்பிக்கப்பட்ட இலங்கையின் புதிய வீடமைப்புக் கொள்கை மிகவும் குறுகிய காலத்தினுள்ளே நல்ல பயனளித்துள்ளது. அதனால் அது உலகின் ஏனைய நாடுகளுக்கு ஓர் எடுத்துக்காட்டான திட்டமாகக் கணிக்கப் படுகின்றது. இத்திட்டத்தின் கர்த்தா, முன்னாள் சனாதிபதி ஆர். பிரேமதாச அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஐக்கிய நாடுகள் சபை 1987 ஆம் ஆண்டினைச் சர்வதேச வீடமைப்பு ஆண்டாகப் பிரகடனம் செய்திருந்தமையிலிருந்து இத்திட்டத்தின் முக்கியத்துவத்தை நாம் விளங்கிக் கொள்ளலாம்.

## நகர அபிவிருத்தி

12 மாநகர சபைகள் 39 நகரசபைகள், 83 பிரதேச சபைகளென 134 நகரப் பகுதிகள் இலங்கையில் காணப்படுகின்றன. 1981 இல் நகர்ப்புறச் சனத்தொகை 3192489 எனக் கணிக்கப்பட்டது. இது முழுச் சனத்தொகையில்

21.5 வீதமாகும். நகரமயமாதல் என்பது குறிக்கப்பட்ட ஒரு பகுதியில் மக்கள் ஒன்று சேர்வதைக் குறிக்கும். மக்கள் ஓரிடத்தில் செறிந்து வாழ்வதுடன் கைத்தொழிற்சாலைகளும் வர்த்தக நிலையங்களும் தோன்றுகின்றன. வேலை வாய்ப்புகள் பெருகுகின்றன. எனவே இந்த அபிவிருத்தி காரணமாக நிருவாக ஒழுங்குகளை வரையறுத்தல் அவசியமாகிறது.

நகர அபிவிருத்தியின் பொருட்டு 1978 இல் நரக அபிவிருத்தி அதிகாரசபை தாபிக்கப்பட்டமை முக்கியமான ஒரு நடவடிக்கையாகும். இது நகரப் பகுதிகளுக்கு வேண்டிய திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தி வருகின்றது. கொழும்பிலும் ஏனைய மாவட்டங்களிலும் தலைப்பட்டினங்களைத் திட்டமிடுதல், அவற்றை அபிவிருத்தித் செய்தல், நகரப் பகுதிகளிலுள்ள நகர சபைகள் அதிக வருமானத்தைப் பெற்றுக் கொள்ளும் வகையில் அவற்றுக்கு உதவி செய்தல், நிலத்தைச் சிறந்த முறையிற் பயன்படுத்தவதன் மூலம் மத்திய கொழும்பின் நெரிசற் பகுதிகளை மீண்டும் அபிவிருத்தி செய்தல், சேரிகள், குடிசைகள் பற்றிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் திட்டங்களை வகுத்தல் ; சதுப்பு நிலங்களை மீட்டல் ஆகியன இதனைச் சார்ந்த கடமைகளாகும். இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது நிலப் பயன்பாடும் சன அடர்த்தியும் கவனத்திற் கொள்ளப்படும்.

கொழும்பு நகரை அபிவிருத்தி செய்வதுடன் மாவட்டங்களிலே பிரதான நகரங்களைத் திட்டமிட்டு அபிவிருத் செய்யும் திட்டத்தின்படி கண்டி, அனுராதபுரம், நுவரெலியா பதுளை, குருணாகல் ஆகிய நகரங்களுக்கான திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. நகர அபிவிருத்திச் சபையின் திட்டத்தின்படி நகரங்களை அபிவிருத்தி செய்யும்போது, நிருவாகப் பன்முகி, வர்த்தக் பன்முகி, கைத்தொழில் திட்டம், ஒன்றிணைந்த அபிவிருத்தித் திட்டம், கல்வி, சமூக, கலாசாரப் பன்முகி, சேரிகளையும் குடிசைகளையும் தரமுயர்த்தும் திட்டம் ஆகியன பற்றிக் கவனஞ் செலுத்தப்படும். காணி வங்கியைத் தாபித்தலும், அங்கீகரிக்கப்பட்ட நகர ஆபிவிருத்தித் திட்டங்களில் முதலீடு செய்பவர்களுக்கு வரிச்சலுகை, மூலதனச் சலுகை ஆகியவற்றை ஒழுங்கு செய்து கொடுப்பதும் இச்சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது.

தேவையான அமிசங்கள் அனைத்தையும் கொண்ட புதிய நகரங்களையும் இச்சபை உருவாக்கி வருகின்றது. புதிய நகரங்களைத் திட்டமிட்டு அமைக்கும் திட்டத்தின் கீழ் ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே இப்போது அமைக்கப்பட்டு வருகின்றது.

## கல்வி

ஆங்கிலேயருடைய ஆட்சியின் கீழ், அவர்களுடைய பொருளாதார நிருவாகத் தேவைகளுக்கு ஏற்றதாகவே இந்நாட்டுக் கல்வி முறை வகுக்கப்பட்டிருந்தது. கலைத்துறையை மையமாகக் கொண்ட இக்கல்வி முறையிலே மொழிக்கும் மானிடவாதப் பாடங்களுக்குமே முக்கியத்துமளிக்கப்பட்டது. அப்போது, ஆங்கிலப் பாடசாலைகள் எனவும் சுயமொழிப் பாடசாலைகள் எனவும் இரு வகையான பாடசாலைகள் காணப்பட்டன. ஆங்கிலப் பாடாசாலைகளிலே கட்டணம் அறவிடப்பட்டமையினால், ஒரு சிலரால் மாத்திரமே ஆங்கிலக் கல்வியைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. 1931 இல் கொண்டு வரப்பட்ட டொனமூர் சீர்திருத்தங்களை அடுத்துச் சர்வசன வாக்குரிமை கிடைத்தமையினாலும், பொருளாதாரக் கொள்கையை வகுப்பதிலே வாக்குமூலம் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்குப் போதிய பொறுப்புக் கிடைத்தமையினாலும் குடியேற்றவாதக் கல்வி முறையிலே சிற்சில மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு வாய்ப்புக் கிடைத்தது. ஆங்கிலக் கல்வியைப் பெறும் வாய்ப்பினை எல்லோருக்கும் வழங்கும் நோக்குடன் அப்போது கல்வி அமைச்சராக இருந்த சீ. டபிள்யு. டபிள்யு. கன்னங்கர அவர்களாற் சமர்ப்பிக்கப்பட்ட இலவசக் கல்விச் சட்டம் 1945 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக்கழகம் வரை கல்வி இலவசமாக வழங்கப்பட வேண்டும் என்பதும், 1945 முதல் பாலர் வகுப்பிற் கல்வி சுயமொழியிற் போதிக்கப்பட வேண்டும் (இதன்படி மொழி மூலத்தினை ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாகச் சுயமொழியாக மாற்றுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன) என்பதும், 1945 முதல் மூன்றாம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் கட்டாயமாகக் கற்பிக்கப்பட வேண்டும் என்பதும் அச்சட்டத்தின் சிறப்பியல்புகளாகும்.

அப்போது உயர் பாடசாலைத் தராதரம் வரை ஆங்கிலத்திற் கல்வி கற்பிப்பதற்கெனச் சிற்சில மாவட்டங்களிலே அரசாங்கத்தினால் மத்திய கல்லூரிகள் நிறுவப்பட்டன. அப்போது இலவசமாக மதிய போசனம் வழங்கப்பட்டமையினாலும், பாடசாலைச் சுகாதார சேவைகள் காரணமாகவும் வறிய பிள்ளைகளும் பாடசாலைகளுக்குச் சென்றனர். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுள் இலங்கையிலே எழுத்தறிவுடையவர்களின் விகிதம் உயர்வாக இருப்பதற்கு இதுவே காரணமாகும்.

கல்வி இலவசமாக வழங்கப்பட்டமையினாலும் கல்விக்குரிய மொழி மூலம் மாற்றப்பட்டமையினாலும் 1960 களின் இறுதியிலிருந்து உயர் கல்வி பெறுவதற்கு விரும்பியவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது. ஆயின், ஒற்றை வதிவுப் பல்கலைக்கழக முறையின் கீழ் இவர்களுள் ஒரு சிலருக்கே உயர் கல்வி பெறும் வாய்ப்புக் கிடைத்தது

எனவே, உயர் கல்வி பெறும் வாய்ப்பினைப் பெருக்குதற் பொருட்டுப் பல்கலைக்கழகங்களை மேலும் அமைப்பதற்கு ஆலோசிக்கப்பட்டது. முதலாவது நடவடிக்கையாக 1958 இல் வித்தியோதய, வித்தியாலங்கார பிரிவெனாக்கள் பல்கலைக்கழகங்களாகத் தரமுயர்த்தப்பட்டன. இலவசக் கல்வி, தாய்மொழி மூலக் கல்வி ஆகியன காரணமாகப் பெரும்பாலானோர் இடைநிலைக் கல்வியினையும் பல்கலைக் கழகக் கல்வியினையும் பெற்றனராயினும் ஒரு சிலரே நாட்டுத் தேவைகளுக்கு ஏற்ற தொழிற்றகைமைகள் பெற்றனர். குடியேற்றவாத காலத்திற் போன்று சுதந்திரம் கிடைத்த பின்னரும் பொதுக் கல்வி முறை கலைத்துறையைச் சார்ந்து இருந்தமையே இதற்குக் காரணம். இதனால் இரண்டு விளைவுகள் ஏற்பட்டன. கலைத்துறைப் பாடங்களைக் கற்று வேலையற்றிருந்த இவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் உயர்ந்தது. அத்துடன் வேலைகிடைக்கப் பெற்றவர்களும் குறைந்த தொழில்களையே பெற்றனர். இந்த நிலைமையைப் போக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அபிவிருத்தி வேலைகளுக்கு ஏற்ற முறையிலும் இளஞ் சந்ததியினருடைய விரக்தியைக் குறைக்கக்கூடிய முறையிலும் கல்வி முறையை மாற்றியமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இரண்டு முக்கியமான கருத்துக்களை அடிப்

படையாக வைத்தே இந்த மாற்றத்தைக் கொண்டுவர வேண்டி இருந்தது. பொருத்தமுடைய கல்வி, பயனுடைய கல்வி என்பனவே அந்த இரு கருத்துக்களுமாகும். விதிமுறைக் கல்வி மூலம் ஒருவர் பெற்றுக் கொள்ளும் அறிவு ஓரளவுக்காயினும் அவருடைய நளாந்த வாழ்க்கைக்குப் பயனுடையதாக இருக்க வேண்டுமென்பதே இதன் நோக்கம். நாட்டின் அபிவிருத்திக்கும் இந்த மாற்றம் அவசியமெனக் காணப்பட்டது. இதனால் 1960 களில் தொழினுட்பக் கல்வி முக்கியத்துவம் பெற்றது, அத்துடன் தொழினுட்பக் கல்வித் தாபனங்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது.

இலவசக் கல்வியின் முழுப் பயனையும் பெறுவதற்குப் பாடசாலைப் பிள்ளைகளுக்குப் பாடநூல்களும் இலவசமாக வழங்கப்பட வேண்டுமென 1940 களிலே முன்னாள் சனாதிபதிகளுள் ஒருவரான திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன எடுத்துரைத்தார். இந்த ஆலோசனையைக் கைக்கொண்டு 1980 ஆம் ஆண்டிலிருந்து பாடநூல்கள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. இப்படியாக ஒவ்வொரு ஆண்டும் மாணவருக்குத் தேவையான நூல்களை இலவசமாக வழங்கும் திட்டம், இலவசக் கல்விக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் கல்வித் துறையிலே மேற்கொள்ளப்பட்ட மிகவும் முக்கியமான ஒரு நடவடிக்கையாகும். பாடநூல்களை எழுதி, அச்சிட்டு, விநியோகஞ் செய்வதற்கு அரசாங்கம் ஆண்டு தோறும் பெருந்தொகையான பணத்தைச் செலவு செய்து வருகின்றது. பாடநூல்களைக் பணங்கொடுத்து வாங்கமுடியாத பெற்றோருக்கு இது ஒரு வரப்பிரசாதமாகும். இதனால் இடையிற் பாடசாலையை விட்டு விலகும் மாணவர் தொகை குறைந்துள்ளதுடன் மாணவருடைய கல்வித் தரத்திலும் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

இலவசமாகக் கல்வியை வழங்குவது மாத்திரமன்றி முதலாம் ஆண்டிலிருந்து 11 ஆம் ஆண்டு வரை இலவசமாக நூல்களை வழங்குதல், மதிய போசனம் வழங்குதல், வசதியான வகுப்பறைகளை வழங்குதல் போன்றவற்றைக் கவனித்தற் பொருட்டு 1980 இல் கல்விச் சேவைகள் அமைச்சு தாபிக்கப்பட்டமை மற்றுமொரு முக்கியமான நடவடிக்கையாகும்.

நெடுங்காலமாக இருந்து வருகின்ற 5 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசிலுக்கு மேலாக அண்மைக் காலத்திலிருந்து

உயர் கல்விபெறும் வாய்ப்பினைப் பெற்ற மாணவர்களுக்குக் கைகொடுக்கும் நோக்குடன் பெருந் தொகையான மஹாபொலப் பரிசில்கள் இப்போது வழங்கப்படுகின்றன. பொருளாதார வசதிக் குறைவினால் தமது கல்வியை முடிப்பதற்குத் திண்டாடிய அநேகமான பல்கலைக்கழக மாணவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாகும்.

ஆரம்ப, இடைநிலைக் கல்வி முறைகளிற் போலவே பல்கலைக்கழகக் கல்வி முறையிலும் பல அடிப்படையான மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. இம் மாற்றங்கள் மூலம் உயர் கல்வி முறை பன்முகப்படுத்தப்பட்டமையினால், உயர் கல்வி விடயங்களைச் செவ்வனே கவனிப்பதன் பொருட்டு 1981 இல் உயர் கல்வி அமைச்சு தாபிக்கப்பட்டது. தொழிற்றுறை சார்ந்த கல்வியை வழங்கும் நோக்குடன், நிருவாகம், சட்டம், வனபரிபாலனம், கடற்றொழில், கணனி விஞ்ஞானம், விஞ்ஞான முகாமைத்துவம், புடைவைக் கைத்தொழில் முதலிய பல கற்கை நெறிகள் பல்கலைக்கழகங்களிலே ஆரம்பிக்கப்பட்டன. பட்ட மேற்படிப்பை இந்நாட்டிலேயே மேற்கொள்ள வசதியளித்தற் பொருட்டுப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்த பல தாபனங்கள் உருவாக்கப்பட்டன. இப்படியாகப் பல்கலைக்கழகக் கல்வியை வழங்குவதற்கு ஆரம்பிக்கப்பட்ட புதிய ஒரு தாபனமாகத் திறந்த பல்கலைக்கழத்தினைக் கூறலாம். பாடசாலையை இடையில் விட்டு விலகியவர்களுக்கும் பல்கலைக்கழக அனுமதி பெறும் வாய்ப்புக் கிட்டாத வளர்ந்தவர்களுக்கும் தொடர்ந்து கற்கும் வாய்ப்பினை வழங்குவதே இதன் குறிக்கோளாகும். இவ்வாறே, உயர் கல்வி அமைச்சின் கீழ் 23 தொழினுட்பக் கல்லூரிகளும் இணைக்கப்பட்ட 4 தொழில் அலகுகளும் தாபிக்கப்பட்டுள்ளன. இத்தாபனங்கள் தொழினுட்பவியலாளருடைய தொழினுணுக்க அறிவு, வினைத்திறன் ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதற்கான பயிற்சி நெறிகளை நடாத்தி வருகின்றன. இவை சுயதொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொடுக்கும் தாபனங்களாகவும் திகழுகின்றன.

இன்னும், வேலை செய்வோர், வளர்ந்தோர், ஆகியோருடைய அறிவு, ஆற்றல், உளப்பாங்கு ஆகியவற்றை வளர்ப்பதன்

பொருட்டு அரசாங்கத் திணைக்களங்கள், சபைகள், கூட்டுத்தா பனங்கள் ஆகியனவும் தனியார் துறையைச் சார்ந்த பல்வேறு தாபனங்களும் தொழினுட்ப, தொழிற்றுறை, குடியியற் கல்வி சம்பந்தமான திட்டங்களை மேற்கொண்டு நடத்தி வருவது ஒரு புதிய திருப்பமாகும். இத் தாபனங்களுக்கு உரிய உதாரணங்களாக இளைஞர் சேவை மன்றம், தேசிய தொழில் பயிலுநர் சபை, தேசிய கல்வி நிலையம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

## சுகாதாரச் சேவைகள்

இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் தெட்டத் தெளிவாகத் தோன்றுகின்ற ஒரு திருப்பம் யாதெனின் சுகாதாரச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டதனால் ஏற்பட்டுள்ள நன்மைகளாகும். சுகாதாரச் சேவைகள் உலகு எங்கும் முன்னேற்றமடைந்துள்ள னவாயினும், இலங்கையிலே அது மிகவும் தெளிவாகக் காணப்படுகின்ற ஒரு முன்னேற்றமாகும். 9.2 ஆம் அட்டவணை யிற் காட்டப்பட்டுள்ளவாறு, சிசு மரண வீதம், பிறப்பின் போது எதிர்பார்க்கப்படும் ஆயுட் காலம், இறப்பு வீதம் முதலியன சம்பந்தமான தரவுகளின் மூலம் சுகாதாரச் சேவையின் இந்த முன்னேற்றம் தெளிவாகத் தோன்றுகின்றது.

| ஆண்டு | சிசுமரண வீதம் 1000 பிறப்புக்கு | ஆயுட்கால எதிர் பார்ப்பு வயது | இறப்பு வீதம் 1000 துக்கு |
|---|---|---|---|
| 1945 | 139.7 | 42.3(1946) | 21.9 |
| 1955 | 71.5 | 58.2(1953) | 10.2 |
| 1965 | 53.2 | 64.4 | 8.2 |
| 1975 | 45.1 | 45.0 | 6.2 |
| 1980 | 34.4 | 68.1(1970) | 6.2 |
| 1988 | 19.4 | 72.4(1991) | 5.8 |

9.2 ஆம் அட்டவணை


இலங்கையிற் சிசுமரண வீதமும் ஆயுட்கால எதிர்பார்ப்பும் இறப்பு வீதமும்

எல்லா மக்களுக்கும் உயர்ந்த சுகாதார வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதே இப்போது எமது நாட்டின் சுகாதாரச் கொள்கையாகும். இந்தப் பணியில் மகளிர் விவகார போதனா வைத்தியசாலை அமைச்சு, சுகாதார அமைச்சு, ஆயுள்வேத வைத்திய அமைச்சு ஆகிய மூன்று அமைச்சுக்களும் ஈடுபட்டுள் ளன. 1985 இல் மத்திய வங்கி வெளியிட்ட தரவுகளின்படி, மொத்த தேசிய உற்பத்தியில் 1.4 வீதம் சுகாதாரச் சேவைக ளுக்காகச் செலவிடப்படுகின்றது.

வைத்தியசாலைகளிலே நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதற்குப் போலவே நோய்களைப் பரவவிடாது தடுப்பதற்கும் பெருந்தொகையான பணம் செலவிடப்படுகின்றது. உலக சுகாதாரத் தாபனத்தினால் ஆரம்பிக்கப்பட்ட நோய் தடுப்புத் திட்டத்தின் உதவியையும் பெற்று, சுகாதார அமைச்சு நோய் தடுப்புக் கொள்கையை நடைமுறைப்படுத்தி வருகின்றது. ஒரு குழந்தை பிறந்து 24 மணித்தியாலங்களுக்குள் கொடுக்கப்படும் காசநோய் தடுப்பு மருந்தான பீ.சி.ஜி. ஊசி மருந்துடன் ஆரம்பித்த இந்த நோய் தடுப்பு முறை சிசுப் பருவத்து முக்கூட்டு ஊசி மருந்து, ஏற்ப்புவலி தடுப்பு ஊசி மருந்து ஆகியனவாக பலவகைப்படும். இம்முறைகளைப் பின்பற்றுமாறு பொதுமக்களைத் தூண்டுவதன் பொருட்டு அரசாங்கம் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மேலும். நாட்டுக்குத் தேவையான வைத்தியர்களைப் பெற்றுக் கொள்ளுதற் பொருட்டு, அரசாங்க வைத்தியக் கல்லூரியுடன் இறாகமையிலுள்ள தனியார் வைத்தியக் கல்லூரிக்கும் அரசாங்கம் ஆதரவு வழங்கியுள்ளது. பேராதனை, ஸ்ரீ ஜயவர்த்தனபுரம், காலி போன்ற இடங்களில் அமைக்கப்பட்டுள்ள நவீன வைத்தியசாலகள் மூலம் சுகாதாரச் சேவை புத்துயிர் பெற்றுள்ளது. சுதந்திரத்துக்கு முன்னர் அவ்வளவு முக்கியமான ஓர் இடத்தைப் பெற்றிருக்கவில்லை எனினும் சுதந்திரம் கிடைத்த பின்னர் ஆயுள்வேத வைத்திய முறையும் புத்துயிர் பெற்றுள்ளது.

அது மாத்திரமன்றி, ஆயுள்வேதக் கல்வியை ஊக்குவித்தற் பொருட்டுக் கம்பஹ ஆயுள்வேதக் கல்லூரி தரமுயர்த்தப் பட்டமை இராசகிரிய ஆயுள்வேதக் கல்லூரி பல்கலைக் கழகத்துடன் இணைந்த ஒரு தாபனமாகத் தரமுயர்த்தப்பட்டமை போன்ற பல்வேறு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்

பட்டுள்ளன. மேலும் சுதந்திரம் கிடைத்த பின்னர் வளர்ச்சி அடைய ஆரம்பித்த இந்தப் போக்கை ஒழுங்கு செய்வதற்காகவே 1980 இல் சுதேச வைத்திய அமைச்சு உருவாக்கப்பட்டது. சுதேச வைத்திய அமைச்சின் சேவைகள் துரிதமாக வளர்ந்து வருகின்றமை ஒரு புதிய திருப்பமாகும். சுதேச வைத்திய முறையை அபிவிருத்தி செய்வதன் பொருட்டு அரசாங்கம் ஆயுள்வேத வைத்தியசாலைகளின் எண்ணிக்கையை 19 ஆகவும் சுதேச வைத்திய சிகிச்சை வழங்கும் டிஸ்பென்சரிகளின் எண்ணிக்கையை 21 ஆகவும் (1985 மதிப்பீடு) உயர்த்தியுள்ளது. இவற்றைவிடப் பல ஆயுள்வேத டிஸபென்சரிகள் நாடு எங்கிலும் திறக்கப்பட்டுள்ளன. மருந்துச் செடிகளை வளர்த்தல், சுதேச வைத்திய ஆய்வுகளை மேற்கொள்ளல் முதலியவற்றுலும் அரசாங்கம் கவனஞ் செலுத்தி வருகின்றது. இவற்றுக்கு உலக சுகாதாரத் தாபனத்தினதும் ஐக்கிய நாடுகள் சபையினதும் உதவிகள் இலங்கைக்குக் கிடைக்கின்றன. இப்படியாக, சுதந்திரம் கிடைத்த பின்னர் மேல்நாட்டு வைத்திய முறையிலும் சுதேச வைத்திய முறையிலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் காரணமாக மக்கள் ஆரோக்கியமுள்ளவர்களாகந் திகழ்வார்கள் என்பதும் அது நாட்டின் அபிவிருத்திக்கு உறுதுணையாகும் என்பதும் உறுதி.



பத்தாம் அத்தியாயம்

# மனித உரிமைகளைப் பாதுகாத்தல்

எல்லாச் சமூகத்தவர்களும் எல்லா நாட்டினத்தவர்களும் கடைப்பிடிக்கக்கூடியதாகவே மனித உரிமைகள் பற்றிய உலகப் பிரகடனத்தைப் ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ளது. மனித உரிமைகளுக்கும், சுதந்திரத்துக்கும் மதிப்பளிக்கும் முகமாக நாம் ஒவ்வொருவரும் (ஒவ்வொரு சமூகத் தாபனமும்) இந்தப் பிரகடனத்தினை எப்பொழுதும் மனதில் வைத்துக் கற்போம். கற்பிப்போம் என்பது ஐக்கிய நாடுகள் சபையின் நம்பிக்கை. மேலும், அங்கத்துவ நாடுகளில் வசிக்கும் மக்கள் இந்த உரிமைகள் யாவை என்று அறிந்து, அவற்றுக்கேற்பச் செயற்படுவார்கள் என்றும் ஐக்கிய நாடுகள் சபை எதிர்பார்க்கின்றது.

பிரகடனத்தின் முதல் மூன்று வாசகங்களும் உலகப் பிரகடனத்துக்குரிய ஒரு முன்னுரையாக அமைந்துள்ளன வெனினும், அவற்றிலடங்கியுள்ள உன்னதமான கருத்துக்கள் பிரகடனம் முழுவதிலும் ஒளிர்வதை நாம் காணலாம்.

## 1 ஆம் வாசகம்

மனிதர் யாவரும் மதிப்பிலும், உரிமையிலும் சமமாகவும் சுதந்திரமாகவும் பிறந்துள்ளனர், அவர்கள் ஆய்வுத் திறனுடனும் மனச்சாட்சியின் படியும் சகோதர மனப்பான்மையுடனும் நடந்து கொள்ள வேண்டும்.

## 2 ஆம் வாசகம்

இனம், நிறம், மதம், மொழி, பால், அரசியல் அல்லது பிற நம்பிக்கை, நாட்டினம் அல்லது சமூகம், பிறப்பு அல்லது அந்தஸ்வது, சொத்து என்பன பற்றிய எந்த வேறுபாடுமின்றி இப்பிரகடனத்திற் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா உரிமைகளையும் சுதந்திரங்களையும் பெறுவதற்கு எல்லோரும் தகுதியுடையோராவர்.

மேலும், ஒருவருடைய நாடு அல்லது பிரதேசம், இறைமை உடைய ஒன்றாக அல்லது புரப்பகமாக, அல்லது சுதந்திரமற்ற அல்லது சிற்சில எல்லைகளுக்குட்பட்ட சுதந்திரமுடைய ஒன்றாக இருப்பினும் அதன் அரசியல் அல்லது ஆதிக்க அல்லது சர்வதேச அந்தஸ்துக் குறித்து அவருக்கு வேறுபாடு காட்டலாகாது.

## 3 ஆம் வாசகம்

வாழ்வு, சுதந்திரம், தற்பாதுகாப்பு ஆகியவற்றுக்கு ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.

முழுமையாக நோக்குமிடத்து அகில உலகப் பிரகடனத்திலே இடம் பெற்றுள்ள வாசகங்களை முக்கியமான நான்கு பிரிவுகளாக வகுக்கலாம். அவையாவன ;

## (அ) பொது, அடிப்படை உரிமைகள்

மேற்கொண்ட முதல் மூன்று வாசகங்களிலும் கூறப்பட்டுள்ள விடயங்கள், பிரகடனத்தில் இடம் பெற்றுள்ள எல்லா உரிமைகளுக்கும் பொதுவாகும். இங்கே வாழ்வு, சுதந்திரம், தற்பாதுகாப்பு ஆகியனவற்றுக்கான உரிமைகளே அடிப்படை உரிமைகளாகக் கருதப்படுகின்றன.

## (ஆ) சிவில், அரசியல் உரிமைகள்

ஒவ்வொருவரும் பெற்றுக் கொள்ளவேண்டிய சிவில் அரசியல் உரிமைகள் சில கீழ்க் கொடுக்கப்பட்டுள்ளன. எவரையும் அடிமைப்படுத்தி வைத்திருக்கக் கூடாது; ஒருவரைச் சித்திரவதைப்படுத்தலாகாது; கொடூரமான, மனிதத் தன்மையற்ற இழிந்த முறையில் நடத்தலாகாது; தகுந்த விசாரணை இன்றிச் சிறைப்பிடிக்கவேனும் சிறைவைக்கவேனும் நாடு கடத்தவேனும் கூடாது. குற்றஞ் செய்யப்பட்ட காலத்தின் பின்னர் கொண்டுவரப்பட்ட தண்டனையை ஒருவருக்கு வழங்கலாகாது. ஒருவ

ருடைய குடும்ப விடயத்தில் அல்லது வீட்டு விடயத்தில் அல்லது பத்திரங்களில் எதேச்சையான முறையிலே தலையிடுதலாகாது. மேலும் நாட்டின் எல்லைக்கு உள்ளேயும் நாட்டுக்கு நாடேனும் போய்வருவதற்கும் குடியுரிமை பெறுவதற்கும் குடியுரிமையை மாற்றுவதற்கும் ஒருவருக்கு உரிமையுண்டு. இன்னும் தனியாகவேனும் பிறருடன் சேர்ந்து கூட்டாகவேனும் சொத்துக்களை வைத்திருக்கவும் ஒருவருக்கு உரிமையுண்டு.

சிந்தனை, மனச்சாட்சி, மதம் ஆகிய பற்றிய சுதந்திரத்துக்கும்; அபிப்பிராய சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் ஆகியவற்றுக்கும் ; அமைதியான முறையிற் கூட்டங் கூட்டுவதற்கும் எல்லோருக்கும் உரிமையுண்டு.

## (இ) பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள்

ஒவ்வொருவருக்கும் சமூக நலனிற் பங்குபற்றும் உரிமையுண்டு. தொழில் செய்யவும் விரும்பிய தொழிலைத் தேர்ந்தெடுக்கவும், சம வேலைக்குக் சம சம்பளம் பெறும் உரிமையும், தமது நலன்களைப் பாதுகாத்தற் பொருட்டுத் தொழிற்சங்கங்களிற்சேரும் உரிமைகளும் எல்லோருக்கும் உண்டு. குறைந்த பட்சம், ஆரம்பக்கல்வியைப் பெறும் உரிமை எல்லோருக்கும் உண்டு. ஆரம்பநிலைகளிம் இலவசமாகக் கல்வியைப் பெற்றுகொள்ளும் உரிமை எல்லோருக்கும் உண்டு. இக்கல்வி கட்டாயக் கல்வியாக இருத்தல் வேண்டும். பரிபூரண ஆளுமை வளர்ச்சி, மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரம் ஆகியவற்றுக்குள்ள மதிப்பை வலுப்படுத்தும் வகையிலே கல்வி அமைதல் வேண்டும். எல்லாத் தேசிய இனத்தவர்களுக்கும். இனங்களுக்கும் மதங்களுக்குமிடையில் விளக்கம், பரஸ்பரச் சகிப்புத்தன்மை, நட்பு ஆகிவற்றை வளர்த்த வேண்டும். இத்துடன் அமைதியைப் பேணுதற் பொருட்டு ஐக்கிய நாடுகள் தாபனம் மேற்கொள்ளும் சகல பணிகளையும் கொண்டு நடத்துவதற்குக் கல்வி அனுகூலமாக இருக்க வேண்டும்.

## (ஈ) உரிமைகளையும் சுதந்திரத்தையும் அனுபவிக்கும் முறை

ஒவ்வொருவரும் தமது சமூகத்துக்கு ஆற்றவேண்டிய கடமைகளுள. ஒவ்வொரு மனிதனதும் ஆளுமையின் சுதந்திரமான, பரிபூரண வளர்ச்சி சமுதாயத்திலேயே ஏற்படும்.

ஒவ்வொருவரும் தமது சுதந்திரத்தினையும் உரிமைகளையும் அனுபவிக்கும்போது இரண்டு எல்லைகளுக்குக் கட்டுப்பட்டு ஒழுகுதல்வேண்டும். அவையாவன.

1. மற்றவர்களுடைய சுதந்திரத்தையும் உரிமைகளையும் பாதுகாத்தற் பொருட்டுச் சட்டத்தினால் விதிக்கப்பட்டுள்ள எல்லைகளைக் கடைப்பிடித்தல்.

2. சமாதானம், சமூக நலன் ஆகியன சம்பந்தமான தேவைகளைப் பூர்த்திசெய்தற் பொருட்டுச் சட்டத்தினால் விதிக்கப்பட்டுள்ள எல்லைகளுக்குக் கட்டுப்படுதல்.

உலகப் பிரகடனத்தினை முன்வைத்ததுடன் நின்று விடாது, ஐக்கிய நாடுகள் தாபனம், அந்தப் பிரகடனத்தில் இடம் பெற்றுள்ள மனித உரிமைகளைச் சர்வதேச சட்டத்தின் கீழ்ச் செயற்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுத்துள்ளது. பிரகடனத்தை ஏற்றுக்கொள்ளும் அரசாங்கங்கள் கைச்சாத்திடுவதற்கென ஒப்பந்தங்களையும் சம்மதங்களையும் வகுத்துள்ளது. இவற்றுள் சிவில், அரசியல் உரிமைகள் சம்பந்தமான சர்வதேச ஒப்பந்தமும் பொருளாதாரம், சமூகம், கலாசாரம் ஆகியன சம்பந்தமான சர்வதேச ஒப்பந்தமும் முக்கியமானவையாகும். இந்த ஒப்பந்தங்களிற் கைச்சாத்திட்டுள்ள சகல நாடுகளும் ஒப்பந்தங்களிற் கூறப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு ஏற்ப சட்டங்களை இயற்றுவதற்கும் அவற்றின்படி பிணக்குகளைத் தீர்த்துக் கொள்ளவும் கட்டுப்பட்டுள்ளன. ஐக்கிய நாடுகளின் குறிக்கோள்களுக்கும் கொள்கைகளுக்கும் மாறான முறையில் மனித உரிமைகளையும்

சுதந்திரத்தினையும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் மீறுதலாகாது. மனித உரிமைகள் பற்றிய உலகப் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு விடயத்தைக் கொண்டும் எந்த ஒரு அரசாங்கத்துக்கேனும், குழுவுக்கேனும், தனிப்பட்ட மனிதனுக்கேனும் பிரகடனத்தில் இடம் பெற்றுள்ள உரிமைகளையும் சுதந்திரத்தினையும் அழித்துவிட எந்தவிதமான உரிமையும் கிடையாது.

இலங்கையிலே இந்த மனித உரிமைகளைச் செயற்படுத்துவதற்குப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவை பற்றி 9 ஆம் ஆண்டு சமூகக் கல்வி நூலில் நீங்கள் படித்திருப்பீர்கள்.

இலங்கையின் இனப்பிரச்சினை காரணமாக, மனித உரிமைகள் பற்றிய உலகப் பிரகடனத்தில் முன்னொருபோதும் இல்லாதளவுக்கு இப்போது கவனஞ் செலுத்தப்பட்டு வருகின்றது.